Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு+IV
விலை: ரூபா 8.00




நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 10 ஹிஜ்ரி 1428 துல்கதா 22 (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ் 86

# யாழ்.கோட்டையில் படையினரால் பெண் உட்பட ஐவர் படுகொலை!

யாழ்ப்பாணம்

யாழ்.நகரில் - கோட்டை முனியப்பர் கோயில் பகுதியில் நேற்று மாலை சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் சுடப்பட்டதை அடுத்து -

இராணுவத்தினர் நடத்திய கண் மூடித்தனமான தாக்குதலில் பெண் ஒருவர் உட்பட ஐந்து பேர் கொல்லப் பட்டனர்.


நேற்றுமாலை 6.10 மணியள வில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து - யாழ்.நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

யாழ். கோட்டைப் பகுதியில் நேற்று மாலை 6.10 மணியளவில் 512 ஆவது பிரிகேட்டில் பணியாற்றும் மேஜர் தர இரா ணுவ அதிகாரி மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இதையடுத்து - சுமார் 10 நிமிடங்களுக் கும் மேலாக அந்தப் பகுதியில் தொடர்ச்சி யாக வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து தாம் மேற் கொண்ட பதில் தாக்குதலில் பெண் ஒருவர் உட்பட ஐந்துபேர் உயிரிழந் ததாகவும், இவர்களின் சடலங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜோசப் பரராஜசிங்கம் அதிகாலை சுட்டுக்கொலை!



மட்டக்களப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசி யப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இன்று அதிகாலை கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனையில் ஈடு பட்டிருந்தபோது - தேவாலயத்துக்குள் வைத்து ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல் லப்பட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## இருபாலையில் தாக்குதல்; சிப்பாய் ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம்

இருபாலையில் உள்ள இராணுவ முகாம் மீது நேற்று மாலை நடத்தப்பட்ட கிரனேட் தாக்கு தலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாய மடைந்ததாக இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

நேற்றுமாலை 5.15 மணியளவில் ரோந்து நடவடிக்கையை முடித்துக்கொண்டு முகாமுக் குத் திரும்பிய படையினர்மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் காவலரணில் இருந்த சிப்பாய் ஒருவர் படுகாயமுற்ற நிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## தனங்களப்பில் 2 படையினர் காயம்

யாழ்ப்பாணம்

## அப்பாவிகளே படுகொலை; மக்கள் படை அறிக்கை!

யாழ்ப்பாணம்

யாழ்.நகரில் நேற்று மாலை இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்ட ஐந்து பேரும் அப்பாவிகள் என்றும் - பொங்கி யெழும் மக்கள் படையைச் சேர்ந்தவர் கள் கொல்லப்பட்டதாக படைத்தரப்பு கூறு வது அப்பட்டமான பொய் என்றும் பொங்கியெழும் மக்கள் படை நேற்றிரவு வெளியிட்ட அறிக்கை யில் கூறப் பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் - யாழ்.நகரில் இராணுவத்தினர் மீது நேற்றுமாலை தாக்குதல்

அனைவருக்கும் எமது நத்தார் நல்வாழ்த்துக்கள்



# தனங்களப்பில் 2 படையினர் காயம்

யாழ்ப்பாணம் —

தென்மராட்சி - தனங்களப்பு வீதியில் நேற்று மாலை நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் இரண்டு படையினர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 5.30 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமுற்ற படையினர் ஹெலிகொப்டர் மூலம் பலாலி இராணுவ வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தத் தகவலை இரா்ணுவத் தரப்பு உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தரைவழியாக வந்த இணைத்தலைமை தூதுவர்கள்!

கிளிநொச்சி —

இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் நேற்று தரை வழியாகவே கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடு தலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடத்தினர்.

விமானப்படையினர் ஹெலி வழங்க மறுத்ததால், வவுனியாவிலிருந்து தரை வழியாக வந்த இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களை புளியங்குளத்தில் வைத்து சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்று அழைத்து வந்தார்.

காலை 11.50 மணிக்கு ஆரம்பமான பேச்சுக்களில் காவற்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோரும் பங்குபற்றினர்.

இந்தச்சந்திப்பில் - இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.நகரில் நேற்று மாலை இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்ட ஐந்து பேரும் அப்பாவிகள் என்றும் - பொங்கி யெழும் மக்கள் படையைச் சேர்ந்தவர் கள் கொல்லப்பட்டதாக படைத்தரப்பு கூறுவது அப்பட்டமான பொய் என்றும் பொங்கியெழும் மக்கள் படை நேற்றிரவு வெளியிட்ட அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் - யாழ்.நகரில் இராணுவத்தினர் மீது நேற்றுமாலை தாக்குதல் நடத்திய இருவரும் பாதுகாப்பாக தளத்துக்குத் திரும்பிவிட்டனர்.

யாழ்.குடாநாட்டில் மக்கள்படையாகிய நாங்கள் - தன்னியக்க துப்பாக்கி மற்றும் சிறிய ரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றோம். இந்தத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்களை மோசமாகத் தாக்கிவருவதுடன் (12 ஆம் பக்கம் பார்க்க)



# நோர்வேயில் பேச்சு நடத்தும் நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

## விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக தெரிவிப்பு

கிளிநொச்சி

**போர்நிறுத்த அமுலாக்கம் தொடர்பாக, நோர்வேயில் தான் முதற்கட்டப் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டை இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களிடம் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.**



நேற்று இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களுடன் கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கை யில் -

கேள்வி: இந்தச் சந்திப்புத் தொடர்பாக-

பதில்: இணைத் தலைமை என்று சொல்லப்படுகின்ற ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, பிரித்தானியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் உள்ளடங்கிய தூதுக்குழுவொன்று - தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் பற்றி தீவிரமாக கரிசனை செலுத்திக் கலந்துரையாடியது.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை எப்படிச் சீர்செய்வது என்பது பற்றியும், மக்களுடைய கொந்தளிப்பான நிலைமையை தணிவுக்குக் கொண்டுவந்து எப்படியொரு இயல்புநிலையைக் கொண்டுவரலாம் என்பது பற்றியும், (11 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.இராணுவத் தளபதியின் நத்தார் தின வாழ்த்துச் செய்தி!

யாழ்ப்பாணம் —

உலகம் எங்கும் வாழும் கோடிக் கணக்கான கத்தோலிக்க மக்கள் கௌரவத்துடனும், பக்தியுடனும், சந்தோசத்துடனும் இயேசுபிரான் பிறப்பைக் கொண்டாடும் நத்தார் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வாழும் கத்தோலிக்க மக்களுக்கு நத்தார் வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பாக்கியமாகக் கருதுவதாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட கிறிஸ்தவ மக்களுக்கு நத்தார் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மனித சமுதாயத்தில் கலவரங்கள், புரட்சிகள் போன்றவை இடம்பெற்ற காலத்திலேயே இயேசுபிரான் இந்த உலகில் பிறந்தார். அன்று முதல் அவர் போதித்ததும் சமாதானத்தின் பெறுமதியையே. இந்த உலகில் அமைதியில்லாத இடத்தில் வாழ முடியாது என்பதை அவர் அப்போதே அறிந்திருந்தார். அதனால்தான், சமாதான குமாரன் என்றும் அவரை நாம் அழைக்கின்றோம். அவர் கிறிஸ்து தர்மத்தை இன, மத வேறுபாடு இல்லாது அகில உலக மக்கள் அனைவருக்குமே போதனை செய்தார்.

சமாதானம் என்ற வார்த்தை இன்றைக்கு மட்டும் மட்டுப்படுத்தப் பட்ட வார்த்தையாக இல்லாமல், அதை நிரந்தரமாக்கிக் கொள்ள சகலரும் கடமையுடனும், பொறுப்புடனும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

இன்றைய நத்தார் தினத்தில் சகல மக்களிடமும் ஒற்றுமை ஏற்பட்டு, நிரந்தர சமாதானம் உருவாக மனமாரப் பிரார்த்தனை செய்வோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நிரஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், லைலா மற்றும் பலர் நடித்த

சாமுராய்

காட்சிகள் 11.00, 2.45, 5.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்

விஜய், ஜோதிகா, விவேக் நடித்த



திருமலை

காட்சிகள்:-10.30,2.30, 6.30 , மட்டும் (பு.நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்

இன்று மட்டும் அர்ஜுன், நமீதா நடித்த ஆணை

நாளை முதல் பிரசன்னா, மீராஜஸ்மின் நடித்த கஸ்தூரிமான்

காட்சி நேரங்கள் தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

காட்சிகள்:- காலை 10.00 ,1.00, 4.00, 6.00 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியா இலங்கை ஒரேதின வெளியீடாக

சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த

DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்



ஆறு

காட்சிகள்

10.30, 1.30, 4.30, 7.30, 10.30

நாகதீஸ்வரா? யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

பிரசன்னா, லைலா, பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்த

கண்ட நாள் முதல்

காட்சிகள்;- 10.30, 2.00, 5.15, 8.15, (புதிய நேரம்)



## UNIVERSITY of CAMBRIDGE U.K

AFTER O/L

## ENGLISH CLASSES

Just in five Months 150 hours will change your Life.

- இந்த மாதத்தில் O/L பரீட்சைக்குத்தோற்றி விஞ்ஞான, கணித, விவசாய முகாமைத்துவம் போன்ற பாடநெறிகளை பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலம் கற்கவிருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவை கூட்டிக்கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித செலவுமின்றி விரிவுரைகளை கேட்கவும், ஒப்படைகளை எழுதவும் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள அரிய சந்தர்ப்பம்.

**"British College of English"** இனைத்தொடர்பு கொள்ளுங்கள். **University of Cambridge – U.K** இன் ஆங்கிலப் பாடநெறி ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள்.

- Cambridge ஆங்கிலப் பரீட்சைகள் 5 மட்டங்களில் நடத்தப்படுகின்றன. இவை **KET, PET, FCE, CAE, CPE** எனப் பெயரிடப்பட்டுள்ளன. இவற்றுள் பின்வரும் பாடநெறிகள எமது **British College** இல் போதிக்கப்படுகின்றன.
  - ♦ **PRELIMINARY ENGLISH TEST (PET) – 150 HOURS.**
    Subjects: i. Reading and Writing ii. Listening iii. Speaking
  - ♦ **FIRST CERTIFICATE IN ENGLISH (FCE) – 150 HOURS**
    Subjects: i. Reading ii. Writing iii. Use of English iv. Listening v. Speaking
  - ♦ **CERTIFICATE IN ADVANCED ENGLISH (CAE) – 200 HOURS.**
    Subjects: i. Reading ii. Writing iii. Use of English iv. Listening v. Speaking
    Please visit our website at www.cambridge ESOL.org.

**Speaking** பரீட்சையின்போது ஒவ்வொரு மாணவனும் ஆங்கிலேயருடன் சரளமாக ஆங்கிலத்தில் அரை மணி நேரம் பேச வேண்டும். எனவே இந்தப் பாடநெறி ஒன்றில் சேர்ந்து கல்வி கற்பவர் தனியாக **Spoken English** பாடநெறியைக் கற்க வேண்டிய அவசியமில்லை.

- Cambridge ஆங்கிலப் பரீட்சைகள் வருடந்தோறும் June, December மாதங்களில் உலகில் 130 நாடுகளில் நடைபெறுகின்றன. 2006ம் ஆண்டு June மாதம் நடைபெற இருக்கும் பரீட்சைக்கான வகுப்புக்கள் **05.01.2006**ல் ஆரம்பமாகின்றன. **December 5**ம் திகதியில் இருந்து நீங்கள் நேரில் வந்து எமது நிலையத்தில் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்
- உடனடியாக **BRITISH COUNCIL** இன் ஆதரவுடன் **05.01.2006** இல் ஆரம்பிக்க இருக்கும் வகுப்புக்களில் சேருங்கள். நிச்சயமாக உங்களை பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.
- இதுவரை 50 மாணவர்களுக்கு மேலாக November 26 இல **University of Colombo** இல் நடைபெற்ற **University of Cambridge**பரீட்சைகளை எடுத்துள்ளனர்.

புதிய வகுப்புக்கள 05.01.2006 இல் ஆரம்பமாகின்றன.

**BRITISH COLLEGE OF ENGLISH**

141, ADIYAPATHAM ROAD, THIRUNELVELY.

(திருநெல்வேலிச்சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையே)

T.P.No: 0779179476




# யாழ்ப்பாணத்தில் தமிழர்மீதான வன்முறைகள் அதிகரிப்பு; மன்மோகனிடம் வைகோ நேரில் மனு



யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் மீதான இராணுவத்தின் வன்முறைகள் அதிகரித்துள்ளமைதொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழ் நாட்டின் மறு மலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ நேரில் மனுவொன்றைக் கையளித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கையும், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியையும் சந்தித்து ஈழத் தமிழர்கள் மீதான இராணுவ ஒடுக்கு முறைகளையும், அண்மைய யாழ்.வன்முறைகளையும் வைகோ விபரித்தார்.

வைகோ அளித்துள்ள மனு தொடர்பாக சென்னையில் ம.தி.மு.க தலைமையகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் -

17.12.2005 அன்று யாழ்ப்பாணத்தில் மிகவும் அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்வாக தர்சினி என்ற இளம்பெண் இலங்கை கடற்படையினரால் கடத்தப்பட்டு, கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். கல்லோடு கட்டப்பட்டு, நீரில் மூழ்கிய நிலையில் அவரது உடல் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

இலங்கை ஆயுதப் படையினரால் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளேயும், வெளியேயும் பொதுமக்களுக்கு எதிராக காட்டுமிராண்டித்தனமான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதை எதிர்த்து- அங்குள்ள மாணவர்கள், பேராசிரியர்கள் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு என்ற அமைப்பிடம் மனு கொடுக்க ஊர்வலமாகச் சென்றனர்.

ஆனால், அவர்கள் இலங்கை இராணுவத்தால் தடுக்கப்பட்டு பல்கலைக்கழகத் துணைவேந்தரும், பேராசிரியர்களும், மாணவர்களும் இரத்தம் கொட்டும் அளவுக்குத் தாக்கப்பட்டுள்ளார்கள்.

தாங்கள் எச்சரிக்கை செய்வதற்காக வானில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக இலங்கை இராணுவம் கூறினாலும் - பேராசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் துப்பாக்கிச் சூட்டால் காயம் ஏற்பட்டுள்ளது என்பதை மருத்துவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இந்த நிகழ்வானது மிகவும் கவலையளிக்கக் கூடியது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கை இராணுவம் 'யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்து மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

போர் நிறுத்தத்தை மீறிச் செயற்படும் இலங்கை அரசு- இலங்கைத் தமிழர்கள் மீதும், எல்.டி.டி.ஈ மீதும் குற்றம் சுமத்தி, வெளி உலகுக்கு ஒரு தவறான தகவலை, தோற்றத்தை அளிக்க முற்படுகிறது.

1995 ஆம் ஆண்டு இலங்கை அரசு இராணுவத் தாக்குதல் நடத்தியபோது பலாலி விமானத்தளம் பயன்படுத்தப்பட்டது.

வானிலிருந்து இலங்கை இராணுவம் குண்டுமழை பொழிந்து அடுத்த தாக்குதலில் தமிழர்களும், மாணவர்களும், பெண்களும், சிறு குழந்தைகளும் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டார்கள்.

5லட்சம் தமிழர்கள் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து நிராதரவாக, அகதிகளாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறினார்கள்.


இந்தச்சம்பவத்துக்கு அன்றைய போப் ஜான்பால்- அன்றைய ஐ.நா.சபை பொதுச் செயலாளர் புட்ரோஸ்காலி தமது வேதனையையும், கண்டனத்தையும் வெளிப்படுத்தினர்.

2004ஆம் ஆண்டு இலங்கை அரசு இந்தியாவுடன் பாதுகாப்பு கூட்டு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றுக்கு முயன்ற போது, தாங்கள் எங்களது கருத்தைப் பரிவோடு ஏற்றுக் கொண்டு அந்த உடன்படிக்கையைத் தவிர்த்தீர்கள். இதற்காக தமிழினமே நன்றிக்கடப்பாடு உரியதாகும்.

அந்தச் சமயத்தில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தில் பலாலி விமானத்தளத்தையும், ஓடு தளத்தையும் சீரமைக்க, பழுதுபார்க்க இந்தியா எந்த வகையிலும் உதவக் கூடாது என்று குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால், யு.என்.ஐ செய்தி நிறுவனம் அண்மையில் வெளிப்படுத்திய செய்தி பேரதிர்ச்சியைத்தந் துள்ளது. இலங்கை விமானத் தளபதி டொனலாட் பெரேரா 9.12.2005 அன்று வெளியிட்ட செய்தியில்- யாழ்ப்பாணத்தில் பலாலி விமானத்தளத்திலும், ஓடு பாதையிலும் இந்தியப் பொருளாதார உதவியோடு கடந்த 6 மாதகாலமாக சீரமைப்புப் பணிகளும், மராமத்துப் பணிகளும் நடைபெற்று வருகிறது எனக் குறிப்பிடப்பட்டதுடன் -

இந்திய நிபுணர்கள் இது தொடர்பாக கூட்டாக விவாதிக்க விரைவில் வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில் டிசம்பர் 2 ஆம் வாரத் தில் முதன் முதலாக இலங்கை - இந்திய கடற்படை முழு கூட்டுப்பயிற்சி மேற் கொண்டதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. தங்களுக்குச் சாதக மாக இந்திய அரசு இருப்பதாக, இலங்கை அரசு செய்தியை பரப்பி வருகிறது. போர் நிறுத்தம், அமைதிப் பேச்சுவார்த்தை ஆகியவை தொடர்பாக இலங்கையில் நிலவுகின்ற சூழல் கவலையளிப்பதாக உள்ளது.



இந்த சூழ்நிலைகளில் இலங்கை அரசு அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இந்தியாவை முன்னிறுத்த முயல்வது ஒரு தந்திரமாக வியூகத்தின் செயற்பாடாகும். நோர்வே அரசு உண்மையாகவும், முழுமையான ஈடுபாட்டுடனும் அமைதிப் பேச்சுவார்த்தையை தொடர்ந்து முயற்சியெடுத்து வருகிறது.

இத்தகைய பின்னணியில் இலங்கைத் தீவில் தமிழர்கள் படுகின்ற துன்பங்கள், துயரங்கள் தொடர்பாக நிலவுகின்ற கருத்துகளை பிரதம அமைச்சராகிய தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டுவரக் கடமைப் பட்டுள்ளேன் என்று அந்த மனுவில் வைகோ தெரிவித்துள்ளார்.

## குடாநாட்டில் நிகழும் வன்முறைகளை கண்டித்து சுவிஸில் ஒன்று கூடல்!

யாழ்ப்பாணம் ——

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மீதான இராணுவத்தின் தாக்குதலைக் கண்டித்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அமைதி ஒன்று கூடலை நடத்துவதற்கு சுவிஸ் தமிழ் அமைப்புகள் ஏற்பாடு செய்துள்ளன.

அன்றைய தினம்பேர்ன் நகருக்கு முன்பாக பிற்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இந்த அமைதி ஒன்று கூடல் நடைபெறும்.

சுவிஸ் தமிழர் அமைப்புகளையும், தமிழ் மக்களையும் இந்த ஒன்று கூடலில் கலந்து கொள்ளுமாறு தமிழ் இளையோர் அமைப்பு சுவிஸ் தமிழர் இல்லங்கள், தமிழ் ஒன்றியம், தமிழ்ப் பெண்கள் அமைப்பு ஆகியவை வேண்டுகோள் விடுத்துள்ளன.

## விமல் வீரவன்சவும், ரத்னதேரரும் வன்முறை பிரதேசங்களுக்கு நேரில் செல்ல வேண்டும்!

### ஐ.தே.க.வலியுறுத்து

கொழும்பு ——

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வன்முறைப் பகுதிகளுக்கு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச மற்றும் ஜாதிகஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோர் செல்ல வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்-

மன்னார் பேசாலையில் கடற்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஐ.தே.க வன்மையாகக் கண்டிக்கிறது. படையினர் மீதும், மக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டுவரும் பயங்கரவாதத் தாக்குதலுக்கு அரசாங்கமே பொறுப்பு ஏற்கவேண்டும்.

முப்படையினர் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் படுகொலைக் கலாசாரம் இன்று அதிகரித்துக்கொண்டு வருகிறது.

அரசாங்கம் இதற்கு எவ்விதமான காத்திரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையே கடற்படையினர் மீதானதாக்குதல் எடுத்துக்காட்டுகிறது.

மக்களினதும், படையினரதும் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம்.

பயங்கரவாத நடவடிக்கைகளினால் போர் நிறுத்த உடன்படிக்கை மீறப்படுகிறது. இதற்கு மகிந்த ராஜபக்ஷவும், அவர் தலைமையிலான அரசாங்கமும், விடுதலைப்புலிகளுமே பொறுப்பேற்க வேண்டும்.

சமாதான முயற்சிகளில் இருந்து அரசை விலக்கியதற்கான பொறுப்பை ஜே.வி.பியும், ஹெலஉறுமயவுமே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

எனவே, யுத்த அச்சத்தை தணிக்க விமல் வீரவன்ச, அத்துரலிய ரத்னதேரர், சம்பிக்க ரணவக்க ஆகியோர் ஒரு குழுவை அமைத்து, வன்முறைகள் இடம் பெறும் இடங்களுக்கு விரைய வேண்டும். இல்லையேல் மக்கள் கொலைக்கு அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் வீழ்வதை தடுக்க முடியாது.

### ஆளுநர் டிரோன் பெர்னான்டோவை பதவியிலிருந்து நீக்கக் கோரிக்கை

கொழும்பு ——

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவை அந்தப் பதவியிலிருந்து நீக்கிய பின்னர், அந்தப் பதவிக்குத் தகுதியான ஒருவரை நியமிக்குமாறு ஜே.வி.பி, ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்திருப்பதாக, ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிப்பதாக சிங்கள நாளேடொன்று தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியுடன் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜே.வி.பி தலைவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்ததாகவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (தே)

## பொதுத்தேர்தலை நடத்துவதற்கு சிரேஷ்ட அமைச்சர்கள் எதிர்ப்பு!

கொழும்பு ——

பொதுத்தேர்தலை நடத்தாமல் சிறிய கட்சிகளையும், அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தயாராகவுள்ள எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின்ஆதரவையும் பெற்றுக் கொண்டு, அரசாங்கத்தின் பெரும்பான்மையை பாதுகாப்பதற்கான திட்டத்தை தயாரிக்க வேண்டுமென பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட அமைச்சர்கள் குழு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளது.

இந்த ஆலோசனையை அமைச்சர்களான மங்களசமரவீர, சுசில் பிரேமஜயந்த, அனுர பிரிய தர்சனயாப்பா, டி.எம். ஜயரட்ண, மைத்திரி பால சிறிசேன மற்றும் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் முன்வைத்துள்ளனர்.

தேர்தலொன்று நடத்தப்படுமானால் செலவிடப்படும் தொகையை நாட்டின் அபிவிருத்தி திட்டத்திற்கு பயன்படுத்துவதற்கும், பொதுத்தேர்தலின் போது ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயஆகிய கட்சிகள் தனியாகப் போட்டியிட்டால் ஏற்படக்கூடிய அனுகூலமற்ற நிலைமைகள், வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள அமைதியற்ற சூழல் குறித்தும், ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த சிந்தனை மூலம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை விரைவாக நிறைவேற்றுவதன் மூலம் அதனைச் செயற்படுத்துவது மிகவும் பயனுள்ளதாக இருக்குமெனவும் அமைச்சர்கள் தமது ஆலோசனையில் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் பலத்தை அதிகரிப்பதற்காக தேர்தலை நடத்துவதற்கு முன்னர் ஐ.தே.கட்சிக்குள் நிலவுகின்ற உட்பூசலை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமெனவும், ஜே.வி.பியைஅமைச்சரவையில் இணைத்துக் கொள்ளவேண்டுமெனவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைப்புச் செய்து, அதன் தலைமைத்துவத்தை ஜனாதிபதி ஏற்க வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (தே)

## மல்வத்தை விகாரையருகே பிஸ்டல் ஒன்று மீட்கப்பட்டது

கொழும்பு ——

கண்டி மல்வத்தை விகாரைக்கு அருகில்- பாதையில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த பிஸ்டல் துப்பாக்கி ஒன்றைப் பொலிஸார் கண்டெடுத்தனர்.

இத்தாலியத் தயாரிப்பான 8 மி.மீ ரகத்தைச் சேர்ந்த இந்த பிஸ்டல் செயற்படும் நிலையில் இருந்ததாகத் தெரியவந்துள்ளது.

வீதித் துப்புரவு நடவடிக்கையில் கடந்த வியாழக்கிழமை ஈடுபட்டிருந்த பெண் ஒருவரே இதனைக் கண்டெடுத்தார். இதன் பின் கண்டி பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று பிஸ்டலை மீட்டெடுத்தனர்.

இந்த பிஸ்டல் தொடர்பாக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புலிகளின் அலுவலகம் மன்னாரில் தீக்கிரை!

மன்னார் ——

மன்னார் நகரில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரிவு அலுவலகம்- நேற்றுமுன்தினம் அதிகாலை இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

மன்னார் - மூர் வீதியில் உள்ள இந்த அலுவலகம், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து புலிகள் வெளியேறிய பின்னர் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடற்படை அதிகாரிகள் மூவருக்கு இடமாற்றம்

கொழும்பு ——


வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய பிரதேசங்களுக்குப் புதிய கடற்படைக் கட்டளை அதிகாரிகள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி வடபகுதி கடற்படை கட்டளை அதிகாரியாக றியர் அட்மிரல் உபாலி ரணவீர நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் தென்பகுதி கடற்படை கட்டளை அதிகாரியாக செயற்பட்டவர், வடபகுதி கடற்படை கட்டளை அதிகாரியாக இருந்த றியர் அட்மிரல் வசந்த தென்னக்கோன் கடற்படையின் பொதுச் சேவைகள் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கின் கட்டளை அதிகாரியாக கொமாண்டர் சுனில் ரஞ்சன் சமரதுங்கவும், தென் பகுதிக் கட்டளை அதிகாரியாக கொமாண்டர் ஆனந்த பீரிஸும் நியமிக்கப்பட்டுள்ளனர். (தே)

# சாதனைகளுக்காக சேர்க்கக்கூடாது அடித்து ஆடவேண்டும் சச்சின்!

## அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



சென்னை —

சாதனைக்காக ஆடுபவர்களை அணியில் சேர்க்கக்கூடாது, டெண்டுல்கர் அடித்து ஆடவேண்டும். இல்லையெனில் ஓய்வுபெறவேண்டும் என இலங்கை அணியின் முன்னாள் கப்டன் ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித்தொடரை இந்திய அணி சிறப்பான முறையில் ஆடி வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றி மகிழ்ச்சியில் அடுத்துவரும் போட்டிகளில் நன்றாக விளையாட வேண்டும்.


வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் போது அவர்களின் தற்போதைய திறமையைத்தான் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் டெண்டுல்கரும் லக்ஷ்மனும் தலா ஒரு சதம் மட்டுமே அடித்துள்ளனர். இதைத் தவிர அந்த டெஸ்டின் மற்ற ஆட்டங்களில் அவர்கள் சிறப்பாக ஆடவில்லை.

அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் கூட எதிர்பார்த்தளவுக்கு விளையாடவில்லை. இந்த டெஸ்ட் தொடரில் முன்வரிசை ஆட்டக்காரர்களைவிட இந்திய அணியில் பின்வரிசை ஆட்டக்காரர்களே அருமையாக விளையாடினர். நடுத்தர வரிசை வீரர்களில் யுவராஜ்சிங் சிறப்பாக ஆடினார். பதான் இக்கட்டான நேரத்தில் கைகொடுத்தார்.

இந்திய அணியில் தகுதி அடிப்படையில்தான் வீரர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். எப்போதோ விளையாடி சாதனைகள் படைத்ததற்காக அணியில் சேர்க்கக்கூடாது. இது டெண்டுல்கர், லக்ஷ்மன், கங்கூலி போன்றவர்களுக்கும் பொருந்தும்.

தற்போது இந்தியாவில் திறமையுள்ள வீரர்கள் மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மேலும் தேவைப்படும் நேரத்தில் பந்துவீச்சாளர்கள் துடுப்பாட்டக்காரர்களாகவும், துடுப்பாட்ட வீரர்கள் பந்துவீச்சாளர்களாகவும் மாறி சிறப்பாக செயற்படும் நிலை உருவாகியுள்ளது. இந்த நிலையில் இந்திய அணியைத் தோற்கடிப்பது மிகவும் கடினம்.

இலங்கைக்கு எதிரான தொடரை எளிதாக வென்றதுபோல் பாகிஸ்தான்



தொடர் இருக்காது. பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சு இந்திய அணிக்கு கடும் சவாலாக அமையும் என தெரிவித்தார்.

## இலங்கை அணி நாடு திரும்பியது

சென்னை —

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கிண்ணத்தை இழந்த இலங்கை கிரிக்கெட் அணி நேற்றுமுன்தினம் நாடுதிரும்பியது. அத்தபத்து தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி, இந்தியாவில் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

அகமதாபாத்தில் நடந்த 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் 259 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

இதன் மூலம் 0:2 என்ற கணக்கில் தொடரை இழந்த சோகத்துடன் நேற்றுமுன்தினம் நாடு திரும்பியது. அகமதாபாத்திலிருந்து காலையில் சென்னை வந்த இலங்கை வீரர்கள் சிறிது நேரம் விமான நிலையத்தில் ஓய்வெடுத்தனர்.

பின்னர் மதியம் சுமார் 2 மணியளவில் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றனர். முன்னதாக ஒருநாள் தொடரில் பங்கேற்ற இலங்கை அணி 1:6 என்ற கணக்கில் இந்தியாவிடம் கிண்ணத்தைப் பறிகொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு

## ஐ.சி.சியின் தரவரிசைப் பட்டியல் இரண்டாமிடத்துக்கு இந்திய அணி

டுபாய் —

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றதன் மூலம் ஐ.சி.சி தரவரிசைப் பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

அகமதாபாத்தில் நடந்த இலங்கைக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 259 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்று, தொடரை 2-0 என்ற முன்னிலையில் கைப்பற்றியுள்ளது.

இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் சபையின் தரவரிசைப் பட்டியலில் மூன்றாவது இடத்திலிருந்து, 115 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. 113 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணி மூன்றாவது இடத்திற்கு பின்தங்கியுள்ளது.

அவுஸ்ரேலிய அணி 128 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது. இலங்கை அணி 96 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தில் உள்ளது.

| தர வரிசை | அணி | புள்ளி |
|---|---|---|
| 1 | அவுஸ்ரேலியா | 128 |
| 2 | இந்தியா | 115 |
| 3 | இங்கிலாந்து | 113 |
| 4 | பாகிஸ்தான் | 103 |
| 5 | தென்னாபிரிக்கா | 100 |
| 5 | நியூஸிலாந்து | 100 |
| 7 | இலங்கை | 96 |
| 8 | மேற்கிந்தியத்தீவுகள் | 73 |
| 9 | சிம்பாப்வே | 27 |
| 10 | பங்களாதேஷ் | 5 |

## இந்தியச் சுற்றுப் பயணத்தில் எமது அணி சிறப்பாக ஆடும்

### இங்கிலாந்து அணித் தலைவர் வோண் நம்பிக்கை



லண்டன் —

இந்திய சுற்றுப்பயணத்தில் இங்கிலாந்து அணி சிறப்பாக ஆடும் என்று அந்த அணியின் கப்டன் மைக்கல் வோண் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மைக்கல் வோண் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த வருடம் பெப்ரவரி மாதக் கடைசியில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

சமீபத்தில் நடந்த பாகிஸ்தான் பயணத்தில் இங்கிலாந்து அணி தோல்வி கண்டது. இந்த நிலையில் இங்கிலாந்து அணியின் கப்டன் மைக்கல் வோண் அளித்த பேட்டியில் கூறியதாவது -

பாகிஸ்தான் பயணத்தில் எனக்கு, ஆஷ்லே ஜைல்ஸ், கெவின் பீற்றர்சன் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. இந்தக் காயத்தில் இருந்து விடுபட்டு இந்திய சுற்றுப்பயணத்தில் முழு உடல் தகுதியுடன் பங்கேற்கமுடியும் என்று நம்புகிறேன்.

கடந்த 2 ஆண்டுகளில் இங்கிலாந்து அணி சிறப்பாக ஆடியது. அணி வீரர்கள் அனைவரும் அப்போது நல்ல நிலையில் இருந்தனர். ஆஷஸ் தொடரில் 12 வீரர்கள் மட்டுமே ஆடினோம்.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் ஒருங்கிணைந்து சிறப்பாக ஆடாதது தோல்விக்கு காரணமாகும். பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. தவறான மனிதராக விமர்சிக்கப்படும் சொகைப் அக்தரின் பந்துவீச்சு அபாரமாக இருந்தது. இன்சமாமின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இருவரும் இங்கிலாந்து அணிக்குகடும் நெருக்கடி கொடுத்தனர்.

பாகிஸ்தானில் கண்ட தோல்வியில் இருந்து நல்ல பாடம் கற்றுள்ளோம். அந்தத் தவறுகளை திருத்தி இந்திய சுற்றுப்பயணத்தில் சிறப்பாக ஆடுவோமென வோண் மேலும் தெரிவித்தார்.

## இந்தியாவை வீழ்த்துவதே முக்கியம் சபதம் செய்கிறார் சொகைப் அக்தர்


லாகூர் —

இந்தியாவுக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் ஆடுவதற்கு மிகவும் ஆவலுடன் இருப்பதாக பாகிஸ்தான் அதிவேகப் பந்துவீச்சாளர் சொகைப் அக்தர் தெரிவித்துள்ளார்.

டுபாய்க்கு 3 நாள் பயணமாக வியாழக்கிழமை புறப்படும் முன் அக்தர் நிருபர்களிடம் கூறியதாவது -

தற்போது முடிவுற்ற கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்தை வென்றதுடன், எமது வேலை முடிந்துவிடவில்லை. இந்தியாவை வீழ்த்துவதே மிகவும் முக்கியமானது.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் மருத்துவர்களின் ஆலோசனையை மீறி, முழங்கால் காயத்துடன் வலியோடு ஆடினேன். இன்னும் 2 வாரங்களில் காயம் முழுவதும் ஆறிவிடும்.



இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் தொடங்குவதற்குள் 100 சதவீதம் உடல்நலம் பெற்று ஆடுகளத்தில் இறங்குவேன் என்று நம்புகிறேன்.

எமது அணித் தலைவர் இன்சமாம்-உல்-ஹக் புகழுக்குரியவர். அவரது அனுபவம் மற்றும் திறமையால் எமது அணி வெற்றிகளைக் குவித்து வருகிறது.

முன்பைவிட எமது அணியினர் தற்போது மிகவும் ஒருங்கிணைப்பு உணர்வுடன் ஆடி வருகின்றனர்.



## இந்தியாவுடனான தொடர் சவாலானதாக இருக்கும்

### இப்படிக் கூறுகிறார் இன்சமாம்

லாகூர் —

இந்திய அணியுடனான போட்டித் தொடர் சவால் நிறைந்ததாகவே இருக்குமென பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் உல்-ஹக் தெரிவித்தார். எதிர்வரும் ஜனவரி 14ஆம் திகதி ஆரம்பமாகி 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டித் தொடர் குறித்து இன்சமாம் உல்-ஹக் கருத்துத் தெரிவிக்கையில் -

தற்போது பயிற்சி முகாமில் தீவிர கவனம் செலுத்தவுள்ளோம். இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் சிறப்பாக ஆடினோம். இந்தத் தொடரில் வீரர்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டோம்.

இங்கிலாந்துக்கு எதிரான தொடரைப் போல இந்தியாவுக்கு எதிரான போட்டி சுலபமாக இருக்காது. இந்திய அணியில் மிகச் சிறந்த வீரர்கள் உள்ளனர். மேலும் அவர்கள் நல்ல அனுபவத்தையும் கொண்டுள்ளனர். இந்தத் தொடர் இரு அணிகளுக்கும் கடும் சவாலாக இருக்கும்.

தற்போதுள்ள இந்திய அணி புதிய பயிற்சியாளரால் சிறப்பாகத் திகழ்கிறது. இந்தத் தொடரில் வெற்றிபெற புதுவியூகம் அமைத்து வருகிறோம். இந்திய வீரர்கள் சுழற்பந்து வீச்சுக்கு நன்கு ஆடக்கூடியவர்கள். இதனால் டனேஷ் கனேரியா இந்தத் தொடரில் முக்கிய பங்கு வகிப்பார்.

எனினும், இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர். இதன் மூலம் வேகப்பந்து வீச்சு வலுவடைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து இந்தியத் தொடரில் விளையாடுவதால் வீரர்கள் நல்ல நிலையில் உள்ளனர். இந்தத் தொடரை வெல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது எனக் குறிப்பிட்டார்.

## 2ஆவது டெஸ்டில் நிச்சயம் ஆடுவேன்

### கலிஸ் நம்பிக்கை



மெல்பேர்ன் —

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஜக் கலிஸ் - அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சிட்னியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் காயம் காரணமாக ஆடவில்லை.

இந்த நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டி நாளை மெல்பேர்ன் நகரில் தொடங்கவுள்ளது.

இந்த டெஸ்ட்டில் நிச்சயம் விளையாடுவேனென கலிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில் -

காயம் முற்றிலும் குணமடைந்து வருகிறது. 100 சதவீத உடற்தகுதியைப் பெற்று - 2ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடுவேன் என்றார்.

## பாகிஸ்தான் செல்லவுள்ள அணியில் சௌரவ் கங்கூலி, சகீர்கான் சேர்ப்பு


மும்பை —




இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற இந்திய அணி அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணியுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதற்கான அணித் தேர்வு நேற்று தேர்வுக் குழுத் தலைவர் கிரண் மோரே தலைமையில் நடைபெற்றது.

அணியின் விபரம் வருமாறு - ராகுல் ராவிட், சச்சின், யுவராஜ் சிங், ஷேவாக், கங்கூலி, டோனி, அனில் கும்ளே, ஹர்பஜன் சிங், ஆர்.பி.சிங், கௌதம் காம்பீர், லக்ஷ்மன், இர்பான் பதான், வாசிம் ஜாபர், அஜித் அகர்கர், சகீர் கான் மற்றும் பார்த்தீவ் பட்டேல்.

மேலும் இந்த அணியில் மொகமட் கைவ் இடம்பெறவில்லை. இவருக்குப் பதில் 3 மாத இடைவெளிக்குப் பின்னர் சகீர்கான் சேர்க்கப்பட்டுள்ளார். 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் இந்திய அணியினர் மட்டுமே தற்போது அறிவிக்கப்பட்டுள்ளனர். 16 பேர் கொண்ட இந்த அணி பாகிஸ்தானுக்கு எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதி புறப்படவுள்ளது.



ஜேர்மனியின் டசெல்டிராப் நகரில், நிவாரண நிதி திரட்டுவதற்கான கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இதில், பிரான்ஸின் ஸினேடின் ஸிடேன் தலைமையிலான அணி 4-2 என்ற கோல் கணக்கில் பிரேசிலின் றொனால்டோ தலைமையிலான அணியை வீழ்த்தியது. எதிரணி வீரர்களிடமிருந்து பந்தை லாவகமாகத் தட்டிச் செல்கிறார் ஸிடேன் (நடுவில்).



# அரசியல் இலாபம் - சுயநல நோக்கை கைவிட்டு நீதியான தீர்ப்பொன்றை அரசு வழங்கவேண்டும்

## கிறிஸ்மஸ் செய்தியில் யாழ்.ஆயர்

யாழ்ப்பாணம் —

2005ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்களையும், ஆசீரையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாண்டு கிறிஸ்மஸ் விழா கடந்த வருடம் மார்கழி மாதம் 26ஆம் திகதி ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாவின் பின்னர் நிகழ்ந்த சுனாமிப் பேரலை அனர்த்தத்தையும், அதன் கோரவிளைவுகளையும் எம் எல்லோர் மனதுகளிலும் மீண்டும் ஒரு தடவை சோகமாக அசைபோடுவது தவிர்க்கப்பட முடியாதது என யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் விடுத்துள்ள கிறிஸ்மஸ் தினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

போரின் கொடூர அனுபவங்களிலும், அதன் தாக்கங்களிலும் இருந்து மெதுவாக விடுபட்ட வேளை யாழ். மறை மாவட்டத்தின் குறிப்பாக கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் இந்தப் பேரலை அனர்த்தத்தால் துன்பத்தையும், வேதனையையும் அனுபவித்து உயிர்களை இழந்து, உடமைகளைப் பறிகொடுத்து தாங்க முடியாத சோகத்துக்கு உள்ளாக்கப்பட்டார்கள். உறுதிசெய்யப்பட்ட நிவாரணப் பணிகள் அரசியல் காரணங்களாலும், இனவாதப் போக்குகளாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படாமல் போனாலும், நாம் இந்தப் பணியை மத வேறுபாடின்றி சிறப்பான முறையில் ஆற்றியிருக்கிறோம் என்பதில் மனத் திருப்தி அடைகிறோம். இந்தப் பணியை ஆற்ற உதவிய நல்லெண்ணம் கொண்டவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். ஜோவான் நற்செய்தியில் லாசருடைய இறப்பு நிகழ்வில் மாத்தாளுக்கும், இயேசுவுக்கும் நடந்த அந்த உரையாடலின் பின்னர் லாசர் புதைக்கப்பட்டிருந்த குகையின் முன்னால் இயேசு சொன்ன வார்த்தைகள் எமக்கு நம்பிக்கை தரும் வார்த்தைகளாக இருக்க வேண்டும். அவர், நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா? (ஜோவான் 11:40) என்று கூறினார். இழப்பையும், இறப்பையும் அனுபவித்து வேதனையில் ஆழ்ந்திருப்பவர்கள் மத்தியில் நாம் ஆற்றுகின்ற நிவாரணப் பணிகளும், அன்புப் பணிகளும் தான் அவர்களின் வேதனையை ஆற்றி இறைவனின் அருட்கொடையை உணர வழி வகுக்கும்.

உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக. லூக் 2:14 என்ற வானதூதரின் வாழ்த்து இயேசுவின் பிறப்பு வாழ்த்து இவர்களுக்கும் எல்லோருக்கும் மகிழ்ச்சியின் வாழ்த்தாகவும், அருளின் வாழ்த்தாகவும் இருக்க வேண்டுகிறோம்.

இவ்வாண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலும், அதன் முடிவுகளும் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளைக் கொண்டு வரப்போகிறது என்பதை எதிர்நோக்கியவர்களாக தமிழ் மக்கள் அனைவரும் இருக்கிறார்கள். கடும் போக்கையும், இனவாதத்தையும் கடைப்பிடிப்பவரான ஜனாதிபதி தமது கூட்டுக் கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்களுக்கு அமைதியும், பாதுகாப்பும் கிடைக்கத்தக்க விதமாக நீதியோடு செயற்படுவாரா? அல்லது தமிழ் மக்கள் திரும்பவும் போரையும், வன்முறையையும், அழிவையும், இறப்புக்களையும் அனுபவிக்கின்ற விதமான ஒரு வாழ்வை அமைத்துத் தரப்போகிறாரா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் 2005ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில் தெரிவித்த முக்கியமான விடயம் இலங்கை அரசை தீவிரமாகச் சிந்திக்கவும், வேகமாகச் செயற்படவும் அழைப்பு விடுத்திருக்கிறார். தமிழ் மக்களைப் பொறுத்தவரை இது சிந்திக்க வேண்டிய அறிவிப்பாகும். இவ்வேண்டுகோள் நிராகரிக்கப்படுமேயானால் மீண்டும் போர் மூழும் சூழல் உருவாவது தவிர்க்கப்பட முடியாது. சர்வதேச உலகும், ஊடகங்களும் இலங்கையின் இன்றைய நிலையை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு இருக்கின்ற வேளையில் தமக்கு என்ன விளைவுகள் ஏற்படுமோ என்ற ஏக்க உணர்விலே தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.

இன்று நடைபெறுகின்ற சிறு சிறு மோதல்களும், நிலவிவருகின்ற முறுகல் நிலையும், ஒரு பெரிய யுத்தத்தில் போய் முடிந்து விடக்கூடாது என்பதே அனைவரின் வேண்டுதலாக உள்ளது. சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் நம்பிக்கை வைத்துத் தொடங்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம், பேச்சுக்கள் என்பன தொடர்ந்து நிகழ வேண்டும். வன்செயல்களைத் தூண்டி, குழப்பத்தை ஏற்படுத்தாதவாறு அனைத்துத் தரப்பினரும் பொறுமையோடும், கவனத்தோடும் செயற்படவேண்டும்.

போரையும் அதன் கொடூர அனுபவங்களையும், தமிழ் மக்கள் மீண்டும் ஒரு தடவை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. புதிய ஜனாதிபதிக்கும் இலங்கை அரசுக்கும், எதிர்க் கட்சிகளுக்கும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் கட்சி இலாபங்களையும், சுய நலன்களையும் விடுத்து இவ் அவசர அழைப்பை ஏற்று, இலங்கை மண்ணில் நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படச் செயற்படும்படி தமிழ் மக்கள் பெயரால் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறோம்.

உலகின் ஒளியாகப் பிறந்த பாலக இயேசு இலங்கை மண்ணில் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு ஏற்பட அருள் பாலிக்கும்படி வேண்டி, அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்:

## குடாநாட்டில் அதிகரித்துவரும் இராணுவத்தினரின் கெடுபிடிகள்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்தில் நாளுக்கு நாள் பயணிகளின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதால், மக்கள் மத்தியில் பெரும் பயப் பீதி ஏற்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களாக இனந் தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற கைக்குண்டுத் தாக்குதல் சம்பவங்களையடுத்து படையினர் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் பிரதான வீதிகள், சந்திகள் மற்றும் காவலரண்கள், படைமுகாங்கள் என்பவற்றில் கடைமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் படையினர் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பயணிகளை வழிமறித்து தடியடிப்பிரயோகம் நடத்தி, பாரிய உயர்சோதனைகளை மேற்கொள்வதுடன், வீதிகளில் இருமருங்கிலும் இருக்கின்ற பற்றைகள், புல்லுகள், செடிகளை அகற்றுமாறு பணிக்கின்றனர்.

வீதிகளுக்குக் குறுக்கே வீதித் தடைஏற்படுத்தி அதைச் சுற்றி வாகனங்களைச் செல்ல கட்டளையிடுதல், திடீர் சுற்றிவளைப்புக்கள், தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, மக்களை மிலேச்சத்தனமாகத் தாக்குதல், பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பஸ்வண்டிகளில் ஏறி பயணிகளை தாக்குதல் போன்ற சம்பவங்களை படையினர் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக பயணம் செய்ய அச்சம் ஏற்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் காலை அச்சுவேலியிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த தனியார் பஸ்வண்டியை கல்வியங்காட்டுப் பகுதியில் வழிமறித்து, அதில் பயணம் செய்த பயணிகள் சோதனையிடப்பட்ட பின்னர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

வானின் சாரதியும், நடத்துனரும் கைகள் கட்டப்பட்ட நிலையில் படையினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னரே விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## ஆனைக்கோட்டை கோஷ்டி மோதலில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்!

யாழ்ப்பாணம் —

ஆனைக்கோட்டைப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் இளைஞர் ஒருவர் பலத்த வாள் வெட்டுக்கு இலக்காகி, ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த என். பகீரதன் (வயது 34) என்பவரே தலை, கை ஆகிய பகுதிகளில் பலத்த வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருகிறார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சில இளைஞர்களுக்கும், சாவற்காட்டைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதாலேயே இந்தக் கோஷ்டி மோதல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இரு குழுக்களும் ஆனைக்கோட்டைப் பகுதி வீதியில் கத்தி, பொல்லுகள், சைக்கிள் செயின் போன்ற ஆயுதங்களை வைத்து மோதலில் ஈடுபட்டனர்.

இதனால் இந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியதால், அந்தப் பகுதி ஊடாகச் செல்லும் மக்கள் அச்சத்துடன் காணப்பட்டனர்.

## நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 15 பேருக்கு வீடமைப்புக் கொடுப்பனவு



நெடுந்தீவு —

சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தித் திட்டம் 2005 இன் கீழ் நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்குப்பட்ட 15 குடும்பங்களுக்கு வீடமைப்பதற்கான முதற்கட்டக் கொடுப்பனவாக 20 ஆயிரம் ரூபா கடந்தவாரம் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் வைத்து வைபவ ரீதியாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்தத் திட்டம் 50 ஆயிரம் ரூபா தொகையுடையதென்பதுடன், மூன்று கட்டங்களாக இந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவுள்ளது. இதனடிப்படையில் ஜே/1பிரிவில் அ.லோறஞ்சியாப்பிள்ளை, சி. சுப்பிரமணியம், வ.கணேஸ், ஜே/2 பிரிவில் இ.யாதவராஜர் யோ.இசைஞானவதி, ஜே/3 பிரிவில் செ.றெஜிஸ்பேக்மன், ச.ஆசீர் தேவதாசன், ஜே/4 பிரிவில் ஞா.மரியதாஸ், யோ.லூத்தம்மா, ஜே/5 பிரீல் ப.குணரட்ணம், யோ.யோட்தாஸ், ஜே/6 பிரிவில் சி.திருச்செல்வம், நா.பராசக்தி, க.நாகேந்திரம், ப.பற்றிக் செபஸ்ரியாம்பிள்ளை, ஆகியோருக்கே நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (113)

## நெடுந்தீவில் பலப்படுத்தப்படும் காவலரண்கள்

நெடுத்தீவு —

நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள படைநிலைகள் கடந்த சில நாட்களாக பலப்படுத்தப்பட்டு வருகின்றமையால் மக்கள் மத்தியில் அச்சம் நிலவுவதுடன் இந்த நடவடிக்கை காரணமாக அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பாதுகாப்பு வேலிகள், காவலரண்கள் என்பன அமைப்பதற்காக பொது மக்களது காணிகளில் இருந்து பனை மரங்கள் தறிக்கப்பட்டு வருவதுடன், கடல் தடைகள் அற்ற மணற் கடற்கரைப் பகுதியில் இருந்து பெருமளவு மணல் சட்டவிரோதமாக அகழப்படுட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (113)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஐந்து



பெயர் : தி.சரண்யா
முகவரி : வட்டுக்கோட்டை.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


## குடாநாட்டில் இவ்வாண்டு மிதிவெடிகளால் இருவர் பலி, பத்தொன்பதுபேர் காயம்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் கடந்த யுத்தகாலத்தில் புதைக்கப்பட்ட மிதிவெடி மற்றும் வெடிபொருட்களால் இவ் ஆண்டு மட்டும் இருவர் பலியானதுடன், பத்தொன்பது பொதுமக்கள் காயமடைந்துள்ளதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு தகவல் பிரிவினரால் திரட்டப்பட்ட தரவுகள் தெரிவிக்கின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் ரீதியாகத் அவதானிக்கும் போது தென்மராட்சி பிரதேசத்தில் இருவர் பலியானதாகவும், பத்துப்பேர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது. மேலும் வலிகாமம் கிழக்கில் மூவர் காயமடைந்துள்ளதாகவும், வலிகாமம் வடக்கில் இருவர், வலி. மேற்கில் இருவர், வலி. தெற்கில் ஒருவர், யாழ்ப்பாணத்தில் ஒருவர் என்ற அடிப்படையில் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும், இந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் இயங்கும் பல்வேறுபட்ட தொண்டு நிறுவனங்களாலும் 3,518,685 சதுர மீற்றர் பரப்பு மொத்தமாக மிதிவெடி அக்கற்றப்பட்டுள்ளதாகவும், இதில் பிரதேச செயலக ரீதியில் யாழ்ப்பாணத்தில் 1,082,614 சதுர மீற்றரும், நல்லூரில் 135,953 சதுர மீற்றரும், தென்மராட்சியில் 554,265 சதுர மீற்றரும், வடமராட்சி வடக்கில் 108,086 சதுர மீற்றரும், வடமராட்சி தெல் மேற்கில் 62,893 சதுர மீற்றரும், வலிகாமம் கிழக்கில் 846,192 சதுர மீற்றரும், வலிகாமம் வடக்கில் 220,668 சதுர மீற்றரும், வலிகாமம் தெற்கில் 386,958 சதுர மீற்றரும், வலிகாமம் தென்மேற்கில் 116,331 சதுர மீற்றரும், வலிகாமம் மேற்கில் 4,725 சதுர மீற்றரும் என்ற அடிப்படையில் இவ் ஆண்டு மட்டும் பிரதேச செயலக ரீதியாக மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும், மாவட்ட மிதிவெடி செயற்பாட்டுத் தகவல் பிரிவினர் தெரிவித்தனர். (90)




விமலனின்

# என்றும் ஒலிக்கும் ஜெய பேரிகை...

சௌரவ் கங்கூலி அணியிலிருந்து நீக்கப்பட்ட விவகாரம் இந்திய நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என்றவாறான செய்திகள் அடிபடும் ஒரு நிலையில் - இங்கிலாந்து நாடாளு மன்றத்தில் சச்சின் டெண்டுல்கருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து தொழிலாளர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபன் பவுண்ட் - சச்சின் டெண்டுல்கர் 35 டெஸ்ட் சதங்களை அடித்து உலக சாதனை படைத்துள்ளார். இது பாராட்டுதலுக்குரிய விடயமாகும். கிரிக்கெட் உலகில் எல்லோராலும் புகழ்ந்து பேசப்படும் பிரட்மன், ஜேக் ஹோப்ஸ், சுனில் கவாஸ்கர், விவியன் றிச்சர்ட்ஸ் ஆகியோர் வரிசையில் தற்போது டெண்டுல்கரும் இடம்பிடித்துள்ளார் என்று பாராட்டியுள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் அதிக சதங்கள் சாதனையைச் சமப் படுத்தல், முறியடித்தல், 10 ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டுதல் என்பன முக்கிய மைல்கற்களாக விளங்குகின்றன. அவ்வாறே டெஸ்ட் போட்டிகளிலும் இவற்றோடு கிரிக்கெட் பிதாமகர் பிரட்மனின் சதச் சாதனையை சமப்படுத்தல், முறியடித்தல் என்பனவும் பெருமைக்குரிய விடயமாக விளங்குகின்றன.

விளையாட்டில் வெற்றி தோல்விகள் சகஜம் என்றாலும் இவ்வாறான முக்கிய மைல்கற்களை சம்பந்தப்பட்ட வீரர்கள் தாண்டும் போட்டிகளில், அவர் சார்ந்த அணியும் வெற்றிபெற் றால், அந்த உலக சாதனையின் பெறுமதி இன்னும் கனதியான தாகவே காணப்படும்.

உதாரணத்துக்கு டெஸ்ட் போட்டிகளில் அதிக சதம் தவிர்ந்த ஏனைய மைல்கற்களை ஸ்ரீவ்வோ, லாறா போன்றவர் கள் கடந்து உலக சாதனை புரிந்தாலும், அந்தப் போட்டிகள் அனைத்திலும் அவரவர் சார்ந்த அணிகள் வெற்றி பெற்றிருக்க வில்லை. கிரிக்கெட் என்பது தனிநபர் சம்பந்தப்பட்ட விளை யாட்டல்ல என்பதால், இதற்கு அவர்களை மட்டும் பாத்திர வாளிகளாக்க முடியாது. இருப்பினும் ஒரு ஒப்பியல் நோக்கில் இந்தப் பத்தியை எழுதுவதற்காக இப்படியொரு கண்ணோட் டம் அவசியமாகிறது.


பிரட்மன் - சச்சின்
என்னைப்போல் ஒருவன்

இந்த வகையில் அவுஸ்ரேலிய வெற்றிக் கப்டனான ஸ்ரீவ்வோ 2002/03 ஆஷஸ் தொடரின் சிட்னியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 10 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்றிருந்த போதும் அந்தப் போட்டியில் அவுஸ்ரேலியா இங்கிலாந்திடம் படுதோல்வியடைந்திருந்தது. அவ்வாறே லாறாவின் சாதனைகளும் மேற்கிந்தியத்தீவுகளின் அண்மைக் காலத்திய மோசமான செயற்பாடுகளால் தோல்வியடைந்த போட்டிகளிலேயே நிகழ்த்தப்பட்டிருந்த துர்ப்பாக் கிய நிலையையும் ரசிகர்கள் அவதானித்திருப்பார்கள்.

ஆனால் சச்சின் டெண்டுல்கர் இந்த முக்கிய மைல்கற்களை கடந்த போட்டிகளிலெல் லாம் இந்திய அணியும் வெற்றிபெற்றிருக்கிறது.

இந்தவகையில் சச்சின் பிரட்மனின் 29 சதச் சாதனையைச் சமப்படுத்தியது 2001/02 காலப்பகுதியில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக போட் ஒவ் ஸ்பெயினில் நடைபெற்ற போட்டியில் .சச்சின் இதில் 117 ஓட்டங்களைக் குவித்தபோது இந்தியஅணியும் 37 ஓட் டங்களால் வெற்றி பெற்றிருந்தது.அவ்வாறே சச்சின் பிரட்மனின் சதச்சாதனையை முறி யடித்தது 2002 இங்கிலாந்து லீட்ஸ் மைதானத்தில். இந்திய அணி இனிங்ஸ் மற்றும் 46 ஓட்டங்களால் இங்கிலாந்தை வென்றபோது சச்சின் 193 ஓட்டங்கள் அதில் குவித்திருந்தார்.

கவாஸ்கரின் சாதனையை சமப்படுத்தியது பங்களாதேஷுக்கு எதிராக சென்ற வருட இறுதி யில். சச்சின் ஆட்டமிழக்காமல் பெற்ற 248 ஓட் டங்களால் இந்திய அணியும் பங்களாதேஷை இனிங்ஸால் வென்றிருந்தது. அவ்வாறே இப்போது கவாஸ்கரின் சாதனையை இலங்கைக் கெதிரான டெல்கி டெஸ்டில் 109 ஓட்டங்கள் குவித்து முறி யடித்தபோது, இந்திய அணியும் 188 ஓட்டங்க ளால் மாபெரும் வெற்றி பெற்றிருந்தது.

சச்சின் டெஸ்ட் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களை இவ்வருடம் மார்ச் பகுதியில் கொல் கத்தாவில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதி ரான டெஸ்ட் போட்டியில் கடந்தபோது - இந் திய அணி 195 ஓட்டங்களால் வெற்றி பெற்றி ருந்தது. இந்தப் போட்டியின் இரண்டு இனிங்ஸ் களிலும் சச்சின் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்னொரு புறம் ஒருநாள் போட்டிகள் என்று வரும்போது அதிக சதம் (17) குவித்த டெஸ் மண்ட் கெயின்ஸின் சாதனையை சச்சின் சமன் செய்தது - 1997/98 இல் கொழும்பில் நடை பெற்ற இலங்கையின் பொன்விழா சுதந்திரக் கிண்ண இறுதிப்போட்டியில். சச்சின் 128 ஓட் டங்களை குவித்ததோடு இந்திய அணிக்கு சுதந்திரக் கிண் ணத்தையும் வென்று கொடுத்திருந்தார்.

இது நடந்து இரண்டாவது போட்டியிலேயே சிம்பாப்வேக்கெதிராக புலவாயோவில் நடைபெற்ற போட்டியில் ஆட்டமிழக் காமல் பெற்ற 127 ஓட்டங்கள் மூலம் டெஸ்மண்ட் கெயின்ஸின் சாதனையை முறியடித்து இந்திய அணியையும் வெற்றிபெறச் செய்தார்.

2001/02 இல் இந்தியாவின் இந்தூரில் நடை பெற்ற அவுஸ்ரேலியாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் 139 ஓட்டங்களை அநாயாசமாகக் குவித்து ஒருநாள் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வீரரானார். அத்தோடு அந்தத் தொடரில் இந்திய அணியையும் 2:1 என்று முன்னிலைப்படுத்தவும் இந்தச் சதம் உதவி யிருந்தது.

எனவே சாதனை நாயகன் சச்சினின் பயணம் வெற்றிப் பயணமாகவே தொடர்கிறது என்பதற்கு இதை விடவா வேறு ஆதாரம் தேவை.

நிர்மலனின்

# இவனமாகக் காயபதியங்கள்

இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் ராகுல் டிராவிட் அணித்தலைமைக்கு நிரம்பவே பொருத்தமானவர் தான். ஆனால் அந்தப் பதவி வந்தவிதம் இன்னொருவரின் வீழ்ச்சியில் ஆரம்பத்தில் இருந்து தொடங்கியது என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் டிராவிட் யாரை யும் நோகச் செய்யும் எந்தக் காரியத்தையும் செய்துவிடவில்லை என்பதும் உண்மை. இப்போது டிராவிட் அணித் தலைவராகிய பின் அவரது இயல்புகள். குண நலன்கள், ஆளுமை வெளிப் பாடு என்பன பற்றிச் சஞ்சிகைகள் எழுதோ எழுதென்று எழுதித் தள் ளுகின்றன. (டிராவிட் கவனம்! இப்படித்தான் கங்கூலி பற்றியும் புகழ்ந்து தள்ளினார்கள்)


சௌரவ் கங்கூலி
சிலுவையில் அறைந்து விட்டார்கள்

ராகுல் டிராவிட் ஒருநாள் தானும் இந்திய அணியின் தலை மைப் பதவியை ஏற்கக் கூடும் என்று விரும்பியதாகக் கூறுகிறார். ஆனால் அது கிடைக்கும் என்று நினைத்திருக்கவில்லை என்கிறார். உண்மையில் டிராவிட் உடைய யாரையும் நோகப் பண்ணாத இயல்பு அவருக்கு உயர்ச்சியைக் கொடுத்தி ருப்பதாகக் கருதப்படுகின்றது. முன்பிருந்த அணித் தலைவர்களை விட நான் புதிதாக என்னத் தைச் செய்துவிட முடியும். ஒரு அணித்தலை வர் என்ற வகையில் அணியின் அனைத்து வீரர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டும். அணித்தெரிவு விட யங்களில் நான் தலையிட விரும்புவ தில்லை. அது என் வேலையல்ல. தரு கின்ற அணியைத் திறம்பட நடத்துவதே என் வேலை. கள அமைப்புப் பொறுத்துக் கூட அவரது கருத்து வித்தியாசமானது. களத்தை அமைத்துக் கொடுப்பது மைதா னப் பொறுப்பாளர்களின் வேலை. அதில் நான் ஏன் கருத்துச் சொல்ல வேண்டும். யாரும் கூடாத களம் அமைக்க முயல்வதில்லை. எனவே அமைக்கப்பட்ட களத்தில் நாங்கள் விளை யாட வேண்டியது எங்கள் கடமை என்கிறார். இவை எல்லாவற்றையும் பார்க்கும்போது இவருக்கென்று ஒரு தனித்துவம் இல்லையா? இவர் குரல் கொடுக்கும் ஆற்றல் அற்றவரா? அல்லது நமக்கேன் சோலி பிரகிருதியா என்று புரிந்து கொள்ளமுடிய வில்லை.


ராகுல் டிராவிட்
பாதையில் பள்ளத்தாக்கு கவனம்


டிராவிட், கங்கூலி இரு வரும் 1996இல் ஒரே காலப் பகுதியில் சர்வதேச கிரிக் கெட்டில் அறிமுகமானவர் கள். டிராவிட்டும் கங்கூலியும் ஒரே முகாமில் வாழ்ந்தாலும் இருவரும் முற்றும் வித்தியாசமான இயல்பைக் கொண்டவர்கள். இவரைப் பற்றி கும்ளே, லக்ஸ்மன், முரளி கார்த்திக், ஹர்பஜன்சிங் எல்லோரும் பெரி தும் புகழ்ந்து பேசுகிறார்கள். இவர்கள் கங்கூலியை இலகுவாக மறந்துவிட்டார்கள் போலத் தெரிகின்றது.

டிராவிட் பந்து வீச்சாளர்களின் கருத்தைக் கூடுதலாக மைதா னத்தில் மதிப்பவர் என்ற கருத்துண்டு. நான் ஜவகல் சிறீநாத், வெங்கடேஷ் பிரசாத், அனில் கும்ளே போன்றவர்களின் விளையாட்டை அருகிருந்து பார்க்கும் சந்தர்ப்பம் பெற்றவன். அவர்களின ஆளுமை பற்றி நன்கறிந்தவன் என்ற வகை யில், பந்து வீச்சாளர்களின் கருத்துக்களைக் கூடுதலாக மதிக்கிறேன். அது வெற்றியையும் தருகிறது என்கிறார்.

கங்கூலியின் தலைமையின் கீழ் நான் உபதலை வராக கணிசமான காலம் கடமையாற்றியவன். அவர் பட்ட நெருக்கடிகளை நன்கறிவேன். அதுவே எனக்கு ஒரு அனுபவமாகும் என்றும் கூறுகின்றார். இப்படியாக டிராவிட் யாரும் நோகாமல் பார்த்துக்கொள்கிறார். மற்றோரும் டிரா விட்டை அதீதமாகவே புகழ்ந்து தள்ளிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுதுள்ள யதார்த்த நிலையில் டிராவிட்டின் கொடி பறக்கிறது. ஆனால் இவரது சோதனைகள் இன்னும் சரியாக ஆரம்பிக்கவில்லை. வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் குறிப்பாக 2007 உலகக் கிண்ணப் போட்டிகள் என்று விரிந்து பரந்து செல்லும்போது தான் டிராவிட்டின் தலைமையின் பலம், பலவீனங்கள் சரியாகத் தெரியவரும்.

என்னவாக இருந்தாலும் அணித்தலைமையை எதிர்பார்த்திராத டிராவிட் அணித் தலைமையை சிறப்பாகக் கொண்டு செல்வதற்கு சாமரம் வீசுதல்களைப் பெரிதாக கணித்துக் கொள்ளமாட்டார் என்று நம்பலாம். ஏனெனில் ஏதோ ஒரு நேரத்தில் டிராவிட் பலவீனமுறும் போது மலர் சொரியும் கரங்கள் கற்கள். மண்ணை அள்ளிச் சொரியும் என்றும் தெரியும். தனது வீட்டுக்குப் பொலிஸ் பாதுகாப்புத் தேடவேண்டிய நிலை வரும் என்றும் தெரியும். எனவே டிராவிட் டிராவிட்டாக இருந்து கொள்வதே நல்லது. இது டிராவிட் அறியாததொன்றல்ல.


முகமட் அலி - லைலா அலி
விளையாட்டுக்கென்ன வேலி

மக்டலினின்

# ஒரு வீரனும் அவன் மகளும்

முன்னாள் குத்துச்சண்டை வீரர் காசியஸ்கிளே அல்லது முகமட் அலி அவர்தம் விளையாட்டுத்துறை பொறுத்து ஒரு சக்கரவர்த்தி. அறுபத்து மூன்று வயதாகும் முகமட் அலி கடந்த வாரம் ஜேர்மனி வந்திருந்தார். ஜேர்மனியில் வழங்கப்படும் மிக உயர்ந்த விருதொன் றைப் பெற்றுக்கொள்வதற்காகவே இவர் வந்திருந்தார். ஜேர்மனியின் அணு விஞ்ஞானி யான ஒட்டோ ஹான் (1879–1986) என்பவரின் பெயரால் வழங்கப்படும் இவ்விருதையே முகமட் அலி பெற்றிருக்கிறார். இந்த விருதை வழங்கியிருப்பவர்கள் ஐக்கிய நாடு கள் சபையின் ஜேர்மன் சமூகத்தினர் என்ற அமைப்பினராகும். இவர் தன் வாழ்நாள் முழுவதும் அமெரிக்க மக்களின் உரிமைகளுக்கா கப் போராடும் அமைப்புகளுடன் இணைந்து ஆற்றிய பணிகள், கறுப்பின மக்களின் மீட்சிக்காக ஆற்றிய பணி அதோடு ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு நல்லெண்ணத் தூதராகச் செயற்பட்டமை போன்றவற்றைக் கருத்தில் எடுத்தே இந்த மதிப்புக்குரிய விருது இவருக்கு வழங்கப்படுகிறது.

பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்ட இவர் தனது உடல் உபாதையின் காரணமாக பத்திரிகையாளர் மாநாட்டில் மனைவியைக் கலந்துகொள்ளும்படி கேட்டிருந்தார். முகமட் அலி பார்கின்ஸன் நோயால் பாதிக்கப்பட்டவர்.

தன் கணவர் சுகமாகவே இருக்கிறார் என்ற கூறும் லோணி, இவர் குத்துச் சண்டை போட்டி களில் மும்முரமாக ஈடுபட்ட காலத்திலேயே சமாதானத் தூதராகத்தான் இருந்தார் என்பவர், எமது மகளின் குத்துச்சண்டை போட்டியொன்றை நாம் இப்போது பார்ப்பதற்குக்கூட செல்லப் போகின்றோம் என்று கூறியவர், அவர் ஒரு இஸ்லாமியர் என்ற வகையிலும் மனிதன் என்ற வகையிலும் பெண்கள் குத்துச்சண்டை பற்றி தனது தனித்துவமான கருத்துக்களையே கொண்டிருந்தா லும், தன் மகள் குத்துச்சண்டை வீராங்கனையாக இருப்பது பற்றிப் பெருமிதம் கொண்டவ ராகவே காணப்படுகிறார்.

இதுவரை தோல்வியைச் சந்திக்காத லைலா அலி சுவீடன் நாட்டின் ஆசா மாரியா சண் டெல் எனும் வீராங்கனையைச் சந்திக்கப் போகிறார். லைலா அலி இப்போட்டியில் வென்றால் அவர் வெல்லும் இருபத்திரண்டாவது வெற்றியாக இது இருக்கும். அந்த வெற்றியைக் காண முகமட் அலி மிக ஆர்வமாக இருக்கிறார் என்றும் கூறியிருக்கிறார்.

ஜோசப் கிருஷ்ணாவின்

# கூண்டோடு கலையுங்கள்



விவியன் றிச்சட்ஸ் உங்களாலும் முடியாது

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணிக்கு தோற்பதென்பதே ஒரு பழக்கமாக மாறிவிட்டதென்று அங்கலாய்க்காத கிரிக்கெட் ரசிகர்களே இருக்க மாட்டார்கள். அண்மையில் அவுஸ்ரேலிய அணியுடனான மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வி கண்டது மேற்கிந்திய தீவுகள் அணி. தற்போது மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் அணித்தலைவரும் புகழ் வாய்ந்தவருமான விவியன் றிச்சட்ஸ் எவ்வாறு அணியை மேம்படுத்தலாம் என்பது பற்றிப் பேசுகிறார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளின் அரசாங்கங்கள் இப்பிராந்திய கிரிக்கெட் மீட்சி பற்றி அக்கறை செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார் றிச்சட்ஸ். கிரிக்கெட் என்பது கரிபியன் கிரிக்கெட் நாடுகளின் சமூக பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்பு கொண்டது என்றும் ஒவ்வொருவரும் இதில் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்கிறார். இவர் குறிப்பாக தன் குற்றச்சாட்டுகளை மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் (WICB ) சபை மீது சுமத்துகிறார்.

அணி தன்மீதான சுய நம்பிக்கையை இழந்துவிட்டது. இதனைக் கட்டி வளர்க்க தகுதி வாய்ந்த தனிநபர்களின் பங்களிப்பு அவசியம். அப்படியான தகுதி வாய்ந்த நபர்களே மேற்கிந்தியக் கிரிக்கெட் சபையில் இருக்கவேண்டும். தற்போதுள்ள சபை கையாலாகாத் தன்மை கொண்டதாக இருக்கிறது. இவர்களை அணியின் தன்னம்பிக்கையையோ, கௌரவத்தையோ கட்டிவளர்க்க இவர்களால் முடியாது. இவர்கள் பதவிகளில் இருந்து ஒதுங்கிக் கொள்வதே மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் மீட்சிக்கு இவர்கள் செய்யும் உதவியாக இருக்கும் என்கிறார்.



பிறைன் லாரா பழியிலிருந்து தப்ப முடியாது

இந்தச் சபையால், மேற்கிந்தியத் தீவுகளின் விளையாட்டு வீரர்கள் சபையை வசியப்படுத்த இயலவில்லை. தம்வழிக்குக் கொண்டுவர இயலவில்லை. இதனாலேயே இலங்கைக்கு மூன்றாம் நிலை அணியொன்று செல்ல வேண்டிய அவல நிலையேற்பட்டது. நான் சிலகாலம் மேற்கிந்தியக் கிரிக்கெட் அணி பயிற்றுனராக இருந்தேன். அவ்வேளையில் காத்திரமான பல மாற்றங்களை ஏற்படுத்த விரும்பினேன். ஆனால் அதற்கு பல்வேறு தடைகள் இருந்தன. இதனாலேயே நான் ஒதுங்கிக் கொண்டேன். இப்போதும் நான் தயார். ஆனால் ஒத்துழைப்புக் கிடைக்குமா என்று தெரியவில்லை. தற்போதுள்ளவர்கள் 2007 உலகக் கிண்ணப் போட்டிகள் வரை பதவியில் இருப்பார்கள். உலகக் கிண்ணப் போட்டிகளையும் சிறப்பாக நடத்துவார்கள். ஆனால் மேற்கிந்திய அணியின் நிலையை எவ்வாறு முன்னேற்றுவது? அதுவல்லவா முக்கியம்.

இவர் சொல்வதில் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை ஒரு பாதையில் செல்ல, மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் வீரர்கள் இன்னொரு திசையில் சென்று கொண்டிருக்கிறார்கள். இதேவேளை பல்வேறு நாடுகளுக்கும் இடையில் தம் வீரர்கள் அங்கத்துவம் பெறுவது தொடர்பான போட்டிகள், மனக்கசப்புகள் இதற்கு மேலாக BASKET BALL, BASE BALL போன்ற அதிகளவு பணம் சம்பாதிக்கக் கூடிய விளையாட்டுக்களை நாடும் இப்பிராந்திய இளைஞர்களின் மனப்பாங்கு. இவை எல்லாவற்றையும் கடந்து மேற்கிந்தியத் தீவுகள் மீண்டும் ஒரு பலமிக்க அணியாகி, சர்வதேச கிரிக்கெட் உலகில் தடம் பதிக்க முடியுமா சந்தேகம் தான்.

ஜெராட்டின்

# எல்லாம் வெறும் கனவா?



மரியன் ஜோன்ஸ் என்ன வாழ்க்கையப்பா இது

கடந்த ஒருவருடமாக கலிபோர்னியா சார்ந்த பால்கோ (Balco) நிறுவனம் மற்றும் ஒருசில சர்வதேச விளையாட்டு வீரர்கள் சார்ந்த ஊக்கமருந்துப் பாவனை விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்த நிறுவனம் வழங்கிய சில மருந்து வகைகள் தடைசெய்தலுக்கு உட்பட்டவை என்ற வகையில் இந்த விசாரணைகள் இருந்தன. இதன் முடிவாக முன்னர் 100 மீற்றர் ஓட்டச்சாதனை நேரத்தைத் தன்னகத்தே கொண்டிருந்த அமெரிக்கரான ரிம் மொண்ட்கொமரி இருவருட காலம் சர்வதேச தடகளப் போட்டிகளில் பங்கு கொள்வதில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளார். இவர் 2002 ஆண்டு நடைபெற்ற பாரிஸ் கிரோண் பிரி இறுதிப்போட்டியில் 9.78 செக்கன்களில் 100மீற்றர் தூரத்தைக் கடந்தவர். இதனைத்தான் பின்னர் ஜமெய்க்காவின் அஸாபா பவல் 9.77 செக்கன்களில் ஓடி முறியடித்து உலக சாதனை படைத்தார்.

ஊக்கமருந்துப் பாவனை தொடர்பான தீர்ப்பில் 2001 மார்ச் 31 ஆம் திகதி முதல் இவர் பங்கு கொண்ட தடகளப் போட்டிகள் யாவும் ரத்துச்செய்யப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டதுடன் இவரது இக்காலத்துக்கான தடகள வருமானங்கள் பறிமுதல் செய்யப்படவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த வகையில் இவர் தனது பெருமை, பொருள், பண்டம் எல்லாவற்றையும் இழந்துவிடுவார் போலத் தோன்றுகின்றது. பாரிஸ் கிரோண் பிரி போட்டிகளில் முதன்மைத் தடகள வீரராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த இவர் அதற்காகப் பெற்றுக் கொண்ட பரிசுத் தொகை மட்டும் 100,000 அமெரிக்க டொலர்களுக்கு மேல். இது இலங்கைப் பணப் பெறுமதியில் ஒருகோடி ரூபாவுக்கு மேல் வரும் என்பது தெரிந்ததே.

ஊக்கமருந்துப் பாவனைக் குற்றச்சாட்டில் இதற்கு முன்னர் ஒலிம்பிக் தங்கம் வென்ற கெலிவைற், அல்வில் ஹரிசன், மிசேல் கொலின்ஸ் ஆகியோர் தடை செய்யப்பட்டுள்ளனர். ரிம் மொண்ட் கொமரியும் மற்றவர்களும் தண்டிக்கப்பட்டுள்ள இவ்வழக்கில் மேன்முறையீடு செய்வதற்கு இடமே இல்லையென்று அறிவிக்கப்பட்டும் விட்டது.



ரிம் மொண்ட் கொமரி சரிந்தது சாம்ராஜ்யம்

இந்த விடயங்களின் பின் ரிம் மொண்ட் கொமரி தான் தெரிந்து எதுவித ஊக்க மருந்தையும் உட்கொள்ளவில்லை என்று உறுதியாகத் தெரிவிக்கிறார். இதே வேளை இவரது வாக்குமூலங்களைப் பயன்படுத்தி இவரது முன்னாள் தோழி மரியன்ஸ் ஜோன்ஸையும் இந்த விடயத்தில் குற்றவாளியாக்கிவிட ஊக்கமருந்து பாவனைத் தடுப்பு கொமிஷன் முயற்சிப்பதாக இவர் கருதுகின்றார். சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் ஐந்து பதக்கங்கள் பெற்றவர் மரியன் ஜோன்ஸ். இவருக்கும் ரிம் மொண்ட் கொமரிக்கும் இடையே மலர்ந்த நட்பின் பலனாக இரண்டு வயது ஆண் குழந்தையொன்று இவர்களுக்கு உண்டு. இப்போது மரியன் ஜோன்ஸ், ரிம் மொண்ட் கொமரியை விட்டு பிரிந்துவிட்டார். ஊக்கமருந்துப் பாவனை விடயத்தில் மரியன் ஜோன்ஸை குற்றவாளியாக்கிவிட நான் எவ்வகையிலும் காரணமாக இருக்கமாட்டேன். அவருக்கும் எனக்கும் எவ்வித பகையும் இல்லை என்பவர், நான் எனது சர்வதேச தடகள வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெறுகிறேன். ஆனால் நான் எவ்வித குற்றமும் செய்யவில்லை என்று துயரத்துடன் முடிக்கிறார்.

லிவிங்ஸ்ரனின்

# தங்கமான தலைமைகள்



மக்முட் அகமடி னேஜாட் சூரியவீச்சு

இது சின்னச்செய்தியென்றாலும் வாசிக்கும் போது மனச்சுமை குறைந்து மயிலிறகாய் வருடுகிறது. ஈரான் எமது ஆசிய நாடு, பழம் பெருமை வாய்ந்த நாடு. நீண்டகாலமாகவே மேற்குலகத்துக்கும் ஈரானுக்கும் ஆகாது. அண்மைக்காலத்தில் அணு ஆயுதங்கள் தயாரித்தல் தொடர்பான சர்ச்சையில் மேற்குலக நாடுகள் ஈரான் நாட்டை "தீட்டுப்பட்டவன்" "தீண்டத்தகாதவன்" என்ற மாதிரியாக ஓரம்கட்ட முனைகிறார்கள்.

இது இப்படி இருக்க 2006ஆம் ஆண்டில் ஜேர்மனியில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டிகளில் பங்கு கொள்ளவிருக்கும் நாடுகளில் ஈரானும் ஒன்று. இப்ப என்னடாவென்றால் அரசியல் கருத்துவேறுபாடுகளை வைத்து ஈரானை உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்றுவதில் இருந்து தடைசெய்யவேண்டும் என்ற கோஷம் எழும்பியிருக்கிறது. இங்குதான் FIFA இன் தலைவர் நூற்றுக்கு நூறு கனவானாக நடந்து கொண்டிருக்கிறார். பல நாட்டுத் தலைவர்கள், ஏன் ஐரோப்பாவில் இருந்து கூட ஈரானுக்கு எதிராக பெருத்த குரல் எழுப்புகிறார்கள். ஆனால் உதைபந்தாட்டத்தில் அரசியலுக்கு இடமில்லை. நாங்கள் அரசியல் சார்ந்த அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டு இருக்கப்போவதில்லை. அது எமது FIFA இன் கொள்கைக்கு முரணானது என்று கச்சிதமாகப் பதில் அளித்துவிட்டார். இதேபோல FIFA இன் இன்னொரு குரல் தரவல்ல அதிகாரி ஈரான் உலகக் கிண்ண இறுதிப் போட்டிகளில் பங்கு கொள்ளத்தகைமை பெற்றுவிட்டது. அதோடு ஈரான் நாட்டின் உதைபந்தாட்ட சபை எந்தத் தவறையும் செய்திருக்கவில்லை. அவர்களை ஏன் தடைசெய்ய வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்.



செப் பிளட்டர் இதமாக இருக்கிறது

எனவே ஈரான் மீது சேறு பூச முனைபவர்கள் தாமே வழுக்கி விழுந்து போய்க்கிடக்கிறார்கள் FIFA இன் முன்னால். இப்படியான சந்தர்ப்பங்களில் தான் நொந்து போனவர்களை நோகடிக்கும் அதிகாரம் இருந்தும் அப்படி எடுப்பார் கைப்பிள்ளையாகிப்போய் பழியைத் தேடிக்கொள்ளாமல், நீதியின் பால் நிற்போர் மீது உயர்ந்த மதிப்பு ஒன்று மக்கள் மனதில் ஏற்படும். இதுதான் இப்போது FIFA தலைவர் செப் பிளட்டர் மீது எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

2002 உலகக் கிண்ணப்போட்டிக்குத் தகுதி பெறத் தவறிய ஈரான், இந்தமுறை தகுதி பெற்று தமது முதல் ஆட்டத்தை ஜூன் 11 2006 இல் மெக்சிக்கோவுக்கு எதிராக விளையாடவிருக்கிறது. அதையடுத்து போர்த்துக்கல், அங்கோலா நாடுகளுடன் ஈரான் மோதும். ஆசிய இரத்தம் ஓடும் ஈரானுக்கு எமது வாழ்த்துக்கள்.

விளையாட்டு அரங்கம்

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# பேரினவாத ஆக்கிரமிப்புக்கு பயந்து அடங்குபவர் அல்ல தமிழ் பெண்கள்

## கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பேரவை

கிளிநொச்சி—

புங்குடுதீவில் சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பு இராணுவத்தினரின் பாலியல் பசிக்கு இரையான சகோதரி இளையதம்பி தர்சினியின் சம்பவம் - தமிழ்ப் பெண்கள் அனைவருக்கும் கடும் விசனத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது என கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் தமிழ்ப் பெண்களின் மீது வயது வேறுபாடின்றி பாலியல்துன்புறுத்தல்களும், பாலியல் வன்முறைகளும் தொடர்ச்சியாக நடந்த வண்ணமேயுள்ளன.

அதிலே அண்மையில் பலி கொள்ளப்பட்டவர் இளையதம்பி தர்சினி. 1958ஆம் ஆண்டு தமிழ்ப் பெண்களின் மார்பிலே இரும்புச் சூட்டுக்கோலால் சிங்கள சிறி எழுத்து பொறிக்கப்பட்ட கொடூரம் நடந்தேறியது. 1983ஆம் ஆண்டு இனக்கலவரமென்ற பெயரில் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கையில் 600 பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து தமிழினம் மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரப்புப்போரின் போது பெண்களின் மீது பாலியல் வன்முறைகளும், படுகொலைகளும் மேற்கொள்ளப்பட்ட வண்ணமே இருந்து வருகின்றது.

இவ்வாறு பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ள போதும், இப்படியாக வெளியில் வந்த சம்பவங்களே மிக அரிது.

இன்று உலகெங்கும் மனித உரிமை பற்றியும் அதிகம் பேசப்படுகின்றது. ஆனால், தமிழ்ப் பெண்களினதும், தமிழினத்தினதும் அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதை எவருமே இன்று வரை அதிகம் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. இதனை எவ்வாறு நாம் பொறுத்துக் கொள்ளமுடியும்.

தற்போது யாழ். மாவட்டத்தில் நடக்கின்ற சம்பவங்கள் மிகவும் மோசமானவை. புதிய ஜனாதிபதி பதவியேற்றுள்ள நிலையில் சமாதான முயற்சிகள் தொடர வேண்டுமென முனைப்பாகச் செயற்படுகின்ற இந்நிலையில், சிங்கள பேரினவாத மனோபாவம் கொண்ட ஆட்சியாளர்களின் ஏவற் படைகள் யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தி வரும் பயங்கரவாத நடவடிக்கைகளும், அதற்குச் சாதகமான சூழலை ஏற்படுத்துகின்ற அவசர காலச் சட்டமும் மக்களின் இயல்பு வாழ்வை சிதைத்துள்ளது.

தமிழ்ப் பெண்கள் வீட்டினுள் முடங்கிக் கிடப்பவர்கள் இல்லையென்பதை கடந்த கால வரலாறுகளின் மூலமாக உலகம் நன்கறியும்.

எமது பாதுகாப்பை நாமே கையிலெடுத்துப் போராட வேண்டிய கட்டாயம் அனைத்துத் தமிழ்ப் பெண்களுக்கும் ஏற்பட்டுள்ளது. இளையதம்பி தர்சினி மீதான பாலியல் வல்லுறவையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

போர் நிறுத்தக் காணிப்புக் குழு மூலமாக உண்மை நிலைமை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டுமென நாம் எதிர்பார்க்கிறோம் - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேட்டு நிலப் பயிர்ச்செய்கை, கடலுணவு சந்தைப்படுத்தல் பயிற்சித் திட்டங்கள் மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் பொருண்மிய மதியுரையகத்தால் கடலுணவு சந்தைப்படுத்தலுக்கான பயிற்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஐ.எல்.ஏ மற்றும் டானிடா நிறுவனங்களின் ஒரு லட்சத்து 95 ஆயிரம் ரூபா நிதியுதவியுடன் இந்தப் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட 6 கடலோரக் கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் கடலுணவைச் சந்தைப்படுத்தக் கூடிய 2 பயனாளிகளைத் தெரிவுசெய்து, அவர்களிற்கு பயிற்சிகள் வழங்குவதுடன் துவிச்சக்கரவண்டி, மீன் பெட்டி, தராசு போன்ற உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை- மேட்டு நிலப் பயிர்ச்செய்கைப் பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஐ.எல்.ஏ. மற்றும் டானிடா நிறுவனங்களின் இரண்டு லட் சத்து 12 ஆயிரம் ரூபா நிதியுதவியுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இந்தப் பயிற்சி - மடுப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பரிசங்குளக்கிராமத்தில் 10 பயனாளிகளுக்கு பரீட்சார்த்தமாக வழங்கப்பட்டது.

இவர்களுக்கு அவரை இனத் தானியங்கள், பயன்தரு மரங்கள் என்பன வழங்கப்பட்டன.

# பெரிய பரந்தன் பிரதேசத்தில் நடைபெற்ற சமுதாய அபிவிருத்தித்திட்ட அறிமுகவிழா

பரந்தன்—

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் கார்ப் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சமுதாய அபிவிருத்தித்திட்ட அறிமுகவிழா - பெரிய பரந்தன் கிராமத்தில் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை மாவீரரின் துணைவியார் சுவிதா ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த மு.பாலசுப்பிரமணியம் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை ஆர்.டி.எஸ். தலைவர் சி.சிவபாதசுந்தரம், கிராம அலுவலர் கனகராசா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அறிவிப்புப் பலகையை கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் சத்தியசீலன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

நிகழ்வின் தலைமையுரையை சி.கணேஸ்வரன் நிகழ்த்தினார். சிறப்புரையை கண்டாவளை உதவி அரச அதிபர் சத்தியசீலன் நிகழ்த்தினார்.

கருத்துரைகளை ஆர்.டி.எஸ். தலைவர் சி.சிவபாதசுந்தரம் நிகொட் திட்ட வெளிக்கள அலுவலர், கிராம அலுவலர், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த மு.பாலசுப்பிரமணியம் ஆகியோர் நிகழ்த்தினர்.

திட்ட விளக்கவுரையை தமிழர் புனர்வாழ்வு நிகொட் திட்ட இணைப்பாளர் என்.சுதர்சன் நிகழ்த்தினார்.

நன்றியுரையை சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சிறி நிகழ்த்தினார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# வவுனியா பழைய பூங்கா வீதியில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு!

வவுனியா—

வவுனியா பழைய பூங்கா வீதியில் வீதியோரமாக கைவிடப்பட்ட நிலையில், வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று இராணுவத்தினரால் மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் 1மணிக்கு விசேட அதிரடிப் படையினரின் முகாமிலிருந்து 75மீற்றர் தூரத்தில் கைக்குண்டு இருப்பதை அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் கண்டுபிடித்தனர்.


இதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவ முகாமிற்குத் தெரியப்படுத்தியதையடுத்து அங்கு பெருமளவில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

அத்துடன் சம்பவ இடத்திற்கு வந்த இராணுவத்தினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் செயலிழக்க செய்த பின்னர் அதனை எடுத்துச் சென்றனர்.


இதனையடுத்துச் பெருமளவான இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடத்தினர்.

இதேவேளை- இந்த வீதியில் அமைந்திருந்த அணைத்துப் பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியத்தின் வவுனியா வளாக அலுவலகமும் இராணுவத்தினராலும், பொலிஸாராலும் கடுமையான சோதனைக்குட் படுத்தப்பட்டது.

(03)



கிளிநொச்சி மாவட்ட யேசு சபை அகதிப் பணியினரால் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தாளையடி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மாணவர்களுக்கு சேமிப்பு வைப்புச் செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களைப் படத்தில் காணலாம்.



## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசெம்பர் - 25

440: இந்த ஆண்டின் இந்த நாள் முதல்தான் கிருஸ்துவின் பிறந்த நாள் முறையாகக் கொண்டாடப்பட ஆரம்பிக்கப்பட்டது.

1800: கிடைக்கக் கூடியதாயிருக்கும் எழுத்துக் குறிப்பின்படி முதன் முதலாக கிறிஸ்துமஸ் மரம் நிறுவப்பட்டது. பிரிட்டனில் விண்ட்ஸரில் ஒரு விடுதியில் மன்னர் மூன்றாம் ஜோர்ஜ்ஜின் மனைவி ராணி சோபியா கிறிஸ்துமஸ்ஸிற்காக குழந்தைகளுக்கு ஒரு விருந்தளித்தார். அந்த விருந்து மண்டபத்தின் நடுவே ஒரு கிறிஸ்துமஸ் மரம் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஏராளமான இனிப்புகள், பழங்கள், பொம்மைகள் என்பன தொங்கவிடப்பட்டிருந்தன. அங்கு வந்திருந்த குழந்தைகளுக்கு அந்த மரத்திலிருந்து இனிப்புகளும், பழங்களும், பொம்மைகளும் பறித்துக் கொடுக்கப்பட்டன.

1821: முதலாவது மின் மோட்டார் ஆய்வினை மைக்கல் பரடே வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்.

1892: சுவாமி விவேகானந்தர் தமிழ் நாட்டின் கன்னியா குமாரியிலுள்ள கடலின் நடுவிலிருக்கும் ஒரு பாறையில் அமர்ந்து தனது மூன்று நாள் தியானத்தைத் தொடங்கினார்.

1909: ப்ளோரிடாவில் ஜாக்ஸன் வில்லிக்கு கிழக்கே பெர்முடா முக்கோணத்தில் அண்ணா ஆர் பிஷப் என்னும் பாய்மரக் கப்பல் ஏழு பேருடன் காணாமற்போனது.

1914: முதல் உலகப் போரின்போது பதுங்கு குழிகளிலிருந்த ஜேர்மன், பிரிட்டன் படையினர் கிறிஸ்துமஸ் தினத்தை ஒட்டி அதிகாரபூர்வமற்ற போர் நிறுத்தம் செய்து கொண்டனர். இரு தரப்பினரும் ஒரு மைதானத்தில் கால்பந்து விளையாட்டிலும் ஈடுபட்டனர்.

1932: சீனாவில் கான்சு என்ற இடத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் ஏறக்குறைய 70,000 பேர்கள் உயிரிழந்தனர்.

1941: லெனின் கிராட்டில் 3000 இற்கும் மேற்பட்டவர்கள் பசியால் உயிரிழந்து கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

1943: பறக்கும் குண்டுத் தளங்கள் என அழைக்கப்பட்ட பிரான்ஸிலிருந்த ஏழு தளங்களை ஜேர்மனி விமானங்கள் குண்டு வீசி அழித்தன.

✕ : அமெரிக்கக் கடற்படை வீரர்கள் நியூ பிரிட்டனில் தரையிறங்கினர்.

1944: பிலிப்பைன்ஸ் முழுவதையும் அமெரிக்கப் படையினர் ஜப்பானிடமிருந்து மீட்டனர். இப்போரின் போது ஜப்பான் தரப்பில் 70,000 படையினரும், அமெரிக்க தரப்பில் 3500 படையினரும் பலியாகினர்.

1946: சீன தேசிய சட்ட சபை - அனைவருக்கும் வாக்குரிமை, தனிநபர் உரிமை, அரசியல் சமநிலை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் புதிய அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டது.

1950: தலாய்லாமா திபெத்திலிருந்து தப்பியோடிவிட்டதாக சீனா அறிவித்தது.

1973: ஸ்கைலாப் - 4 என்ற விண்வெளி ஆய்வு ஓடத்தில் சென்ற விண்வெளி வீரர் விண்ணில் 7மணி ஒரு நிமிடம் நடந்து சாதனை படைத்தார்.

1978: செப்டெம்பர் 3ஆம் திகதி ஏவப்பட்ட வெனீரா - 11 என்னும் விண்கலத்திலிருந்த கோளிறங்கு கலம் வெள்ளிக்கிரகத்தின் வளிக்கோளத்தில் ஏற்பட்ட மின்னல்களைப் பதிவு செய்துஅனுப்பியது.

✕ : கம்போடியா மீது வியட்நாம் படையெடுத்தது.

1979: எதுவித முன் எச்சரிக்கையும் கொடுக்காமல் விமானங்கள் மூலம் காபூல் விமான நிலையத்தில் வந்திறங்கிய 5000 சோவியத் படை வீரர்கள் அந்த விமான நிலையத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்.

1989: ரூமேனியா சர்வாதிகாரி நிகோலாய் செயஸ்க்குவும், அவரது மனைவி எலினாவும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1991: சோவியத் யூனியன் கலைக்கப்பட்டு, அது தனித் தனிக் குடியரசாகப் பிரிந்து சிதறியது. சோவியத் யூனியனின் கடைசி ஜனாதிபதியான மிகெயில் கொர்ப்பச்சேவ் பதவி விலகினார்.

தொகுப்பு:- சந்துரு

நமது ஈழநாடு

## வைர வரிகள்

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

*- திருக்குறள் -*

## நமது நோக்கு

# தலைக்கு மேல் போகப்போகும் வெள்ளம்...

இலங்கையின் வடபகுதியில் நிலவும் நெருக்கடி நிலையானது மிகவும் அபாயகரமானதொன்றாக மாறிவருகின்றது... இதனால் போர்நிறுத்த உடன்படிக்கை மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் கூறியுள்ளமையானது சூழலின் யதார்த்தத்தை வெளிப்படுத்துவதாக இருந்தாலும், இந்த நிலைமையானது மோசமடையும்வரை பார்த்திருந்துவிட்டு கடைசி நேரத்தில் அபாயச் சங்கை ஊதுவதுதான் முரண்நிலையாக உள்ளது.

உண்மையில், விடுதலைப்புலிகள் அரசின் சமாதானப் பேச்சு நகர்வுகளின் மீதான நம்பகத்தன்மையை இழந்து பேச்சுக்களில் இருந்து இடைவிலகிய நாட்தொட்டே ஆரம்பமான இந்த அபாயத்திற்கான சூழலை மாற்ற எப்போதோ இறுக்கமான முடிவுகளை - நடவடிக்கைகளைப் புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையில் மேற்கொண்டிருக்க வேண்டிய சமாதான அனுசரணையாளர்களும், சர்வதேச சமூகமும் இலங்கையரசின் நேர்மையற்ற - அரசியல் மற்றும் இராணுவ உள்நோக்கங்களுடன் கூடிய நகர்வுகளை இனங்கண்டு தடுக்கவும், சிங்கள ஆட்சித் தலைமைகளை நேர்மையுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபடுமாறு அழுத்தம் கொடுக்கவும் தவறியமையே இன்றைய நெருக்கடிச் சூழலுக்கு மூல காரணமாகும்.

புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம் இந்த நான்காண்டு காலப்பகுதிக்குள் தமிழ் மக்கள் முற்றிலும் தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்பியிருக்க வேண்டும். உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளில் இருந்து படையினர் வெளியேறி அச்சமற்ற சூழலில் மக்கள் வாழத் தொடங்கியிருக்க வேண்டும். தமிழ் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டிருக்க வேண்டும்...இப்படிப்பல அத்தியாவசியங்கள் யதார்த்தமாயிருக்க வேண்டும்.

- ஆனால், இவையெதுவும் நிகழவேயில்லை.

- அரசாங்கம் இவற்றை நிறைவேற்றிவைக்க, சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவில்லை. இந்த நான்காண்டு சமாதான சூழல் மேலும் அவலங்களையும், இழப்புக்களையும், துயரங்களையும் மட்டுமல்ல, நம்பிக்கையற்ற எதிர்காலத்தையும் நிரந்தரமாக்கியுள்ளதென்றே கூறவேண்டும்.

- போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும், சமாதான அனுசரணையாளர்களும், ஏன் சர்வதேச சமூகமும்கூட, தமிழ் மக்களை மட்டுமல்ல, உலகையே ஏமாற்றி தந்திரோபாய அறிவிப்புகளையும், பொய்யான பிரசாரங்களையும் மேற்கொள்ளும் சிங்கள ஆட்சித் தலைமைகளையும், தொடர்ந்தும் தமிழ் மக்களை ஆயுத முனையில் அடக்க முனையும் படைத்தரப்பினரையும் கண்டு கொள்வதாகவே இல்லை.

தமிழர்களின் பொறுமை எல்லை மீற இவையாவுமே காரணிகளாகும். பேச்சுவார்த்தை - சமாதானம் - அரசியற்தீர்வு என்ற அனைத்திலும் அவர்கள் நம்பிக்கையிழக்க இவர்கள் அனைவரினதும் மேம்போக்கான நடவடிக்கைகளே காரணம்.

புரிந்துணர்வு உடன்பாட்டை ஒழுங்காக - கண்ணியமாக - ஒப்புக்கொண்ட பிரகாரம் அரசு நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று நிலைமை இப்படி இருந்திருக்காது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் இவ்வாறு கவலை தெரிவித்து அறிக்கை விட்டிருக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்காது.

கடந்த வாரங்களில் இலங்கை வந்த ஜப்பானிய விசேட தூதரான யசூசி அகாஷியை வன்னி செல்ல அனுமதியளிக்க மறுத்த அரசு... இன்று நெருக்கடி அதிகரித்ததும் இணைத் தலைமை நாடுகளின் தூதர்கள் அனைவரையும் வன்னி செல்ல அனுப்பிவைப்பதற்கான காரணம்தான் என்ன?

இந்தக் கேள்வி குறித்த விடையைத் தேடுவது சமாதான அனுசரணைப் பணியாளருக்கே அவசியமானதாகும்.

ஏனென்றால் அது பல முக்கியமான செய்திகளை அவர்களுக்கு தெரிவிப்பதாகவும் இருக்கும்.


இதேவேளை - நாட்டிலுள்ள சில சக்திகள் யுத்த நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருள் ஒருவரையொருவர் சீண்டிவிட முயற்சிக்கின்றன. இதனாலேயே போர்நிறுத்த உடன்பாடு மிகவும் அபாயமான சூழலுக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் கண்காணிப்புக்குழுத்தலைவர் கூறியிருக்கின்ற போதிலும் அந்தச் சக்திகள் எவையென அவர் குறிப்பிடவில்லை.

உண்மையில் சமாதானத்துக்கு விரோதமான, நோர்வேயின் அனுசரணைப் பணியை எதிர்க்கின்ற, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரை நிராகரிக்கின்ற சக்தகள்தான் இன்றைய சூழலைக் கொந்தளிப்பு நிலைக்குள்ளாக்கி வருகின்றன என்பது வெளிப்படை.

அவை எவையென்பது சமாதான அனுசரணைப் பணியாளருக்கும், இணைத்தலைமை நாடுகளுக்கும், ஐரோப்பிய ஒன்றியம் உட்பட அனைத்து மேற்குலக சமூகத்துக்கும் தெரியாததா என்ன?

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*

## நாடும் நடப்பும்




# முஸ்லீம் இளைஞர்கள் மீது படையினர் தாக்குதல்

யாழ்ப்பாணம்

யாழ்.நகரில் மௌலவி உட்பட, ஆறு முஸ்லிம்கள் இராணுவத்தினரால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் ஒஸ்மானியா கல்லூரிக்கு சமீபமாக வீதியில் நின்றிருந்த இரண்டு இளைஞர்களை அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினரே கடுமையாகத் தாக்கினர். அத்துடன் ஐந்து சந்தி, ஒட்டுமடம் ஆகிய இடங்களி லும் நின்றிருந்த நான்கு பேர் அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரால் தாக்கப்பட்டனர்.

முஸ்லிம் இளைஞர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முஸ்லிம்களின் மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி சகீல், ஒஸ்மானியா கல்லூரி இராணுவ முகாம் அதிகாரியைச் சந்தித்து பேசுவதற்காகச் சென்றவேளை, அவரும் தாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

முஸ்லிம் இளைஞர்கள் மோசமாக இராணுவத்தால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழு யாழ். அலுவலகத்திலும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு யாழ். அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இலட்சார்ச்சனையும் பொங்கல் விழாவும்

யாழ்ப்பாணம்

மருதனார் மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இலட்சார்ச்சனை கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. இது தொடர்ந்து ஜனவரி 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஹனுமத் ஜயந்தி உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு 108 கலச அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூஜை நடைபெறும். அன்றைய தினம் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை வருடாந்த ஆஞ்சநேயர் பொங்கல் விழாவும் நடைபெறும்.

# வெள்ளிக்கிழமை மாலை இரண்டு படையினர் காயம்!

யாழ்ப்பாணம்

திருநெல்வேலி மேற்கிலும், இருபாலையிலும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற இரண்டு தாக்குதல்களில் இரு படையினர் காயமுற்றதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

இருபாலையில் இராணுவ ரோந்து அணி மீது நேற்றுமுன் தினம் மாலை 4.20 மணியளவில், மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கிரனேட் ஒன்றை வீசித் தாக்கியதில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இதேவேளை - திருநெல்வேலி மேற்கில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் இராணுவ நிலை மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் ஆரியரத்ன என்ற சிப்பாய் காயமடைந்தார்.

இரு சம்பவங்களிலும் காயமுற்ற படையினர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை - நுணாவில் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் ஆயுதம் தாங்கிய புலிகளின் குழு மீது படையினர் தாக்குதல் நடத்தியபோதும் அவர்கள் தப்பிவிட்டதாகவும் -

அவர்களுக்கு உதவிய முருகதாஸ் திபாரூபன் (வயது 18) என்பவர் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

# கல்வி சாரா ஊழியர்கள் பற்றாக்குறை பாடசாலையில் நாளாந்த பணிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் உள்ள கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்விசாரா ஊழியர்கள் பற்றாக்குறை நிலவிவருவதாக யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் தி.வெ. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கல்வி வலயங்களுக்குக் கீழ் இயங்குகின்ற பெரும்பாலான பாடசாலைகளில் கல்விசாரா ஊழியர்களுக்கு நீண்டகாலமாக பற்றாக்குறை நிலவிவருகின்றது. கல்விசாரா ஊழியர்களின் பற்றாக்குறையால் பாடசாலைகளின் நாளாந்த கடமைகளை முன்னெடுக்க முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எழுதுநர், நூலகர், சிற்றூழியர்கள், ஆய்வுகூட உதவியாளர் போன்ற பதவிகளுக்கு நீண்டகாலமாக பற்றாக்குறை இருந்து வருகின்றது என்றும், இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டபோதிலும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தமாத இறுதியில் அமைச்சரவை மாற்றம்!

கொழும்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை மாற்றம் இம்மாத இறுதியில் நடைபெறக் கூடும் என்று அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

வரவு - செலவுத்திட்ட விவாதத்தின் போது எதிர்க்கட்சியின் விமர்சனங்களுக்கு இலக்கான அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து அவர் கவனம் செலுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற டலஸ் அழகப்பெருமாவுக்கு இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்று கூறப்படுகிறது.

அமைச்சுக்களைப் பகிர்ந்தளிக்கும் போது சில அமைச்சுக்களின் பொறுப்புக்கள் மாறியிருப்பதனால், தங்களால் சரியான தீர்மானங்களை எடுக்க முடியாதிருப்பதாக அமைச்சர்கள் புகார் செய்துள்ளனர்.

தங்களின் அமைச்சுக்களைப் பொறுப்பேற்று ஒரு மாத காலமே ஆகியுள்ள நிலையில் - மகிந்த சிந்தனைகளுக்கமைய அவர்கள் மேற்கொண்டிருக்கும் செயற்பாடுகள் குறித்து மகிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தவுள்ளதாகவும் அலரி மாளிகைத் தகவல்கள் தெரிவித்தன.

# சுனாமி நிரந்த வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நாளை

வடமராட்சி

போரூட் நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட இன்பருட்டி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லைப் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு நிரந்தர வீடுகள் கையளிக்கும் நிகழ்வும் மீன்சந்தை, விளையாட்டு மைதானம் புனரமைப்பு செய்யப்பட்டு கையளிக்கும் நிகழ்வும் சுனாமி நிகழ்ந்த நாளாகிய நாளை இன்பருட்டி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் காரியாலயத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இன்பருட்டி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.சற்குணம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சுனாமி வீடமைப்புத் திட்டமேலதிக அரசாங்க அதிபர் பி.செந்தில் நந்தனன், கௌரவவிருந்தினர்களாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், யாழ்.போரூட் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் என்.கோகுலதாஸ், நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் கே.தர்மலிங்கம், திட்டமுகாமையாளர் கண்ணன், சக்கோட்டை பங்குத்தந்தை ம.பத்திநாதர் ஆகியோரும் -

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் எம்.ராஜ்குமார், பருத்தித்துறை பிரதேச சபை சங்கச் சமாசச் செயலாளர் கே.சூரியகுமாரன், சுனாமிச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.சந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.



# தடைகளை நீக்கும் வேளையே தவிர அழுத்தங்களை விதிக்கும் நேரமல்ல...!

**அவுஸ்திரேலியாவிலிருந்து சபேசன்**

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கடந்த 17 ஆம் திகதி கிளிநொச்சி சென்று சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணித் தலைவரான பெ.சந்திரசேகரன் - ஆறுமுகம் தொண்டமான் சு.ப. தமிழ்ச் செல்வனை சந்திக்கச் சென்றுள்ளதானது உலகின் கவனத்தைத் தமிழ் மக்களின் பால் ஈர்க்கின்ற வரலாற்று நிர்ப்பந்தம் என்று குறிப்பிட்டுள்ளார். அத்தோடு 'மலையக வாழ் தமிழர்கள் வேறு, வடக்கு - கிழக்குத் தமிழர்கள் வேறு, கொழும்பு வாழ் தமிழர்கள் வேறு என்கின்ற ரீதியில் நாம் பிளவு பட்டுப் பிரிந்து நிற்பது எதிரிகளுக்கு சாதகமே தவிர, வேறு எந்தப் பயனையும் நமது சமூகத்திற்கு ஏற்படுத்தப் போவதில்லை. சகல இலங்கை வாழ் தமிழ் மக்களும் ஓரணியில் திரண்டால் எந்தச் சவால்களையும் முறியடித்துச் சாதிக்க முடியும்.' என்றும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இப்போது நடைபெற்ற இச்சந்திப்பின் அடிப்படையிலும், ஏற்கனவே நடந்து முடிந்து விட்ட பல சம்பவங்களின் அடிப்படையிலும், சில கருத்துக்களை முன் வைத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குரிய, எதிர்கால நகர்வுகளை தர்க்கிப்பதுவே எமது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர ஆறுமுகம் தொண்டமானுடனான சந்திப்பின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது - தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பல முக்கியமான விடயங்களைத் தெரிவித்திருந்தார். அவற்றில் ஒன்று தமிழீழத் தேசியத் தலைவரின் நெடுநாளைய எதிர்பார்ப்பாகும். 'அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஒருங்கிணைந்து தமிழ் மக்களுடைய பிரச்சினைகளில் இணைந்து செயற்பட வேண்டும்'. என்பது தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பாக இருந்தது என்பதையும், 'தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும். ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்' என்பதைத் தேசியத் தலைவர் அவர்கள் முன்னைய பல சந்திப்புக்கள் ஊடே தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளார் என்பதையும் தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார்.

தமிழீழ தேசியத் தலைவரின் தீர்க்க தரிசனமான பார்வையும், சிந்தனைகளும் யதார்த்தமாகி வருவதை நாம் இப்போது காண்கின்றோம். ஆறுமுகம் தொண்டமான் சிங்களப் பேரினவாதத்தின் அழுத்தத்தை தாங்கமுடியாமல் தமிழீழத்தை நோக்கி ஓடிவந்திருக்கவும் கூடும். ஆயினும் தற்போதைய மற்றும் முன்னைய அரசியல் வரலாற்றை இந்தச் சந்தர்ப்பத்தில் மீட்டிப் பார்ப்பது பொருத்தமாக இருக்கக்கூடும்.!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்னரும் ஒரு தடவை, தமிழ் கட்சிகளின் கூட்டணியில் இணைந்திருந்தமை பலருக்கு ஞாபகத்தில் இருக்கக் கூடும். தமிழர் விடுதலைக் கூட்டணியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அங்கம் வகித்தது. பின்னாளில் மெதுவாக விலகியது. ஆயினும் அன்றைய தினம் அதாவது 1972 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கீழ்வருமாறு கூறினார். 'இந்த நாட்டில் வாழ்கின்ற மலையக வாழ் தமிழர்கள் இப்போது ஒரு விடயத்தை உணர்ந்திருக்கின்றார்கள். இலங்கைத்தீவில் வாழ்கின்ற சகல தமிழர்களும் ஒரு தலைமையின் கீழ் அணி திரள வேண்டும்.! (ஆதாரம்: CEYLON DAILY NEWS 11.10.1972)

அப்போது தேசியத் தலைவருக்கு 18 வயதுகூட ஆகவில்லை!

இன்று தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலின் கீழ் தமிழர் தேசத்தின் மிகப்பெரும்பான்மையான பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டு ஒரு நிழல் அரசாங்கத்தின் கீழ் இயங்கி வருகின்றது. பலத்தின் அடிப்படையில். தமிழர் தேசம் தனது உரிமைக்குரலை எழுப்பி வருகின்றது. இந்த வேளையில் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட இருப்பதானது சிங்கள தேசத்திற்கு மட்டுமல்ல, சர்வதேச நாடுகளுக்கு ஒரு பலத்த குரலின் ஊடாக, ஒரு பலமான குரலின் ஊடாக ஒரு செய்தியை தெரிவித்து நிற்கின்றது.

'தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்கான வேட்கையை சம்பந்தப்பட்டவர்களாகிய நீங்கள் தொடந்தும் அலட்சியப்படுத்தி வருவதை நாம் இனியும் பொறுத்திருக்க முடியாது! நீதியை நிலைநாட்டுவதற்கு நீங்கள் முன்வாருங்கள்! இல்லாவிட்டால் நாங்களே எமக்குரிய நீதியைப் பெறுவதற்கு செயலாற்ற முன்வருவோம்.!

இந்தச் செய்தியும் அதற்குரிய செயல் வடிவமும் மிக்குறுகிய கால அவகாசத்தில் எரிமலையாய் எழுந்து நிற்கப் போகின்றதை நாம் இப்போதே உணரக் கூடியதாக இருக்கின்றது.

இந்தவேளையில் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும், சரியான நிதர்சனத்தை, நேருக்குநேர் சந்திக்கவேண்டிய சந்தர்ப்பம் நெருங்கி விட்டது என்றே நாம் கருதுகின்றோம்., சிங்களப் பேரினவாத அரசுகள் தமிழ் மக்களிடையே பிரிவைத் தொடர்ந்து திட்டமிட்டுச் செயல்படுத்தி வந்துள்ள உண்மையை தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்களில் எல்லாம் இப்போது பெருவாரியாகச் சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்துள்ளமையை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அம்பாறை மாநிலம் முன்னர் இருந்த நிலைமையையும, தற்போது உள்ள நிலைமையையும் முஸ்லிம்கள் சீர்தூக்கி பார்க்க வேண்டும். முஸ்லிம் மக்களுடைய தலைமைகள் இவை குறித்து ஒரு போதும் அலட்டிக் கொள்வதேயில்லை. மாறாக தமது தலைமைத்துவத்தையும், பதவிகளையும் நிலை நிறுத்திக் கொள்வதற்கே முக்கிய அக்கறை காட்டி வருகின்றன. தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதைத் தவிர்த்து, தமது பதவி மற்றும் அதிகார தேவைகளுக்கே முஸ்லிம் தலைமைகள் முதலிடம் கொடுத்து வந்துள்ளன.

இந்தவேளையில் ஒரு யதார்த்தத்துக்கு நாம் முகம் கொடுத்தாக வேண்டும். இது இந்தக் காலகட்டத்தில் மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

சிங்கள பேரினவாதம் என்பதானது, தனக்குள் எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றை புறந்தள்ளி ஒரு முகமாக ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதை வரலாறு சுட்டிக்காட்டி நிற்கின்றது. சிங்களப் பேரினவாதம் தனக்குள்ளே இருக்கும் பிரிவினைகளைப் புறம்தள்ளி தமிழ்த் தேசியத்திற்கு எதிராக எப்போதும் செயல்பட்டு வந்துள்ளது. அதேவேளை தமிழ்த்தேசியம் பிரிவுற்று நிற்க வேண்டும் என்பதற்காக தனது முழுமையான சக்திகளை பிரயோகித்தும் வந்துள்ளது.

அதாவது சிங்களப் பேரினவாதம் தம்மிடையே உள்ள பிரிவினைகளைப் புறம் தள்ளுகின்ற அதே வேளையில் தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை உடைக்கின்ற செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இந்த வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் தற்போதைய நிகழ்கால விடயங்களையும் நாம் தர்க்கிக்க விழைகின்றோம்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தைகளுக்கான சமாதானக் கரத்தை நீட்டியிருக்கின்றார் என்று பல செய்தி ஊடகங்கள் புளகாங்கித்து செய்திகளை வெளியிட்டு வருகின்றன. அதேவேளையில் சமாந்தரமான வேறுசில விடயங்களும் அரங்கேறி வருகின்றன. உண்மையில் அவை முன்னரும் அரங்கேறி வந்தவை தான்.!

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் கூட்டம் 19.12.2005 அன்று பெல்ஜியத்தின் தலைநகர் பிரசெல்சில் நடைபெற்றது. இலங்கைக்கு நிதி உதவி வழங்குவது குறித்து மட்டுமல்ல, தற்போது முடங்கிப் போய்க்கிடக்கும் பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்குவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

முன்னைய காலங்களில் இவ்வாறான நிதி உதவி வழங்கும் நாடுகளின் கூட்டங்கள் நடைபெறும் போதெல்லாம் அப்போதைய சிங்கள அரசுகளும் பேச்சுவார்த்தைகள் குறித்துப் பேசி வந்துள்ளன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எப்போதெல்லாம் இவ்வாறான மாநாடுகள் நடைபெறுகின்றனவோ அப்போதெல்லாம் சிங்கள அரசுகள் சமாதானம் குறித்தும், சமாதானப் பேச்சுக்கள் குறித்துப் பேசுவதும், பின்னர் பழையபடி கடும் போக்கை கடைப்பிடிப்பதும், முன்னரும் அரங்கேறிய விடயங்கள் தான்.!

கடந்தகால வரலாறு வேறு ஒரு விடயத்தையும் நிரூபித்து நிற்கின்றது. கடுமையாகப் போர் நடந்த காலங்களில் இலங்கையின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டபோது சிங்களப் பேரினவாதிகள் சமாதானம் பற்றி பேசுவதும், சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆதரிப்பதும் வழக்கமாகும். அதேபோல் சமாதானத்துக்கான காலத்தின்போது பொருளாதார மேம்பாட்டை ஓரளவு பெற்றுவிட்ட பின்னர், இதே பேரினவாதிகள் சமாதானத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பதும் வழக்கமாகும்.

கடந்த நான்கு ஆண்டு காலப்பகுதி, தமிழ் மக்களுக்கு நியாயமான எதையுமே பெற்றுத் தரவில்லை. சுனாமி ஆழிப் பேரலை அழிவு வந்து நாளையுடன் ஓராண்டு ஆகப் போகின்றது. தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நிவாரணத்தையும் இலங்கையின் நீதித்துறை தடைபோட்டு வைத்துள்ளது. தமிழ் மக்களுடைய வாழ்க்கை இயல்பு முறைக்குத் திரும்பவில்லை. தமிழ் மக்களுடைய தேசியப் பிரச்சினைக்கும் தீர்வு கிட்டவில்லை. தமிழீழத் தேசியத் தலைமை இக்கால கட்டத்தில் நீண்டதொரு நெகிழச்சிப் போக்கினைக் கடைப்பிடித்து பொறுமை கொண்டு காத்திருந்தது.

இப்போது அந்தப் பொறுமைக்குரிய காலம் கடந்து விட்டது.

ஆயினும் தமிழீழத் தேசியத் தலைவர் சிங்களத் தலைமைகளுக்கு இறுதியாக ஒரு கால அவகாசத்தை, குறுகிய கால அவகாசத்தை வழங்கியிருக்கின்றார். இந்தக் குறுகிய கால அவகாசம் குறித்து ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அது மிக முக்கியமான விடயமாகும்.

இந்தக் குறுகிய கால அவகாசம் கொடுக்கப்பட்டது உண்மையான, நேர்மையான சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்காகவே தவிர வீணாக இழுத்தடிக்கும் முயற்சிகளை மேற்கொள்வதற்காக அல்ல! இழுத்தடிக்கும் சமாதான முயற்சிகளை மேற்கொள்வதும் தேவையற்ற நிபந்தனைகளை விதித்துக கொண்டு காலத்தை இழுத்தடிப்பதும் நேர்மையான சமாதான முயற்சிகள் ஆகாது.

ஆசிய நாடொன்றில்தான் பேச்சுவார்த்தைகளை நடாத்த வேண்டும் என்றும், ஐரோப்பிய நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடை செய்யவேண்டும் என்றும், ஒற்றையாட்சி முறைக்குள்தான் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், இலங்கை அரசு கூறுவதும், அதற்கான செயற்பாடுகளில் இறங்குவதும் உண்மையான சமாதான முயற்சிகள் ஆகாது. அத்தோடு சர்வதேசப் பிரதிநிதிகள் மற்றும் ராஜதந்திரிகள் போன்றோர் தமிழீழப் பிரதேசங்களுக்குச் செல்வதை இலங்கை அரசு தடுத்து வருவதும், சமாதான முயற்சிகளுக்கு உகந்தது அல்ல!

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினையையும், நாளாந்த வாழ்வியல் பிரச்சினையையும் உரிய முறையில் தீர்ப்பதற்குரிய உகந்த முடிவு எடுக்கப்பட வேண்டும். அந்த முடிவை எடுக்க வேண்டியது சிங்கள தேசம்தான். உகந்த முடிவை எடுப்பதற்கான பொறுப்பும், துணிவும் சிங்கள தேசத்திற்கு இருக்கிறதா? இல்லையா என்பது மிக விரைவில் தெரிந்து விடும்.

மிக விரைவில் தெரிந்து விடும் என்று நாம் உறுதியாகக் கூறுவதற்குக் காரணம் இருக்கின்றது. தமிழீழத் தேசியதலைமை இதுவரை காலமும் கடைப்பிடித்து வந்த நெகிழ்ச்சித் தன்மையை எதிர்காலத்திலும் கடைப்பிடிக்கும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை! கடந்த நான்காண்டுக் காலத்தில் தமிழீழத் தேசியத் தலைமை நெகிழ்ச்சிப் போக்கை கடைப்பிடித்து வந்ததோடு, அதனூடே சமாதான முயற்சிகளுக்குத் தொடர்ந்தும் வாய்ப்பை வழங்கி வந்திருந்தது. ஆனால் சிங்கள பேரினவாதத்தின் கடும்போக்குக் காரணமாக உரிய முறையில் சமாதான முயற்சிகள் நகரவில்லை. ஆகவே தமிழீழத் தேசியத் தலைமை வருங்காலத்தில் நெகிழ்ச்சிப் போக்கினைக் கடைப்பிடிக்கும் என்று நாம் கருதுவதற்கில்லை.

## நெகிழ்சிப்போக்கு இனி இருக்காது!

தமிழீழத் தேசியத் தலைமையின் கீழ் இன்று தமிழீழ மக்கள் ஒன்றிணைந்து நிற்கின்றார்கள். தமிழீழத்திற்கு வெளியே உள்ள மலையக வாழ் தமிழ் மக்களும் தமிழ்க்கட்சிகளும் இன்று தமிழர்கள் என்கின்ற வகையில் ஒன்றிணைந்து ஒற்றுமையாக இருப்பதற்கு முன் வந்திருக்கின்றார்கள். சம்பந்தப்பட்ட உலக நாடுகளுக்கு இலங்கைத்தீவின் நிதர்சன நிலை நன்கு புரியும் என்றே நாமும் நம்புகின்றோம். இன்று உரிய சமாதானத்தீர்வு உருவாகாமல் இருப்பதற்கு காரணம் சிங்களப் பேரினவாத அரசுகளின் கடும் போக்கும், அநீதியான இவர்களுடைய கொள்கைகளும்தான் என்பதை சர்வதேச உலகம் நன்கறியும்.

ஆகவே உரிய சமாதானத்தீர்வு இலங்கையில் வரவேண்டும் என்று சம்பந்தப்பட்ட உலக நாடுகள் உண்மையாகவே விரும்பினால், அவை இலங்கை அரசிற்குப் பாரிய அழுத்தங்களைக் கொடுத்து அவை மூலம் உரிய சமாதானத் தீர்வு உருவாகுவதற்கான வாய்ப்பை உண்டாக்க வேண்டும். மாறாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தேவையற்ற அழுத்தங்களை சம்பந்தப்பட்ட உலக நாடுகள் விதிக்கும் பட்சத்தில், தங்களுடைய நம்பகத்தன்மையை இந்த உலக நாடுகள் இழந்துவிடும். அதுமட்டுமல்லாது தமிழீழ மக்களின் அரசியல் வேட்கைகளைப் பிரதிபலிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது எதிர் காலத்தில் தேவையற்ற அழுத்தங்கள் விதிக்கப்பட்டால் அவை ஈற்றில் பயனற்று, பலனற்று போகும் நிலைதான் உருவாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தேவையற்ற தடைகள் நீக்கப்பட வேண்டியதற்குரிய வேளைதான் இதுவே தவிர,தடைகள் போடப்படுகின்ற வேளையல்ல இது!

### கிறிஸ்மஸ் கவிதை

## பலூன்



வலுவோடு ஊதிய
பலூன் உடைந்தது
சவுக்கு மரங்களின்
சங்கீதம் திடீரெனவே
சோக கீதமானது
இடித்தது இதயம்
மழைகால மேகம் போல...

பாலகரைப் பறித்த
கோரச் சுனாமியும்
கொடுங்கோல் ஏரோதுவும்
கனவில் பேசினார்கள்.



எங்களின் ஆட்சிதான்
ஏன் தூங்குகின்றாய்
எழுந்து போ
யாரையாவது கொல்

எங்களின் மைந்தனே
சிங்கமாய் எழுந்துபோ...
திடுக்குற்று விழித்த போது
குடுகுடுத்த வயோதிபர் வழிகளில்
குழந்தையோடு சிரிக்கிறார்.

இடிந்த இதயத்திலிருந்து
வடிந்த அன்புத் துளிகளை
முடிந்த அளவு கொடுத்தனுப்பினேன்
என்ன அதிசயம்
குழந்தையின் கரங்களில்
அழகிய பலூன்



ஜோக்கியன்

# நோர்வேயில் பேச்சு நடத்தும்...

சீர்குலைந்துள்ள யுத்தநிறுத்தச் சூழலை எப்படி சீர்படுத்தலாம் என்பது பற்றியுமே தூதுக்குழுவினரின் அக்கறை இருந்தது. தகுந்த தெளிவான விளக்கத்தை தூதுக்குழுவினருக்குத் தெரிவித்துள்ளோம்.

அண்மைக்காலமாக தமிழ்மக்கள்மீது இராணுவம் கட்டவிழ்த்துவிட்டுள்ள கடுமையான வன்முறைச் சம்பவங்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

மக்கள் கொல்லப்படுவதும், தாக்கப்படுவதும் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

புங்குடுதீவிலேயே பெண் ஒருவரைக் கடத்திச்சென்று கடற்படையினர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி மிகக் கொடூரமாகக் கொலைசெய்து அந்தக் கொலையை மறைக்க முற்பட்டமை தமிழ்மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது என்பதை இந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டியுள்ளோம்.

பெண்கள் தொடர்பாகவும், சிறுவர்கள் தொடர்பாகவும் கரிசனை செலுத்துகின்ற இன்றைய உலகிலேயே குறிப்பாக சமாதான சூழல் என்று சொல்லப்படுகின்ற இன்றைய நிலையிலேயே கடந்தகாலத்தை நினைவூட்டுவதுபோல கிருசாந்தி, சாரதாம்பாள் போன்ற பல இளம் பெண்களைக் கடத்தி கொடூரங்களுக்கு உட்படுத்துவது என்பது அரச படைகளின் வழமையாக இருக்கின்றது.

தற்போதைய சூழலிலும் மனித இனமே வெட்கித் தலைகுனிய வேண்டிய மிக மோசமான கொடூரமான வன்முறையை எமது சகோதரி ஒருவருக்கு கட்டவிழ்த்துவிட்டதென்பது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இதன் விளைவாகத்தான் மக்கள் போராட்டங்களும், எதிர்ப்புக்களும் இடம்பெறுகின்றன.

மக்கள் போராட்டங்களை இராணுவத்தைக்கொண்டு அடக்கியமை பெரியளவில் வன்முறை வெடிக்கக் காரணமாக இருந்தது.

முக்கியமாக பல்கலைக்கழக மாணவர்கள், உபவேந்தர், பேராசிரியர்கள் தாக்கப்பட்டதும் சுட்டுக்காயப்படுத்தப்பட்டதும் மக்கள் கொல்லப்படுவதும் படையினருக்கும் மக்களுக்குமிடையே முறுகல் நிலையையே தீவிரமாக்கியுள்ளது.

இந்த நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதனால் உடனடியாக யுத்தநிறுத்த உடன்பாட்டை முழுமையாக அமுலாக்கம் செய்யவேண்டும்.

யுத்தநிறுத்த அமுலாக்கம் என்பது எல்லா விதத்திலும் மக்களுக்கு நல்லதைச் செய்கின்ற, இயல்பு நிலையைக் கொண்டுவருகின்ற இருதரப்பும் ஏற்றுக்கொண்ட சரத்துக்களைக் கொண்டது.

யுத்தநிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதற்கு சர்வதேச சமூகம் உதவவேண்டும். இலங்கை அரசாங்கம் முன்நிபந்தனைகளை விதித்து யுத்த நிறுத்த அமுலாக்க பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்பதை தவிர்க்கவேண்டும் என்பதை இந்தச் சந்திப்பில் விரைவாக எடுத்துவிளக்கியிருந்தோம்.

உண்மையிலேயே இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். தற்போது ஏற்பட்டுள்ள பதற்றமான சூழலைக் கருத்தில் எடுத்து நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இணைத்தலைமை நாடுகள் உடனடியாக வருகைதந்து எம்மைச் சந்தித்து கருத்துக்களை அறியமுற்பட்டது அடுத்த கட்ட நகர்வுகளைச் செய்வதற்கு பல ஆலோசனைகளை வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

இந்த விடயங்களில் அரச தரப்பு எவ்வளவு தூரம் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரும் என்பதுதான் இன்றைய நிலையில் கேள்வியாக உள்ளது.

கேள்வி:- அரச தரப்புடன் தூதுக்குழு சந்திப்பை முடித்து வருகை தந்ததால் அரச தரப்பிடம் இருந்து ஏதாவது யோசனைகள் கொண்டுவந்தார்களா?

பதில்:- தற்போது நெருக்கடி நிலைமையை எப்படித் தணிவுக்குக் கொண்டுவரலாம் என்பது பற்றிய ஆலோசனையை இரு தரப்புக்கும் வழங்கியுள்ளார்கள். இந்த ஆலோசனைகளில் யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றி இரு தரப்பும் பேசவேண்டும் என்பது முக்கிய ஆலோசனையாக இருந்தது. இதைத்தான் எம்மிடமும் தெரிவித்திருந்தார்கள்.

கேள்வி:- ஜப்பானில் பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டும் என்ற நிபந்தனை இருக்கும்போது தூதுக்குழுவினரின் பயணம்பற்றி?

பதில்:- ஜப்பான் தூதுவர்கூட வருகைதந்திருந்தார். எமது நிலைப்பாட்டை ஜப்பான் தூதுவருக்கும் எடுத்துவிளக்கினோம். ஜப்பானில் பேச்சுவார்த்தை நடத்துவதென்பதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. இருந்தாலும் நோர்வே அனுசரணைப் பணியை வழங்குவதாலும் அமைதி முயற்சிகளில் நோர்வே முக்கிய பங்கை வகிப்பதாலும் நோர்வே நாட்டிலேதான் முதற்கட்டப் பேச்சுவார்த்தையை நடத்துவது பொருத்தமாக இருக்கும்.

நோர்வேயின் அனுசரணையை எல்லோரும் ஏற்றுக்கொண்ட நிலையில் – நோர்வே ஒரு நடுநிலையான பொருத்தமான இடம். முதற்கட்டப் பேச்சுக்களை நோர்வேயில் நடத்துவதை எமது மக்களும் எமது தலைமைப்பீடமும் விரும்புகின்றது.

எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடாக நோர்வேயில் முதற்கட்ட யுத்த நிறுத்த அமுலாக்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்பதுபற்றி எமது தலைமைப்பீடம் உறுதியாக முடிவெடுத்துள்ளது என்பதுபற்றியும் அதற்கான காரணங்களையும் விளக்கினோம்.

அண்மைக்காலத்தில் மகிந்த ராஜபக்ஷவோ, ஆட்சிக் கூட்டில் உள்ளவர்களோ நோர்வே பற்றியும் ஐரோப்பிய ஒன்றியம் பற்றியும் கடுமையான விமர்சனங்களைச் செய்து நடுநிலைப் போக்குகளைப் பலவீனப்படுத்துகின்ற செயற்பாடுகளில் இறங்கிக் கொண்டு ஆசிய நாட்டில்தான் பேச்சுவார்த்தை, அனுசரணைப் பணி நோர்வேக்கு என்ற நிலைப்பாட்டை எடுப்பது அரசினுடைய முரண்பட்ட போக்கையும் தமிழ்மக்களுக்கு விதிக்கின்ற சதிமுயற்சியாகத்தான் அரசின் செயற்பாடுகளைப் பார்க்கவேண்டியுள்ளது.

இந்த இக்கட்டிலேயே இணைத் தலைமை நாடுகள் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும். நோர்வேயை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கின்றீர்கள். இணைத் தலைமை நாடுகள், உலக நாடுகள், இலங்கை அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் எல்லோரும் ஏற்றுக்கொண்ட சூழலில் அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேயில் பேச்சுக்களை நடத்தலாம் என்பது மிகப் பொருத்தமாக இருக்கும்.

முக்கியமாக பேச்சுக்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக இருக்கவேண்டும். யுத்த நிறுத்தத்தை அமுலாக்கம் செய்வதன் ஊடாக எமது மக்களை ஓரளவு அமைதிப்படுத்தலாம்.

மக்கள் மீது இராணுவ நெருக்குவாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு, மக்களை அமைதிப்படுத்தமுயன்றால், அது ஒருபோதும் வெற்றியளிக்காது.

இந்த நிலைமைகளைச் சுட்டிக்காட்டி நோர்வேயில்தான் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் என்பதை இந்தச் சந்திப்பில் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளோம். இதனை இலங்கை அரசாங்கத்துக்கும் மற்றும் அனைத்து தரப்புக்கும் எடுத்துச்சொல்வார்கள் என நம்புகின்றோம்.

கேள்வி - உலக வங்கி இலங்கைக்கு வழங்குகின்ற நிதியில் 51 வீதத்தை நிறுத்தியுள்ளது. இந்த நேரத்தில் தங்களுக்கு ஏதாவது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதா?

பதில் - அழுத்தம் என்பதைவிட தங்களுடைய ஆலோசனைகளைத்தான் வழங்கி இருக்கின்றார்கள். தற்போதைய நிலைமைகளின் தீவிர தன்மையை உணர்ந்தவர்களாக காணப்பட்டார்கள். அதாவது தற்பொழுது தமிழர் தாயகப் பகுதிகளில் மக்கள் மீது தீவிரப்படுத்தப்பட்டுள்ள வன்முறையில் அதன் எதிர்விளைவாக படைத்தரப்பிலே ஏற்பட்டுள்ள அழிவுகள் பற்றியுமே தூதுக்குழுவினரின் உடனடி கரிசனையாக இருந்தது.

[illegible]குச் செல்லவேண்டும் என்பதையே வலியுறுத்தினார்கள். ஏற்கனவே எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம்.

உடனடியாகவே பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவேண்டும். யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலாக்கம் கொண்டுவரப்படவேண்டும் என்பதில் எமது தலைமைப்பீடத்திற்கு இருவேறு கருத்து இல்லை. எமது தலைமைப்பீடம் உறுதியான நிலைப்பாட்டோடு உள்ளது.

ஆனால், பேச்சுவார்த்தை நடத்தும் இடம் தொடர்பாக நிபந்தனைகளை விதிப்பது ஏற்றுக்கொள்ளமுடியாது. சர்வதேச சமூகத்திடமிருந்து விடுதலைப் புலிகளையோ, தமிழ் மக்களையோ தொடர்புகளை அறுப்பதோ பலவீனப்படுத்துவதோ இவ்வாறான போக்கை அனுமதிக்கமுடியாது.

சர்வதேச சமூகத்தின் நடுநிலையும், சமதரப்பு என்ற ஏற்றுக்கொள்ளலும் ஆதரவுந்தான் சமாதானத்தின் ஒரு பக்கபலமாகவுள்ளது.



கேள்வி - சமாதானப் பேச்சுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகளுக்கு இரண்டாவது கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளதே?

பதில் - இதுவரை அவ்வாறான கடிதம் ஒன்றும் வரவில்லை. இங்கு வருகை தந்த இணைத்தலைமை நாடுகளின் தூதுக் குழுவினர் அரசு ஜப்பானில் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகத் தெரிவித்திருந்தார்கள்.

அதனை நாங்கள் நிராகரித்துள்ளோம். நோர்வேயில் முதற்கட்டப் பேச்சுக்களை தொடங்கி அடுத்த கட்டப் பேச்சுக்களை யோசிக்கலாம்.

அவசரமாக யுத்தநிறுத்த அமுலாக்கத்தில் எல்லோரும் கரிசனை கொள்ளவேண்டியவர்களாக உள்ளோம்.

இதுதான் வன்முறைகளை முடிவிற்கு கொண்டுவர உதவும். கடந்த நான்கு வருட யுத்தநிறுத்த சூழல் அமைதி முயற்சிகள் எல்லாம் எமது மக்களுக்கு வாழ்வியல் நெருக்கடியைக் கொடுத்துள்ளதே தவிர, எதுவித நன்மைகளையும் அளிக்கவில்லை.

இராணுவ நெருக்குவாரங்களும், அடக்கு முறைகளும் அதிகமாகிச் செல்கிறது. பொதுமக்கள் மீதான கொலைகளும், தாக்குதல்களும் குறிப்பாக இளம் பெண்களை கடத்தி படுகொலை செய்கின்றமை. இந்தப் போக்கு மக்களிடையே கொந்தளிப்பு நிலையை ஏற்படுத்தியுள்ளது. இராணுவம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஏற்று அதன்படி நடக்குமாக இருந்தாலே இயல்பு நிலையைக் கொண்டுவருவது சாத்தியப்படும். இதனை நாம் தெளிவாக விளக்கியுள்ளோம்.

கேள்வி : இணைத்தலைமை நாடுகளில் இந்தியாவையும் உள்ளடக்க அரசாங்கம் விரும்புகின்றது. இது பற்றி இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதா?

பதில் : இணைத்தலைமை நாடுகளில் புதிதாக எவரையும் இணைத்துக்கொள்வது பற்றி எந்த நாடும் உத்தியோகபூர்வமான கருத்தை முன்வைக்கவில்லை. ஊடகங்கள் மூலமாக மட்டுமே அறிகின்றோம்.

கேள்வி : மன்னாரில் இடம்பெற்ற தாக்குதலுக்கு அரசு விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டியுள்ளதே?

பதில் : இதை நாம் முற்றாக மறுக்கின்றோம். ஏனெனில், அண்மைக் காலமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பொதுமக்கள் வயதுவேறுபாடின்றி தாக்கப்படுகின்றார்கள், கொல்லப்படுகின்றார்கள்.

வன்முறைகள் மிகப்பரந்தளவில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இதன் எதிர்விளைவாகப் படையினருக்கும், மக்களுக்கும் மத்தியில் மோதல்கள் இடம்பெறுவதன் விளைவாக இவை நடந்திருக்கலாமே தவிர இதனை விடுதலைப் புலிகள் செய்யவேண்டிய தேவை இல்லை.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் இன்னும் மதித்து நடக்கின்ற போக்கையே கடைப்பிடித்து வருகின்றார்கள். விடுதலைப் புலிகள் இவ்வாறான தாக்குதலைச் செய்யவேண்டுமாக இருந்தால், யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக்கொண்டு தான் செய்வார்கள்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை மதித்துச் செம்மையாக நடைமுறைப்படுத்தவே எமது தலைமைப்பீடம் வலியுறுத்திக்கொண்டிருக்கின்றது.

கேள்வி : இந்தச் சந்திப்புக்குப் பின் நேரடிப்பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பமாவதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா?

பதில் : சர்வதேச சமூகத்தின் கரிசனையும், விருப்பமும் பேச்சுக்கள் உடனடியாகத் தொடங்க வேண்டும் என்பதுதான். சர்வதேச சமூகத்தினதும், தமிழ் மக்களினதும், விடுதலைப் புலிகளினதும் விருப்பங்கள் ஒன்றாகவே இருக்கின்றன. இதற்கு இணங்கிவர வேண்டியது இலங்கை அரசுதான்.

கேள்வி : சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களது நிவாரணம் தொடர்பாக?

பதில் : கடந்த நான்கு வருடங்களாக எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றி ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டினோம். பேச்சுவார்த்தைகளின் தொடக்கத்தில் இயல்புநிலையைக் கொண்டுவர இலங்கைப் படைகள் எப்படித் தவறியது? எப்படிப் பேச்சுக்கள் முடக்கப்பட்டன? உபகுழுக்கள் செயலிழக்கச் செய்யப்பட்டன.

பேச்சுவார்த்தைகள் முடக்கமடைந்த நிலையில், சுனாமி தாக்கி எங்களின் தேசம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. இந்த நேரம் அரசுடன் இணைந்து மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்திருந்தோம்.

சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களது அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட உடன்பாட்டைக்கூட எந்தவிதமான திருத்தங்களுமின்றி உடனடியாக ஏற்றுக்கொண்டு ஒப்பமிட்டோம். இதன் பின் பொதுக்கட்டமைப்பைச் சீர்குலைத்து எமது மக்களுக்குப் பெரும் அவலத்தை ஏற்படுத்தினார்கள்.

ஒரு வருடம் நிறைவடைந்தும் பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வளவு நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கின்றனர் என்பதை நேரடியாகத் தரிசிப்பவர்கள் உணரலாம்.

கேள்வி : ஏதாவது உதவி வழங்குவதாக கலந்துரையாடப்பட்டதா?

பதில் : இந்தச் சந்திப்பில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டது. உதவிகள் பற்றிய பேச்சுக்கள் அல்ல. ஆயினும் அவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். சர்வதேச சமூகம் தனது கவனத்துக்கு எடுக்கும் என நம்புகிறோம்.

கேள்வி : அரசாங்கத்தின் அழுத்தத்தின் காரணமாக வந்தனரா?

பதில் : அரசாங்கத்தின் அழுத்தம் போலத் தெரியவில்லை. இரு தரப்பையும் சந்தித்து இப்போது இறுக்கமடைந்திருக்கும் சூழலை இயல்பு நிலைக்கு கொண்டுவரும் முயற்சியாகவே சந்திப்பு இடம்பெற்றது.

கேள்வி : ஆயுதக்குழுக்களைக் களையவேண்டும் என்பது உடன்படிக்கையில் உள்ளது. இணைத் தலைமை நாடுகள் இது தொடர்பில் அழுத்தம் கொடுக்குமா?

பதில் : இணைத்தலைமை நாடுகள் பிரசெல்சில் எடுத்த தீர்மானத்தில் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. வன்முறைகளைத் தூண்டுகின்ற ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கின்றார்கள். தமிழர் தாயகத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகள் பல கட்டங்களில் விட்டுக்கொடுப்புக்களைச் செய்திருப்பதை பாராட்டினார்கள், ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

பொதுக் கட்டமைப்பில் கூட தலைமைப்பீடம் எவ்வளவு விட்டுக்கொடுப்புகளுடன் நடந்தது என்பதை கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டினார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

FedEx Express அனுசரணையுடன் FedEx Express
திருமுருகன் கொம் நெற்றின் பரிசு மழை
05.12.2005 முதல் 15.01.2006 வரை
எமது நிறுவனத்தின் மூலம் நத்தார், புதுவருட, பொங்கல் தினங்களை முன்னிட்டு உங்கள் உறவுகளுக்கு துரித கதியில் கடிதங்கள், உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களை அனுப்புவோரின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் குலுக்கலின் மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.
முதலாம் பரிசு - தங்கநாணயம் மற்றும் பெறுமதிவாய்ந்த 10 ஆறுதல் பரிசுகள்
மற்றும் 20% கழிவு
சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=
லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=
ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7560 Fax - 021 222 7310
26, செல்வப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253
முருகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993
வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.
யாழ். நகரில் இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
றெனி பல் மூக்கு கண்ணாடி அகம்
[RENNY OPTICAL SERVICE]
உங்கள் கண்களை "கொம்பியூட்டர்" மூலம் துல்லியமாகப் பரிசோதித்து, கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள
மிதப்புப் பற்களுக்கு "கிளிப்" செய்துகொள்ள
விழுந்த பற்களுக்கு நிகரான, உறுதியான "பற்களைப் கட்டிக்கொள்ள" நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
றெனி பல் மூக்கு கண்ணாடி அகம்
கிளைகள்
கண்டிவீதி, (பிரதேச செயலகம் அருகில்), சாவகச்சேரி.
பிரதான வீதி, (வேலாயுதம் மகா வித்தியாலயம்), பருத்தித்துறை.
வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily-of Tamils' Homeland

# தாமதமின்றி பேச்சுக்கள் தொடங்கப்படவேண்டும்!

## இந்தியத் தூதுவர் நிருபமா ராவ்

கொழும்பு —

எந்தவித தாமதமும் இன்றி சமாதானப் பேச்சுக்கள் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுவிடம் இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் வலியுறுத்தியதாகத் தெரியவருகிறது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலை இந்தியத் தூதுவர் நிருபமா ராவை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள், முறிவடையும் நிலையிலுள்ள போர்நிறுத்த ஒப்பந்தம், அமைதிப் பேச்சுக்களை மீளத் தொடங்குதல் போன்ற விடயங்கள் இந்தச் சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை இந்தியா முழுமையாக விளங்கிக் கொண்டுள்ளது என்றும், சமாதான முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்றும், இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று நிருபமா ராவ் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் நடைபெற்றுவரும் தாக்கு தல்கள் தொடர்பாக இந்தியத் தூதுவர் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

இதற்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட் டமைப்பினர் -

கடந்த நான்கு வருடங்களாக ஏற்பட்ட ஏமாற் றமே தாக்குதல்களுக்குக் காரணமாக இருக்க லாம். எனவே, பேச்சுக்களைத் தொடங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். பேச்சுக்கான இடம் தொடர்பாக முரண்படாது பேச்சுவார்த்தையை அரசாங்கம் தொடங்குவதன் மூலமே தற்போதைய நிலைமையைத் தடுக்கலாம் என்றும் சுட்டிக்காட்டினர்.

சமாதான முயற்சி முன்னெடுக்கப்பட வேண் டும் என்பதே இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். யுத்தத்துக்கான சூழல் உருவாகுவது ஆராக்கியமானதல்ல. எனவே, சமாதான முயற்சியை முன்னெடுக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றத்தக்க தீர்வையே இந்தியா விரும்புகிறது. யுத்தத்துக் கான முயற்சிகளை இந்தியா விரும்பவில்லை என்றும் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இந்தச் சந்திப்பு முக்கியம் வாய்ந்ததாகக் கருதப் படுகிறது.

இந்தியத் தூதுவருடனான சந்திப்பில் அவரது அரசியல் செயலாளர் அமந்தீப்சிங்கில் உடனி ருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் இரா.சம்பந்தன், ஜோசப் பராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பெண்கள் அமைப்புக்களின் மகஜர் இணைத் தலைமைத் தூதுவர்கள் ஏற்க மறுப்பு

கிளிநொச்சி —

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்திருந்த இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளிடம் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து கண்டன மனுவொன்றைக் கையளிக்க பேரணியாக வந்து காத்திருந்த போதும் அதனை அவர்கள் ஏற்காமல் சென்றுவிட்டனர்.

புங்குடுதீவில் கடற்படையினரால் இளம்பெண்ணாகிய இளையதம்பி தர்சினி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தே இந்த மனுவை கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், விடுதலைப்புலிகளுடனான சந்திப்பை முடித்துவிட்டு வந்த இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் அவற்றை ஏற்கவோ பேரணியாளர்களின் கோரிக்கைகளை அவதானிக்கவோ முயற்சிக்காமல் தவிர்த்துவிட்டு வேறு பாதை வழியாக சென்றுவிட்டனர்.

இதனால் கண்டன மனுவைக் கையளிக்க நீண்ட நேரமாக காத்திருந்த பலநூற்றுக்கணக்கான மக்கள் பயனேதுமின்றித் திரும்பிச் சென்றனர்.

## படையினரின் சூட்டில் இரு இளைஞர்கள் காயம்

யாழ்ப்பாணம் —

இரவுவேளை கடையில் பொருட்களை வாங்கிக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த இரு இளைஞர்கள் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சண்முகராசா றொபின்சன் (வயது 19) சிறிஸ்கந்தராசா கஜந்தன் (வயது 20) ஆகிய இருவருமே படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

யாழ்.நகரில் பொருட்களைக் கொள்வனவு செய்துவிட்டு நாவலர் வீதியூடாக ஆனைக்கோட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தவேளை ஐந்து சந்தியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்ததாகத் தெரியவருகிறது.

## வயோதிபர் சுட்டுக்கொலை

திருகோணமலை —

திருகோணமலை உவர்மலை பிரதான வீதியில் பொலிஸ் நிலையத்துக்குச் சமீபமாக வயோதிபர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றிரவு 8.45 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வீரக்கொடி (வயது 62) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

வீதியோரமாக நடந்துகொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்ற னர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றவேளை அங்கு உயிரிழந்தார். (04,10)

### இருபாலையில்...

படைத்தலைமையகம் தெரிவித்தது.

எனினும் இந்தச் சம்பவத்தில் இரு படையினர் காயமுற்றதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து இருபாலைச் சந்தியில் உள்ள வர்த்தக நிலையங்களில் நின்றோரும் வீதியால் பயணம்செய்தோரும் படையினரால் தடுத்துவைக்கப்பட்டு தாக்கப்பட்டனர்.

நீண்டநேரமாக இருபாலைச் சந்தியில் பெருமளவானோர் தடுத்து வைக்கப்பட்டு கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் -

மினிபஸ் ஒன்றை வழிமறித்தே காயமுற்ற படையினர் பலாலிக்கு ஏற்றிச்செல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன. (90)

## வீரச்சாவு

கிளிநொச்சி —

22.12.2005 அன்று யாழ்.நகர்ப் பகுதில் (ஈ.பி.டி.பி) தேச விரோதக் குழுவினரும் இராணுவப்புலனாய்வுத் துறையினரும் இணைந்து நடத்திய தாக்குதலின் போது நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டுப்பற்றாளர் ; நவரெட்ணம்

கிருஸ்ணன் நவரெட்ணம் (மடத்தடி வீதி, யாழ்ப்பாணம்) என்பவரே வீரச்சாவடைந்தவராவார்.

அத்துடன் 12.10.2005 அன்று சந்தனமடுப்பகுதியில் இராணுவப் புலனாய்வுத் துறையினரின் தாக்குதலின் போது துணைப்படை வீரரொருவர் வீரச்சாவடைந்தார்.

வீரவேங்கை ; புவனேந்திரன்

இராசலிங்கம் புவனேந்திரன்

(விநாயகர்புரம் கிராமம், சித்தாண்டி ஒட்டு மட்டக்களப்பு)

### ஜோசப்...

மட்டக்களப்பு சென்.மேரீஸ் பேராலயத்தில் நடைபெற்ற நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொள்ள, நேற்றிரவு 10 மணியளவில் ஜோசப் பரராஜசிங்கம் தனது மனைவியுடன் சென்றிருந்தார்.

இவருடன் ஐந்து பொலிஸாரும் பாதுகாப்புக்காகச் சென்றிருந்தனர் என்றும், அவர்கள் பேராலயத்துக்கு வெளியிலேயே நின்றதாகவும் தெரியவருகிறது.

மட்டு - திருமலை பேராயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கிறிஸ்து பிறப்பு நள்ளிரவு ஆராதனையை நடத்திய பின்னர் நற்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ள ஜோசப் பரராஜசிங்கம் எழுந்துசென்றபோது - பின் வரிசையிலிருந்து அவர் மீது இன்று அதிகாலை 1.10 மணியளவில் ஆயுத பாணிகள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். இதில் ஜோசப் பரராஜசிங்கம் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இதேவேளை - குறுக்கே பாய்ந்து தடுக்க முயன்ற இவரது மனைவி சுகுணம் படுகாயமடைந்தார். மேலும் இவருடன் 7 பேர் இந்தச் சம்பவத்தில் காய மடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் முதன் முறையாக நாடாளுமன்றுக்குத் தெரிவான ஜோசப் பரராஜசிங்கம் கடந்த தேர்தலில் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

## விபத்தில் சிக்கி சிறுவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் —

பண்டத்தரிப்பு பகுதியில் ஐஸ்கிறீம் வான் மோதி சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று நண்பகல் 12.50 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் இந்திரஜித் தசன் (வயது 14) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

தண்ணீர் எடுப்பதற்காக பண்டத்தரிப்புச் சந்திக்கு வந்த சிறுவன் அங்கிருந்து சித்தன்கேணிக்கு செல்ல முற்பட்டவேளையே எதிரே வந்த ஐஸ்கிறீம் வான் மோதியதில் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையினுள் வைக்கப்பட்டுள்ளது.

### துரைவழியாக...

குழுவின் தலைவர் ஜூலியன்வில்சன், ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகர் ஸ்ரீபன் ஈவன்ஸ், ஜப்பானிய இலங்கைக்கான தூதுவர் அக்கியோ சூடா, இலங்கைக்கான நோர்வேயின் பிரதித் தூதுவர் உட்வர் லேக்ரீட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### அப்பாவிகளே...

கொலைசெய்தும் வருகின்றனர்.

சாவகச்சேரி நகரில் நேற்றுமுன்தினம் இளம் பெண்ணொருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம், நேற்று யாழ்.நகர்ப் பகுதியில் நான்கு இளைஞர்களும், பெண் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் பொதுமக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள் என்பவற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த ஐந்து பேர் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பதிலாக யாழ்.குடாநாட்டில் 50 இராணுவத்தினரை கொன்று குவிக்கும்வரை மக்கள் படையின் பணி தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பணிநிலை வெற்றிடம்

நமது ஈழநாடு நாளிதழின் ஆசிரிய பீடம், கணனிப்பிரிவு ஆகியவற்றில்

# பணிநிலை வெற்றிடம்

நமது ஈழநாடு நாளிதழின் ஆசிரிய பீடம், கணனிப்பிரிவு ஆகியவற்றில் பணிபுரிய தகைமையும், விருப்பும் உடையோரிடமிருந்து கீழ்க்காணும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**பயிற்சி பத்திரிகையாளர்கள் - செய்தியாளர்கள் -**

- ✕ மேற்படி பணிநிலைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் சித்தி பெற்றவராக / அல்லது தோற்றிய வராக இருக்கவேண்டும்.
- ✕ தமிழ்மொழியில் சிறப்புச்சித்தி பெற்றவர்களாகவும், பத்திரிகை மற்றும் செய்தித்துறையில் பணியாற்ற விருப்பார்வம் கொண்டவர்களாகவும், சுறுசுறுப்பான செயற்பாடு கொண்டவராகவும் இருக்க வேண்டும்.
- ✕ முன் அனுபவம் ஏதுமிருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

**கணனி இயக்குநர்கள்**

- ✕ வேகமாக தட்டச்சு செய்பவராகவும்,
- ✕ Page Maker, Photoshop, Corel Draw ஆகியவற்றில் திறன் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- ✕ கணனிப் பகுதியில் பயிலுநராகப் பணிபுரிய விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். பணியில் இணைந்து கொள்ள விரும்புவோர் உரிய தகைமைச் சான்றிதழ்களுடன் 27.12.2005 அன்று நேரில் சமுகமளிக்கவும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

**நிர்வாக இயக்குநர்**
**நமது ஈழநாடு**
**267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**


பிறப்பு நள்ளிரவு ஆராதனை யை நடத்திய பின்னர் நற்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ள ஜோசப் பரராஜசிங்கம் எழுந்துசென்றபோது - பின் வரிசையிலிருந்து அவர் மீது இன்று அதி

முறையாக நாடாளுமன்றுக்குத் தெரிவான ஜோசப் பரராஜசிங்கம் கடந்த தேர்தலில் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இந்த ஐந்து பேர் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பதிலாக யாழ்.குடாநாட்டில் 50 இராணுவத்தினரை கொன்று குவிக்கும்வரை மக்கள் படையின் பணி தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.கோட்டை...

பொது விளையாட்டரங்குப் பகுதியில் கிடப்பதாகவும் முதலில் இராணுவத்தரப்பு செய்தி வெளியிட்டது. தம் மீது தாக்குதல் நடத்தியவர்களே சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் இவர்களிடமிருந்த கிரனேட் லோஞ்சர் ஒன்றையும் மைக்றோ பிஸ்டல் ஒன்றையும் படையினர் மீட்டிருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க நேற்றிரவு தெரிவித்தார்.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் காயமுற்ற இராணுவ அதிகாரி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் -

அந்தப் பகுதியில் தொடர்ந்து தேடுதல் நடத்தப்படுவதால் மேலதிக விபரங்களை எதிர்பார்த்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

அதேவேளை - இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் நேற்றிரவு 10.30 மணியளவில் பொலிஸாரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

எனினும், இவை இனங்காணப்படவில்லை. ஆனால், உயிரிழந்தோர் அப்பாவிப் பொதுமக்கள் என்றும், தீவகத்தில் இருந்து வீதியால் வந்து கொண்டிருந்தபோதே இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தோரில் 24 வயதான இளம் பெண் ஒருவரும், பாடசாலை ஊழியர் ஒருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் இந்தச் செய்தி எழுதப்படும்வரை அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

இந்தச் சம்பவத்தில் தமது தரப்பில் உயிரிழப்பு ஏற்படவில்லையென்றும் பொதுமக்களே படையினரால் கொல்லப்பட்டதாகவும் பொங்கியெழும் மக்கள்படை தெரிவித்துள்ளது.

அதேவேளை - இந்தச் சம்பவத்தில் 512 ஆவது பிரிகேட்டில் பணியாற்றும் சிரேஷ்ட புலனாய்வு அதிகாரி ஒருவர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. காயமுற்றவர் மேஜர் ஹமீத் என ஒரு தகவல் தெரிவித்தபோதும் - சிங்கள இனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரே காயமுற்றதாக இன்னொரு தகவல் தெரிவித்தது.

இந்தப் படையதிகாரிக்கு கழுத்துக்குக் கீழ் - நெஞ்சுக்கு மேல் பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக் காயம் ஏற்பட்டதாகவும், யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சத்திரசிகிச்சைக்கு இவர் உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை - யாழ்.போதனா வைத்தியசாலையில் இராணுவத் தரப்பில் காயமுற்ற ஒருவர் அனுமதிக்கப்பட்டபோதும் அவரது பெயரை உறுதிப்படுத்த முடியவில்லை.

அதேவேளை - நேற்று மாலை 6.50 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று யாழ்.பொது விளையாட்டரங்கில் தரையிறங்கிச் சென்றது குறிப்பிடத்தக்கது.

கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலை அடுத்து யாழ்.நகரில் நேற்றுமாலை பதற்றம் நிலவியது. நகரப் பகுதியில் இருந்த கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. பஸ்கள் ஓடி மறைந்தன. பொதுமக்கள் சிதறியோடித் தப்பினர்.

யாழ்.வைத்தியசாலைக்கு முன்பாகவும், பஸ்நிலையப் பகுதியிலும் பொதுமக்களை படையினர் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

நேற்றுமாலை 7 மணிக்குப் பின்னர் யாழ்.நகர வீதிகளில் பொதுமக்கள் எவரையும் காணமுடியாதிருந்தது. எங்கும் இராணுவத்தினரே காணப்பட்டனர். அத்துடன், நேற்றிரவும், இன்று அதிகாலையும் நகரை அண்டிய பகுதிகளிலும், கரையோரப் பகுதிகளிலும் தொடர்ச்சியான துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. எனினும் இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.


**HIGH SPEED INTERNET BROWISING**

OPEN - 09.00 AM to 11.00 PM
நல்லைக்கந்தன் நெற் கபே
62, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. - 021 222 2779


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கணினி கற்கைநெறி சிறப்பிதழ்

## தகவல் தொழில்நுட்ப யுகத்தை நோக்கி

ஒரு நீண்ட கால கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட யாழ்.மண், தனக்கே உரித்தான அச்சிறப்புப் பெருமையைச் சிறிது சிறிதாக நழுவ விட்டுக்கொண்டு வருகிறதென்பது எம்மவர் மத்தியில் காணப்படும் கவலையாகும். இந்த நிலை மாறவேண்டுமெனில் இதற்குப் பொருத்தமான கல்விக் கொள்கைகளும், கல்வித்திட்டங்களும் வகுக்கப்படவேண்டும் என்பது பல தரப்பட்டவர்களினதும் கருத்தாக விளங்குகின்ற போதிலும், இதில் நேரடிப்பங்காளிகளாக உள்ள மாணவர்களின் கைகளிலும் தங்கியுள்ளதென்பதை யாரும் மறுக்க முடியாது. எமது மாணவர்கள் தமது கல்விக் காலத்தின் பெரும் பகுதியை பரீட்சைப் பெறுபேறுகளுக்காகவும், பல்கலைக்கழக அனுமதிக்காகவும், அதற்கப்பாற்பட்ட யுத்த சூழ்நிலைகளாலும் ஓரிரு ஆண்டுகளை வீணடித்து விடுகின்றார்கள். இக்காலப் பகுதியில் மாணவர்களும், பெற்றோர்களும் சிந்தித்து மிக நிதானமாக செயற்படுவார்களாயின் - சிறந்த எதிர்காலமுள்ள ஓர் இளைய சமுதாயத்தை உருவாக்கிக்கொள்ள-முடியும்.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது எமது மாணவர்களின் தொழில்நுட்ப அறிவு மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. இதற்கு நாம் பல்வேறு காரணங்களைக் கூறிக்கொள்ள முடியும். ஆனால், நாம் வெறுமனே கூறிக் கொண்டிருக்கும் காரணங்கள் எம்மைச் சமாதானப்படுத்திக் கொள்ளும் சாட்டுக்களாக இருக்குமன்றி இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக இருக்கப்போவதில்லை. மாணவர்கள் மத்தியில்போதிய தொழில்நுட்ப அறிவு இல்லாததால் நாம் பெற்ற கல்வியை பிரயோகிப்பது எவ்வாறு என்று தெரியாமல் தவறவிடுகின்றனர். இதனால் அவர்களுக்கான சுய தொழில்களை ஆரம்பிப்பதிலேயோ அல்லது வேறு வேலை வாய்ப்புக்களையோ கை நழுவ விடுகின்றார்கள். எமது மாணவர்கள் தென்பகுதிக்கோ அல்லது வேலை வாய்ப்புக்கோ செல்கின்றார்கள். இதனால் கிடைக்க வேண்டிய பல அரிய வாய்ப்புக்களை இழந்து, எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்படுகின்றது.

21ஆம் நூற்றாண்டை எடுத்துக் கொண்டால் உலகின் பல பாகங்களிலுமுள்ள மாணவ சமுதாயம் நிலையான ஒரு இலக்கை நோக்கி நடப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. மாறாக எமது மாணவர் சமூகத்தை எடுத்துக்கொண்டால் இலக்கின்றிய பாதையில் செல்வது கண்கூடு.

தொழில்நுட்பக் கல்விகளுள் அனைத்துத் துறைகளையும் தன்னுள் அடக்கித் தன் ஆட்சியின் கீழ் வைத்திருப்பது தகவல் தொழில்நுட்பமே ஆகும். அந்த வகையில் எமது மாணவர்களுக்குக் காத்திரமான ஓர் தகவல் தொழில்நுட்பக்கல்வியைக் கொண்டிருக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். தகவல் தொழில்நுட்பம் இல்லாது எந்த ஒரு துறையினையும் முன்னெடுக்க முடியாது என்ற நிலை வந்துவிட்டது. இந்த நிலையில் எமது குடாநாட்டு மாணவர்களின் மத்தியில் இத்துறை சார்ந்த விழிப்புணர்வு போதுமானளவு ஏற்படுத்தப்படவில்லையென்றே கூறவேண்டும். மேலை நாடுகளில் பாடசாலை மட்டத்தில் 80 ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கல்வியை எமது நாட்டில் தற்பொழுதாவது அதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து General Information Technology (GIT) என்று ஒரு தரமான தகவல் தொழில்நுட்பக் கல்வி முறைமையை அறிமுகப்படுத்தி, நடைமுறைப்படுத்த எத்தனிப்பது மிகச்சிறந்த விடயமாகும். அரசாங்கம் தகவல் தொழில்நுட்ப அறிவு இல்லாமல் எதிர்கால மாணவர்கள் - முள்ளந்தண்டற்ற மாணவர்கள்போல் ஆகிவிடுவார்கள் என்ற காரணத்தினாலேயே இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதிலிருந்து ஒவ்வொரு மாணவரும், பெற்றோர்களும் அறிந்துகொள்ள வேண்டியது தகவல் தொழில்நுட்பத்தின் இன்றியமையாத் தன்மையே ஆகும். எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட் பத்துறையில் பயிற்சிகளை முடித்து சான்றிதழ்களை வைத்திராத மாணவர்களுக்கு, சிறந்த வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதே முடியாத காரிய மாகிவிடும்.

நாம் எமது கல்வியை முடித்துக் கொண்டு வேலை வாய்ப்பினைத் தேடி நேர்முகத் தேர்வுக்குச் செல்லுமிடத்து, அங்கு கணனிக்கல்விச் சான்றிதழ்களுக்குக் கணிசமான புள்ளிகள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக - தற்பொழுது அனைவரும் அறிந்த விடயம், வேலையற்ற பட்டதாரிகளின் நிரந்தர நியமனத்துக்கான நேர் முகத்தேர்வுகள் பல்வேறு அமைச்சுக்களிலும் நடாத்தப்படுமிடத்து, பட்டக் கல்விச் சான்றிதழுடன் கணனிக்கல்விச் சான்றிதழுக்கும் முன்னுரிமை வழங்கப்படுகிறது. அவ்வாறு கணனித் துறையில் Diploma முதல் Degree வரையிலான சான்றிதழ்களைக் கொண்டுள்ளவர்கள் இலகுவாக உயர் பதவிகளைத் தட்டிச் செல்கின்றனர். இங்கு மட்டுமன்றிப் பல்வேறு திணைக்களங்களிலும் உயர் பதவிக்கான போட்டி மிகுந்த தெரிவில் கணினிக்கல்வி கை கொடுப்பது கண்கூடு. இதனை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

அத்துடன் தொழில்கள் ரீதியில் நோக்குமிடத்து வேறு தொழில்களில் உள்ளவர்களைவிட, தகவல் தொழில்நுட்பத்துறையில் உள்ளோர் இளம் வயதிலேயே உயர்பதவிகளில் உயர்ந்த சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முடிகிறது.

இன்றைய போட்டி மிகுந்த உலக வேலை வாய்ப்புச் சந்தையை நாம் எதிர்கொள்ள வேண்டுமாயின் தகவல் தொழில்நுட்பத் துறையில் தரம் வாய்ந்த தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். கடந்த காலங்களுடன் ஒப்பிடுமிடத்து தற்பொழுது தகவல் தொழிநுட்ப அறிவை பல்வேறு மட்டத்திலும் எமது சொந்த மண்ணிலேயே பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கிட்டியுள்ளது.

தற்பொழுது யாழ்.மாவட்டத்திலும் எமது மாணவர்கள் தமது ஆரம்பக்கல்வி முதல் கணினிக்கல்வியின் பட்டப்படிப்புக்கள் வரை மேற்கொள்ளக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை, குடாநாட்டு மாணவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற ஓர் அரிய வாய்ப்பாகும். எமது மாணவர்கள் பெற்றோரின் அரவணைப்பில், அவர்களின் பாதுகாப்பில் குறைந்த செலவில் தமது சொந்த மண்ணிலேயே கற்கக் கூடிய வசதிகளை எமது பிரதேசத்தில் இயங்கும் முன்னணிக் கணினி நிறுவனங்கள் ஏற்படுத்திக்கொடுத்திருக்கின்றன. தென்பகுதியில் உள்ள கணினி நிறுவனங்களுக்குச் சற்றும் சளைக்காத வகையில் எமது பிரதேசங்களிலும் தரமான கணினி நிறுவனங்கள் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த இதழின் வெளியீட்டின் நோக்கமே எமது மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்துறையில் இலகுவாக வெற்றி கொண்டு, கட்டியாள்வதற்கு வழி சமைக்க வேண்டும் என்பதேயாகும்.

யாழ்.மாவட்டத்தில் இயங்குகின்ற கணினிப்பயிற்சி நிறுவனங்கள் தங்களது சமூகப் பொறுப்பை உணர்ந்தவர்களாக, இலாபத்தினை மாத்திரம் குறிக்கோளாகக் கொள்ளாமல் எமது மாணவர் சமுதாயத்துக்கு ஒரு சிறந்த வழிகாட்டிகளாக இருக்க வேண்டுமென்பதே எல்லோருடைய விருப்பமுமாகும்.


IBMS

வழங்கும் 2006ம் ஆண்டு சிறப்புச் சலுகையைத் தவறவிடாதீர்கள்!

எந்த நிறுவனமும் வழங்க முடியாத அதிரடிச் சலுகை

SPECIAL OFFER

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 01.01.2006
பிரிவு II : 02.01.2006
பிரிவு III : 11.01.2006
காலை 10.00 மணி

FREE REGISTRATION JAN UARY 1ST

| கற்கைநெறி | காலம் | பயிற்சிக்கட்டணம் முழுமையான கட்டணம் | பயிற்சிக்கட்டணம் சலுகைக் கட்டணம் |
|---|---|---|---|
| Dip. in Microsoft Office | 3 Months | ~~3000.00~~ | 500.00 |
| Dip. in Desk Top Publishing | 3 Months | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Internet Technology | 3 Months | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Hardware Engineering | 4 Months | ~~5000.00~~ | 1500.00 |
| Dip. in Information Technology | 2 Months | | 500.00 |

புதுவருட தினத்தன்று பதிவினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் !

அனைவருக்கும் கணனிக் கல்வி எனும் பரந்த இலக்குடன் குறைந்த கட்டணத்துடன் நிறைந்த சேவையினை வழங்கிவரும் நிறுவனம்

அங்கீகாரம்

Tertiary & Vocational Education Commission என்ற நிறுவனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

ACTOS என்ற அமைப்பின் உறுப்புரிமையைக் கொண்ட நிறுவனம்

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
"The Centre for Information Technology"
# 410, K.K.S. Road, Jaffna.
T.P. No. : 021 222 8232

Branches : * NMMV Road, Nelliady * Sangaththanai, Chavakachcheri


## இலத்திரனியல் வாணிபம் (E - Commerce)

இலத்திரனியல் வாணிபமானது இணையதளத்தின் மூலம் பொருட்களை, சேவைகளை விற்றலும் வாங்கலும் எனப் பொருள்படும். இதன்மூலம் ஒரு பொருளை அறிமுகப்படுத்தலும் சந்தைப்படுத்தலும் விநியோகப்படுத்தலும் மிக இலகுவாக மேற்கொள்ளலாம். இதில் ஒரு முக்கிய விடயம் என்னவெனில் பணப்பரிமாற்றமானது பாதுகாப்பான முறையில் செயற்படுத்தப்படும்.

**இதன் கட்டமைப்புகளாவன :**

i. இன்ரநெற், இன்றாநெற், எக்ஸ்ராநெற் என்பவை இலத்திரனியல் வாணிபத்தின் அடிப்படை வலையமைப்பாகத் தொழிற்படுகின்றன.

ii. வாடிக்கையாளருக்குப் பாதுகாப்பான தகவல் பரிமாற்றங்களையும் மாற்றீடு செய்யும் முறைகளையும், சந்தைப்படுத்தும் முறைகளையும், பணப்பரிமாற்ற முறைகளையும், வழங்குகின்றது.

iii. அறிமுகமற்ற விற்பனையாளர்களிடமிருந்தும் இணையதளமூடாகவும் நாம் வாணிபம் செய்யமுடியும்.

**இலத்திரனியல் வாணிபம் செய்வது பொருளாதார ரீதியாக நாம் மேன்மையடைய ஒரு சிறந்த நடைமுறையாகும். இதனூடாக**

- வாணிபத்தைச் செய்வதில் ஏற்படும் சுமைகள், தடைகள் என்பன குறைக்கப்படும்.
- வாணிபத்தின் எல்லை வரையறையற்றதாகக் காணப்படும்.
- பல வழிகளில் வருமானம் ஈட்டிக் கொள்ளலாம்.
- சந்தை நிலைமையை எவரும் தன்னகத்தே வைத்துக்கொள்ளமுடியாது.
- உலகளாவிய ரீதியில் உங்கள் வாணிபத்தை மேற்கொள்ளமுடியும்.

### இலத்திரனியல் வாணிபத்தின் வகைகள்

**இதனைமூன்றுவகைகளாகப்பிரிக்கலாம்:-**

**1. வாணிபத்துக்கும் வாடிக்கையாளருக்கும் :-**

இதன்மூலம் இணையதளத்தைப் பயன்படுத்தி சில்லறை வாணிபம் செய்யமுடியும். இதன்மூலம் வாடிக்கையாளரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்யும் அளவுக்கு வாணிபம் செய்யப்படும். ஏனென்றால் உலக சந்தையில் எமது நிலையைத் தக்கவைத்துக்கொள்ள முடியும்.

**2. வாணிபத்திலிருந்துவாணிபத்துக்கு:-**

இங்கு மொத்த வாணிபம் இணையதளத்தின் ஊடாக செய்ய முடியும். வழங்கல் முகாமைத்துவச் சங்கிலியை அடிப்படையாகக்கொண்டு இந்த வாணிபம் செய்யப்படுகின்றது. இதன் முக்கிய நோக்கம் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் சேவைகளைக் குறைந்த செலவில் மேற்கொள்வது. இதன்மூலம் குறைந்த கொள்ளளவை வைத்துக்கொண்டு நிறைந்த சேவையைச் செய்யமுடியும்.

**3. வாடிக்கையாளர்களுக்கும் வணிகர்களுக்கும் :-**

இணையதளத்தின்மூலம் ஏல விற்பனையை மேற்கொள்ளுதல். உதாரணமாக - www.ebag.com என்ற இணையதள முகவரிமூலம் ஏலம் இடப்படும் பொருட்களை வாங்கமுடியும். இது இலத்திரனியல் வாணிபத்தின் சிறப்பு அம்சமாகக் கருதப்படுகின்றது.

இந்நிலையில் 90 சதவீதமான தொழில் நிறுவனங்கள் தமது வாணிபத்தை இலத்திரனியல் வாணிபம் மூலம் மேற்கொள்கின்றன. எனவே இதுவே இலத்திரனியல் வாணிபத்துக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதப்படுகிறது.

# கணினி கற்கைநெறி சிறப்பிதழ்

## வடபகுதியில் செல்வாக்குச் செலுத்திவரும் HND கற்கைநெறி

தகவல் தொழில்நுட்பத்தின் பிரயோகமானது அல்லது தேவையானது இன்றைய உலகில் அனைத்துத் துறைகளையும் ஆக்கிரமித்திருக்கின்ற நிலையில், இத்தகவல் தொழில்நுட்பக் கல்வியின் முக்கியத்துவத்தினை ஒவ்வொரு மாணவனும் நன்கு உணர்ந்த நிலையில், தமது கல்விச் செயற்பாடுகளை தகவல் தொழில்நுட்பததின்பால் நகர்த்தி வருவதை அண்மைக்காலங்களில் நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த நிலையில் தமது கணினிக்கல்வி மற்றும் கணினி உயர்கல்விக்கான பாதைகளை மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் பொழுது மிக அவதானமாக இருக்கவேண்டும் என்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

பாடசாலை மட்டத்தில் இருந்து 2 ஆம் நிலைக்கல்வியை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கு இன்றைய இந்தப் பரந்த உலகில் பல்வேறு சந்தர்ப்பங்கள் காத்துக்கிடக்கின்றன. மாணவர்கள் தமது எதிர்காலம் தொடர்பாக தீர்க்கமான ஒரு முடிவினை அல்லது இலக்கினைக் கொண்டிருக்க வேண்டியது முக்கியமானதாகும். அதாவது நீங்கள் உயர்கல்வி ஒன்றினை மேற்கொள்ள விரும்பின் உங்களுக்குப் பொருத்தமான அல்லது விருப்பமான துறையினைத் தேர்ந்தெடுத்து உள் நாட்டிலோ அல்லது வெளிநாடுகளிலோ மேற்கொள்ளமுடியும். இதற்குப் பல்வேறு அரச, தனியார் துறையினர் சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றனர். அதேமாதிரி நீங்கள் ஓர் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள விரும்பினும் ஒரு தொழிற் பயிற்சியினை முடித்துக் கொள்வதனூடாக உங்கள் கனவினை நனவாக்கிக் கொள்ள முடியும்.

இன்றைய உலகில் மாணவர்கள் தமது உயர்கல்வியை மேற்கொள்வதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் பரந்து விரிந்து கிடக்கின்ற போதிலும், எமது பிரதேச மாணவர்கள் பாதுகாப்புடனும் குறைந்த செலவுடனும் பெற்றோரின் அரவணைப்பில் இருந்து கொண்டும் தமது சொந்த மண்ணிலேயே மேற்கொள்ளக்கூடிய கற்கைநெறிகள் இன்று யாழ்.குடாநாட்டில் உள்ளன. அந்த வகையில் சர்வதேச ரீதியில் பிரித்தானிய **Edexcel International** நிறுவனத்தின் **BTEC HND** எனும் கற்கைநெறி தொடர்பாகப் பரவலாகப் பேசப்பட்டுவருவது மட்டுமன்றி முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருவதும் தெரிந்ததே. ஏனெனில் இக்கற்கைநெறியை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கு முழு மையான சர்வதேச அங்கீகாரமுள்ள சான்றிதழ் **Edexcel International** நிறுவனத்தால் வழங்கப்படுவது மட்டுமன்றி, இக்கற்கை நெறியை முடித்துக்கொண்ட மாணவர்களுக்குப் போட்டி மிகுந்த தொழில் சந்தையில் இலகுவாக வேலை வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை. அத்துடன் இக்கற்கைநெறியை முடித்துக் கொண்ட மாணவர்கள் சர்வதேச பல் கலைக்கழகங்களில் தகவல் தொழில் நுட்பத்துறையில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளக் கூடியதாக இருப்பது இதன் சிறப்பம்சமாகும். அதுமட்டுமன்றி எமது மாணவர்கள் கௌரவமான முறையில் உயர்கல்வி, வேலைவாய்ப்பு என வெளிநாடுகளுக்குச் செல்வதற்கும் இக்கற் கைநெறி உதவி வருகின்றது.

இக்கற்கைநெறி தொடர்பான இலங்கை பிராந்திய அலுவலகம் வெளியிட்டுள்ள விளக்கக் குறிப்பின் தமிழாக்கத்தின் பிரதியொன்று கீழே தரப்படுகின்றது.

### Edexcel Foundation, Edexcel International என்றால் என்ன?

**Edexcel** சர்வதேசம் என்பது **Edexcel** நிறுவனத்தின் ஒரு பிரிவாகும். அது இங்கிலாந்தில் ஒரு தொண்டு நிறுவனமாக பதிவு செய்துள்ளது. **Edexcel** சர்வதேசம் என்ற நிறுவனம் ஐக்கிய இராச்சிய தராதரங்களை உலகம் முழுவதும் அளிக்கும் ஒரு முன்னோடி நிறுவனம். கல்விப்புலன் சார்ந்ததும், தொழில் முயற்சி சார்ந்ததுமான சேவையில் மிகச்சிறப்பான வரலாறு படைத்த **Edexcel** சர்வதேசத்தின் பரீட்சைச் சபையானது-லண்டன் பரீட்சைகளும் **BTEC** பட்டங்களும் பரவலாகக் கிடைக்கும் வண்ணம் உங்களை வந்தடைந்துள்ளது.

பல்கலைக்கழகங்களாலும், அதன்னை ஒத்த தொழில் முயற்சியாளர்களாலும் வரவேற்கப்படும் ஆழ்ந்த அறிவினைத்தரும் வகையில் எங்களது பட்டங்கள் காணப்படுகின்றன. **Edexcel** இனால் தரப்படும் பட்டங்கள் ஒவ்வொன்றும் ஐக்கிய இராச்சிய தகுதியினையும், அதன் பாட நூல் அதிகார சபையினரிடமும் கலந்தாலோசிக்கப்பட்டே விருத்தியாக்கப்பட்டுள்ளது. இப்பாடங்கள் தற்காலத் தேவைகளையும், மாறுகின்ற உலகின் தேவை களையும் கருத்தில் கொண்டு வெற்றி பெறுவதற்கான சந் தர்ப்பத்தை மாணவர்களுக்கு உறுதி செய்கிறது. மேலதிக விபரங்களுக்கு **Edexcel** இணையதளமான **www.Edexcel.org.uk/internatoional** இல் பார்க்கவும்.

### BTEC என்றால் என்ன?

**BTEC (Business and Technician Educational Council)** என்பது தொழில்சார் பட்டங்களை வழங்கும் ஒரு சபையாகும். இது 1996 இல் **Ede xcel** உடன் இணைக்கப்பட்டுள்ளது.

### BTEC HND என்றால் என்ன?

தேசிய உயர் **Diploma** என அறியப்படும் இப்பட்டமே **BTEC HND** எனப் பரவலாக அறியப்பட்டுள்ளது. **Edexcel** நிறுவனத்தின் முன்னோடியான தராதரத்தை வழங்குகின்றது. 9 இற்கும் மேற்பட்ட கல்விப்புலன்களை **HND** வழங்குகின்றது. இது 16 அலகுகள் கொண்ட பட்டப்படிப்பாகும். இப்பட்டப் படிப்பு **Ede xcel** இனால் அங்கிகரிக்கப்பட்ட மையங்களினுடாக மட்டுமே வழங்கப்படுகின்றது.

### அங்கீகரிக்கப்பட்ட மையம் என்றால் என்ன?

**Edexcel** தகுதி நியமங்களுக்கேற்ப உட்கட்டமைப்பு இறுக்கமான மதிப்பீட்டுமுறை என்பவற்றை ஒரு தாபனம் கொண்டுள்ளதா என்பதை ஆராய்ந்து உறுதி செய்தபின்னரே **BTEC** பட்டத்திற்கான பயிற்சியை வழங்கும் அதிகாரம் அந்த நிறுவனத்திற்கு கொடுக்கப்படுகிறது. பயிற்சியை வழங்கும் ஒவ்வொரு நிறவனத்திற்கும் அதற்குரிய இலக்கம் வழங்கப்பட்டு அங்கு வழங்கப்படும் விரிவுரை உயரிய தராதரத்தைக் கொண்டுள்ளதா என்பதைக் கருத்தில்கொண்டு பயிற்சி மையங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

### HND கற்கை நெறியைப் பூர்த்தி செய்வதற்கான கால அளவு யாது?

பொதுவாக 18 தொடக்கம் 24 மாத முழு நேரக்கல்வியாக **HND** கற்கை நெறி பூர்த்தி செய்யப்படுகிறது. என்றாலும் இக் கற்கை நெறிக்கான கால அளவு போதிக்கும் நிறுவனங்களின் தகைமைக்கேற்ப வேறுபடுவதுண்டு.

### HND கற்கை நெறியைப் பயிலுவதனால் பெறப்படும் நன்மைகள் யாவை?

செய்முறையும் கோட்பாடும் **(Practical & Theory)** சமநிலையில் கலந்த கற்கை நெறியாக **HND** உள்ளது. **HND** உங்களால் கற்கப்பட்ட தொழில்நுட்பத்தை பொருத்தமான முறையில் பிரயோகிப்பதற்கான அறிவைத் தருகிறது. ஐக்கிய இராச்சியத்தில் பயில்வதற்கு வேண்டிய அதிக செலவினை மீதப்படுத்தும் வகையில் நீங்கள் உங்களது நாட்டிலே இப்பயிற்சி நெறியைப் பின்பற்றலாம். **HND** பட்டத்தராதரமானது எந்தவொரு பயிற்சி மையத்தினூடாக மேற்கொள்ளப்படினும் அது ஐக்கிய இராச்சியத்தில் வழங்கப்படும் **HND** பட்டத் தராதரத்திற்கு இணையாகும்.

### எவ்வாறு HND கற்கைநெறியைப் பூர்த்தி செய்தல்/சித்தி பெறல்?

**HND** கற்கைநெறி செயல்முறை அறிவில் அதிக கவனம் செலுத்துகிறது. எல்லா அலகுகளும் தொடர் மதிப்பீடு செய்யப்படுகிறது. இதன்மூலம் இக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் ஒருவர் இக்கற்கை நெறிக்குரிய அறிவினைப் பெறுவது உறுதி செய்யப்படுகிறது.

### பரீட்சைகளை நடாத்துபவர் யார்?

**Edexcel** இனால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டலின் அடிப்படையில் **Edexcel** இனால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இக்கற்கை நெறிக்கான பரீட்சைகளையும், ஒப்படைகளையும் உருவாக்கி மதிப்பீடு செய்கிறது. இவ் ஒப்படைகளும் பரீட்சைகளும் **Edexcel** நிறுவனத்தின் பரீட்சகரால் தொடர்ச்சியாக தர மதிப்பீடு செய்யப்படுவதன் மூலம் இக்கற்கை நெறிக்கான தராதரம் பேணப்படுகிறது.

### உலகம் முழுவதும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மையங்கள் அனைத் திலும் ஒரே விதமான தராதரம் பேணப்படுவதை எவ்வாறு Edexcel உறுதி செய்கிறது?

உயர் தராதரத்தைப் பேணும் **Edexcel** இன் கணிப்பீட்டு முறையானது போதிக்கப்பட்ட கல்வியின் தராதரத்தைக் கணிப்பீடு செய்தல், வெளிவாரிப் பரீட்சிப்பு ஐக்கிய இராச்சியத்திலும், பிரதேச மையங்களிலும் உள்ள நிபுணத்துவம் வாய்ந்த வெளிவாரி மதிப்பீட்டாளர்கள் காலத்துக்குக் காலம் இப் போதனை மையத்திற்கு வந்து தராதரத்தை உறுதி செய்வர்.

### எவ்வாறு HND மூலம் பட்டப் படிப்பிற்கு தயார்ப்படுத்திக் கொள்ளலாம்?

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பெரும்பாலான கல்வியியற் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் **HND** போதிக்கப்படுகிறது. இந்த **HND** போதனை பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் 1½ தொடக்கம் 2 வருட காலப்பகுதிக்குரிய போதனையை உள்ளடக்குகிறது. **HND** பட்டதாரிகள் ஐக்கிய இராச்சிய பல்கலைக்கழ கங்களில் 2ம் வருடத்தில் 2ம் தவணை/பட்டதாரிப்படிப்பின் இறுதி வருடம் என்பவற்றில் நுழையும் தகுதி பெறுவர்.

### ஐக்கிய இராச்சியப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறும் நோக்குடன் செல்லும் போது எனக்கு உதவுவது யாது?

ஐக்கிய இராச்சியத்திலும் ஏனைய இடங்களிலும் பல்கலைக்கழக அனுமதி நாமே நேரில் சமுகமளித்துப் பெறலாம். எனினும் ஐக்கிய இராச்சியத்திலுள்ள **UCAS** மற்றும் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள **AACRAO** ஆகிய முகவர் நிலையங்கள் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் அனுமதி பெறுவதற்கான தகுதியை மாணவர்கள் பெறுவதற்கு உதவி வருகின்றன. **Edexcel** இனால் அங்கீகரிக்கப்பட்ட சில மையங்கள் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் அனுமதிபெற உதவி வருகின்றன.

### ஐக்கிய இராச்சியப் பட்டமொன்றை நாம் உள்ளூரில் இருந்த வண்ணமே பெற முடியுமா?

**Edexcel** நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட சில மையங்கள் ஐக்கிய இராச்சியப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து பட்டம் பெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது. மேலதிக விபரங்களிற்கு உமது பிரதேச காரியாலய தலைவரை அணுகவும்.

### UCAS என்றால் என்ன?

**UCAS** என்பது பல்கலைக் கழகங்களிற்கும் கல்லூரிகளிற்குமான அனுமதிச் சேவை. அதாவது ஐக்கிய இராச்சியத்திலுள்ள பல்கலைக்கழகங்களிற்கும் கல்லூரிகளிற்குமான அனுமதிச் சேவையை **UCAS** பெயரில் வழங்கப்படுகிறது. ஐக்கிய இராச்சியத்தில் உயர் கல்விக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் **UCAS** இனால் மேற்கொள்ளப்படுகிறது. எவ்வாறாயினும் ஒரு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் பயில விரும்பி, அங்கு அதற்குரிய தற்காலிக விண்ணப்பத்தை ஒருவர் கொடுத்திருப்பின், அவர் அதனை **UCAS** இற்கு அனுப்பும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட பல் கலைக்கழகத்தில் விண்ணப்பித்த விண்ணப்பத்தை **UCAS** இற்கு விண்ணப்பதாரி கொடுக்க வேண்டும். **UCAS** இன் விண்ணப்பப் படிவம் இணையத்தளம் **www UCAS.ac.uk** இல் உண்டு.

### ஐக்கிய இராச்சியத்தில் கல்வி பயில்வதற்கான செலவு யாது?

ஐக்கிய இராச்சியத்தில் பல்கலைக்கழகத்தின் கற்கைக் கட்டணம் பல்கலைக்கழகத்திற்குப் பல்கலைக்கழகம் மாறுபடுகிறது.

ஒரு வருடப் பட்டப்படிப்பிற்கான செலவு **£ 6500 - £15000** வரை தேவைப்படுகிறது. இத்துடன் மேலதிகமாக **£ 4000-£ 8000** வரை ஒரு வருடத்திற்குரிய வாழ்க்கைப்படியாக ஐக்கிய இராச்சியத்தில் தேவைப்படுகிறது.

### ஐக்கிய இராச்சியத்தில் பயிலும் போது வேலை செய்ய முடியுமா?

ஒரு கிழமையில் 20 மணித்தியாலம் பகுதி நேர வேலை செய்ய அனுமதிக்கப்படுகிறது. இதனால ஒரு கிழமைக்கு **£ 100 or** மாதத்திற்கு **£ 400** சம்பாதிக்க முடியும். வேலை செய்வதற்கான இடத் தெரிவு செய்வதற்கு பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் மாணவர்களிற்கு உதவுகின்றன. **HND** பட்டம் வேலை கொள்வோரால் மிக உயர் தரத்தில் வைத்துக் கணிக்கப்படுகிறது. **HND** பட்டதாரி மிகச் சிறப்பான பகுதி நேர தொழில் வாய்ப்புப் பெற இடமுண்டு. அது மட்டுமல்லாமல், பட்டப்படிப்பு முடிந்த பின்னர் ஐக்கிய இராச்சியத்தில் 1 வருடம் வரை தங்கியிருந்து வேலை செய்வதற்கான வாய்ப்புண்டு.

இதனால் உங்களால் செலவிடப்பட்ட பணத்தையோ அல்லது அதற்கு மேலோ உங்களால சம்பாதித்துக் கொள்ள முடியும்.

### Edexcel எத்தகைய தராதரத்தை வழங்குகிறது?

கல்வி சார்ந்ததும் தொழில் துறை சார்ந்ததுமான பல்வகை நிபுணத்துவத்தை **Edexcel** வழங்குகிறது.

இது தொடர்பாக எமது இணையதளம் **www.edexcel.org.uk/international** இல் பார்க்கவும்.


2005 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறி

**Diploma in Visualize Management**

Computer fundamentals, GUI fundamentals, OS fundamentals, IT fundamentals, Windows Operation, Document management, Print Spooling & job management through MS WORD, Creating and delivering presentation through MS POWERPOINT, Accelerating and amusing accounts through worksheet & Spread Sheet Via MS EXCEL.



காலம்:- 3மாதங்கள்

புதிய பிரிவு ஆரம்பம் 01.01.2006

| | |
|---|---|
| கட்டணம் | ~~2500/=~~ |
| சலுகைக் கட்டணம் | 1250/= |

Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com
T.P: 021 2225170
0777846811

SKY COMPUTERS (PVT) LTD.
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325
DIPLOMA COURSES DURATION 3 MONTHS
- MS OFFICE XP
- DESK TOP PUBLISHING
MS-Office 2000/=
CERTIFICATE COURSES DURATION 1 MONTH
- MS-WORD
- MS-EXCEL (1 Month course 750/-)
- MS-ACCESS
- MS-POWER POINT
- PHOTOSHOP 8.0
- PAGEMAKER 7.0
- CORELDRAW 12
Affiliated with Irish International University (U.K)
INTERNET TECHNOLOGY
HARDWARE TECHNOLOGY
ACCPAC (Computerized Accounting)
O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும் 25% கழிவு உண்டு. 15.01.2006 வரை
KIDS PROGRAM சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
மாணவர்களே உங்கள் பொன்னான காலத்தைப் பிரயோசனப்படுத்திக் கொள்ள
உடன் விரையுங்கள் Sky நிறுவத்திற்கு
E - mail : skycom@ wow.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead

SKY COMPUTER SYSTEMS.
89A, Kandy Road, Jaffna.
Tel: 021 222 9109
E-Mail: skymathy@sltnet.lk
Pentium II 400 MHZ - 16,000/-
Genuine intel Dealer
Pentium III
Pentium IV
* COMPUTER SALES
* COMPUTER REPAIR
* COMPUTER PARTS
* COMPUTER MAINTANACE
17" Monitor - 7,900/-
அனைத்துக் கணனிகளும் 1 வருட உத்தரவாதம்
நடமாடும் சேவை (MOBILE SERVICE)
(யாழ் கச்சேரிக்கு அருகில்)

# 10 வருட சேவையில் சாதனைகள் பல படைத்த IIS


## INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)

"A Centre of Excellence in Global Information Technology "
# 100, Clock Tower Road, Jaffna
T.P No. : 021 222 2831  Fax : 021 222 6933  Email : iiscc@sltnet.lk

## இக்கட்டான போர்க்கால சூழ்நிலையிலும் சிறந்த, கண்ணியமான சேவையினை வழங்கி என்றும் குடாநாட்டு மாணவர்களுடன் இணைந்து நிற்கும் IIS

இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்துறையில் உயர்கல்வியை வழங்கிவரும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக IIS விளங்கிவருகின்றது. 1996ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இலங்கையின் வடபகுதியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டியுள்ளது. உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தகவல் தொழில்நுட்பத்துறையில் முன்னணி வகிக்கும் பல்வேறு நிறுவனங்களின் அங்கீகாரத்துடன் அறிவுத்துறை சார்ந்ததும் தொழில்துறை சார்ந்ததுமான பட்டங்களை வழங்கிவருகிறது. இலங்கையின் கனனி மையங்களின் உயர்ந்த தரத்தினைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட கனனிப் பயிற்றுவிப்பு மையங்களின் கூட்டமைப்பின் (ACTOS - Asociation of Computer Training Organizations) அங்கத்துவ நிறுவனம் என்பதும் பிரித்தானியாவின் Edexcel International நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் என்பதும் Manipal பல்கலைக்கழகத்தின் வட இலங்கைக்கான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். வடக்கில் செயற்படட்டு வரும் தனியார் கனனிப் பயிற்சி நிறுவனங்களுள் அதிகளவு வளத்தினைக் கொண்டு இயங்கும் முதன்மை நிறுவனம் என்பது மட்டுமல்லாது கனனித்துறையில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளக்கூடிய தனித்துவம் மிக்க நிறுவனமும் ஆகும்.






| பயிற்சி நெறிகள் | | வழமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|---|---|
| Diploma in MS Office | | ~~4000/=~~ | 2000/= |
| Diploma in Desk Top Publishing | | ~~4000/=~~ | 2000/= |
| Diploma in Internet Technology | | ~~6000/=~~ | 3000/= |
| Diploma in Hardware Technology | | ~~7000/=~~ | 3000/= |
| Diploma in Computer Programming | | ~~10000/=~~ | 6000/= |
| PageMaker<br>Flash | CorelDRAW<br>Photoshop | ~~1500/=~~ | 1000/= |

## O/L 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !

**உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை IIS இல் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்**

**சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனி நிறுவனம் ஒன்றின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்**





## New Batches Start on

| | | |
|---|---|---|
| Batch 1 [Weekend] | : 01.01.2006 | at 10.00 A.M. |
| Batch 2 [Weekday] | : 03.01.2006 | |
| Batch 3 [Weekday] | : 11.01.2006 | |
| Batch 4 [Weekend] | : 14.01.2006 | |

**01.01.2006**

**அன்று பதிவினை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் பதிவுக்கட்டணத்தில் 50% கட்டணச்சலுகை**

## IIS CITY CAMPUS

"Success Through Knowledge"
# 181, Navalar Road, Jaffna
T.P.No. : 021 222 8060  Fax : 021 222 6933  Email : iiscc@sltnet.lk

வட பகுதியில் தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் வர்த்தக முகாமைத்துவ துறைகளில் சர்வதேச தரம் வாய்ந்த உயர்கல்வியினை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனமே IIS City Campus ஆகும். இந்நிறுவனம் சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும் உயர்கல்வி நிறுவனங்களுடனும் இணைந்து உயர்தேசிய டிப்ளோமா, இளமானி மற்றும் முதுமானி கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தி வருகின்றோம்.

edexcel

### BTEC Higher National Diploma

IIS City Campus நிறுவனமானது Edexcel International, UK இனால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பயிற்சி மையமாகும். Edexcel என்பது இலண்டன் ஜீ.சீ.ஈ சாதாரண தரம் மற்றும் ஜீ.சீ.ஈ உயர்தரப்பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும். இவ்வமைப்பு உலகளாவிய ரீதியில் தொழில்சார் வல்லுநர்களை உருவாக்குவதற்கென தனது அங்கீகரிக்கப;பட்ட பயிற்சி மையங்கள் ஊடாக (Higher National Diploma) பயிற்சி நெறிகளை நடாத்தி வருகின்றது. BTEC HND என்பது கணனித்துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சி நெறியாகும். மேற்படி பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கணனித்துறை சார்ந்த உயர்ந்த பதவிகளையுடைய வேலை வாய்ப்புக்களைத் தட்டிக் கொள்வதோடு மட்டுமல்லாது சர்வதேச தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பினை மூன்றாம் வருடத்தில் நேரடியாகவே இணைந்து தொடரமுடியும்.

**IIS City Campus இனால் வழங்கப்படும் HND கற்கைநெறிகள்**

1. Higher National Diploma in Computing
2. Higher National Diploma in Software Engineering
3. Higher National Diploma in Business IT

**IIS City Campus இல் உங்களுக்கான வசதிகள்**

1. உள்நாட்டு, வெளிநாட்டு பட்டதாரிகளின் விரிவுரைகள்
2. நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட ஆய்வு கூடங்களும் விரிவுரை மண்டபங்களும்
3. முற்றிலும் புதிய வெளியீடுகளைக் கொண்ட நூலக வசதி
4. மாணவர்களின் திறமையும் ஆளுமையும் வளர்வதற்கான மாணவர் மன்றம்
5. இலகு தவணைமுறையில் அமைந்த கட்டண வசதி
6. இலவச ஆங்கில மொழிப்பயிற்சி (IELTS)
7. வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
8. வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்



கல்வியாண்டு 2005 இல் HND பட்டம் பெற்று வெளியேறிய 1வது பிரிவு மாணவர்கள்

### வெளிநாட்டில் கல்வியைத் தொடரலாம்

IIS City Campus நிறுவனத்தில் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) இறுதியாண்டு மாணவனாகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு IIS City Campus நிறுவனம் ஒழுங்கினை மேற்கொண்டு வருகின்றது. இதன்மூலம் பொருளாதார ரீதியாகவும் நன்மையடைய முடியும்

### தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்

IIS City Campus நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப் படுகின்றன. அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களுக்கு பிரிட்டனில் உள்ள பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 25.01.2006**

BIT

### DEGREE OF BACHELOR OF INFORMATION TECHNOLOGY UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING

கொழும்புப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மேற்படி கணனித்துறைப் பட்டக்கல்வியானது இலங்கையில் தகவல் தொழில்நுட்ப தொழில்சார் வல்லுநர்களை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட கற்கைநெறியாகும்.

இலங்கையில் இக்கற்கைநெறியினை நடாத்தும். முன்னணி நிறுவனங்களில் IIS City Campus உம் ஒன்றாகும். வடக்குக் கிழக்கில் முதன்மை வாய்ந்த நிறுவனம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

Sikkim Manipal University

### Master of Business Administration (MBA)

IIS City Campus நிறுவனமானது இளமானிக் கற்கைநெறிகளை மட்டுமல்லாது இவ்வருடம் தை மாதம் முதல் முதுமானிக்கற்கை நெறியான MBA (Master of Business Administration) ஐயும் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவின் மிகச் சிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றான Sikkim Manipal பல்கலைக்கழகத்தின் மேற்படி MBA கற்கை நெறியினை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

IIS City Campus நிறுவனமானது Sikkim Manipal இன் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையமாகும். அதுமட்டுமல்லாது MBA கற்கை நெறியானது உள்வாரிக்கற்கை நெறியும் ஆகும்.,

குடாநாட்டில் உள்ள துறைசார் வல்லுநர்கள் இக்கற்கைநெறியை எமது நிறுவனத்தில் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**
**புதிய பிரிவுகள் ஆரம்பம் :21.01.2006**

# FOCUS ON YOUR FUTURE

By Joining with

50 % OFF

## The Leading INDIAN IT College


For O/L Students



## GLOBAL VILLAGE COMPUTER EDUCATION

(A Unit of Global Media Tech - India)

FREE Study Materials



Don't be left behind - make sure you have the skills that employers need.

Why We Are Different From Others?


- Collaboration With INDIA and UK.
- Professional Qualified Lecturers
- Well Equipped Computer Labs
- Unlimited Practical Hours &
- Standard Course Materials
- Frequent Update of Courses
- Island wide Branches
- 100% Practical Approach

**PROFESSIONAL TRAINING COURSES**

- DIPLOMA IN OFFICE AUTOMATION
- DIPLOMA IN COMPUTE APPLICATION
- DIPLOMA IN WEB DESIGNING
- DIPLOMA IN ENGINEERING DRAWING
- DIPLOMA IN DESKTOP PUBLISHING
- DIPLOMA IN HARDWARE ENGINEERING
- DIPLOMA IN MULTIMEDIA
- DIPLOMA IN E-COMMERCE

புதிய பிரிவுகள் அனைத்தும் எதிர்வரும்

06-01-2006 முதல் ஆரம்பம்!



வார, வார இறுதி, மாலை, இரவு நேர வகுப்புக்கள்!

பிரத்தியேக, குழு வகுப்புக்கள்!

**Our Affiliations**

IMIS UK

Tally

VTC

Quality Education @ Affordable Price

**PROGRAMING LANGUAGES**

- Visual Basic
- Visual Basic.Net
- Java
- C++
- ASP.Net
- C#

Tally Computerized Accounting

POWER OF SIMPLICITY

INTERNET & E-MAIL 1WEEK 1000/-

GLOBAL KIDS Stage 1 and 2



98% FIRST TIME PASS RATE

விபரங்களுக்கும், விசாரணைகளுக்கும் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

Jaffna District Franchise

eTouch COMPUTER SYSTEM

"The right way to touch IT"

142 Centres in All over Tamilnadu

UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA, SRI LANKA

Phone: 021 4590222 E-Mail: etouch@wow.lk Web: globalvillage-lanka.com



# Patrician Institutes

## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

### ஆரம்பம் : 05.01.2006

| | |
|---|---|
| I. A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION 1 YEAR |
| B. DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION 6 MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATION 6 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. | DURATION 3 MONTHS |
| G. INTERNET & E - MAIL | DURATION 1 MONTH |
| H. DIPLOMA IN INTERNET TECHNOLOGY | DURATION 5 MONTHS |

வாகனத் தகுதிச் சான்றிதழ் 2006

2006 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் தை மாதம் தொடக்கம் வழங்கப்படும் என்பதனை அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**II. CERTIFICATE COURSES**

1. MS WORD - 2000
2. MS EXCEL - 2000
3. MS ACCESS - 2000
4. MS POWER POINT
5. VISUAL BASIC VER 6.5
6. PASCAL
7. d BASE III +
8. PAGE MAKER
9. WINDOWS 95
10. COREL DRAW
11. d BASE FOR WINDOWS
12. PHOTO SHOP DELUX
13. ADOBE PHOTO SHOP
14. QUICK BOOK

EACH 3 MONTHS

| | |
|---|---|
| III. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (Pitman London Exam Paper மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| மோட்டார் வாகனம் திருத்துதல் ( Petrol & diesel வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் |
| ஜெனரல் எலக்ரிஸன் (மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி (On the Job Training ) வழங்கப்படும் | காலம் 3 மாதங்கள் |
| மின் ஒட்டுநர் பயிற்சி (ARC Welding & Gas welding) ( On the Job Training) வழங்கப்படும் | காலம் 6 மாதங்கள் |
| மர வேலை (with use of machinary)( On the Job Training) | காலம் 6 மாதங்கள் |
| குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |
| PLUMPING | காலம் 6 மாதங்கள் |
| MASONARY | காலம் 6 மாதங்கள் |

குறிப்பு :

1. பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மாணவர்கள் ஆதாரங்காட்டி பங்குக் குருவானவரின் ( Parish Priest ) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெறலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எமது நிறுவனத்தில் வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும். அத்துடன் சகல விதமான இரும்புசார் உற்பத்திப் பொருட்களும், ஒட்டு வேலைகளும் மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவுமூலம் ஓடருக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு :

**REGISTRAR**
**PATRICIAN INSTITUTE**
**59, ST. PATRICK'S ROAD, JAFFNA**

T. P No : 021 222 6148 Fax : 021 222 6148

E - Mail : SPitee@Sltnet.lk